பக்கங்கள் : பதினாறு


Registered as a Newspaper

# உதயன்


விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 07 செவ்வாய்க்கிழமை (23.08.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :270







களமுனை ஆசிரியர் பயிற்சி நிறைவு நிகழ்வில் தலைவர் பிரபாகரன் மாவீரர்களுக்கு மலரஞ்சலி செலுத்துவதையும் அவர் பரிசில்கள், சான்றிதழ்களை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## களமுனை ஆசிரியர் பயிற்சியின் நிறைவு நிகழ்வில் தலைவர் பிரபா

தமிழீழ விடுதலைப் புலிகளின் லெப். கேணல் ராஜன் கல்விப் பிரிவின் களமுனை ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி நிறைவு நிகழ்வில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் பங்கு கொண்டு சிறப்பித்துள்ளார்.

ராஜன் கல்விப் பிரிவின் மகளிர் பொறுப்பாளர் ஜெயந்தி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பயிற்சி நெறியை நிறைவு செய்த போராளிகளுக்கான சான்றிதழ்களும், பல வேறு துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களுக்கான பரிசில்களும் தலைவர் பிரபாகரனால் வழங்கப்பட்டன. அத்துடன், இப் பிரிவில் தொடர்ந்து பணியாற்றிய ஆசிரியர்கள், மற்றும் கற்பித்த ஆசிரியர்கள் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் கருத்துரையாற்றிய தலைவர் பிரபாகரன்-களமுனை ஆசிரியர்களின் பணியின் முக்கியத்துவம் பற்றியும், குறித்த ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட வேண்டிய ஏனைய பணிகள் பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார்.

நிகழ்வில் விடுதலைப் புலிகளின் அரசில்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், வடமுனைக் கட்டளைத்தளபதி (16ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பு வெள்ளியன்று!

## விசாரணைகள் நேற்று முடிவு

கொழும்பு, ஓகஸ்ட் 23

**பெரும் சர்ச்சைக்குள்ளான ஜனாதிபதித் தேர்தல் எப்போது என்பது குறித்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பை வெளியிடவுள்ளது. ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினரான வண. ஓமல்பே சோபித தேரர் தாக்கல்செய்த அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணைகள் நேற்று நடைபெற்று முடிந்ததை அடுத்து தீர்ப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.**

ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடமா, அடுத்த வருடமா என்பதில் பெரும் சர்ச்சை ஏற்பட்டதை அடுத்து தேர்தலை இந்த வருடமே நடத்த உத்தரவிடக்கோரி ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் சார்பில் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அதனை விசாரணைக்கு ஏற்றுக்கொண்டது உயர் நீதிமன்றம்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## படுகொலைகளைக் கண்டித்து ஜே.வி.பி. இன்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஓக. 23

சமாதான ஒப்பந்தத்தை சாதகமாகப் பயன்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவரும் படுகொலைகளை உடனடியாக நிறுத்தவேண்டும் எனக்கோரி ஜே.வி.பியினர் கொழும்பில் இன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக பிற்பகல் 3 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்த ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

'சுடர் ஒளி', 'உதயன்' ஆகியவற்றின் வெள்ளவத்தைக் காரியாலயத்தினுள் கைக்குண்டு வீசப்பட்டதை சுதந்திர ஊடக இயக்கம் கண்டித்துள்ளது.

இவ்வமைப்பு விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'உதயன் - சுடர் ஒளி' ஊடகத்துறையில் முக்கிய பங்கை ஆற்றிவருகின்றன. சமாதானச் செயற்பாட்டுடன் தொடர்பான தமிழர் நிலைப்பாடு மற்றும் மறைந்து கிடக்கும் தமிழ்த் தேசியப் பார்வையை அப்பத்திரிகைகள் வெளிக்கொணர்கின்றன.

அவற்றின் வெள்ளவத்தைக் காரியாலயத்தினுள் இனந்தெரியாதவர் நுழைந்து கிரனேட்டை வீசியுள்ளார். இதனை சுதந்திர ஊடக இயக்கம் கண்டிக்கிறது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலி உறுப்பினர் கோபியின் விளக்கமறியல் மேலும் நீடிப்பு

கொழும்பு,ஓக.23

கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் கோபியை எதிர்வரும் 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடத்தி வெட்டிக் கொல்லப்பட்ட யாழ்ப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் கிரனேட் வீச்சு!

திருகோணமலையில் நேற்றிரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற கிரனேட் தாக்குதலில் ஒருவர் காயமடைந்தார்.

புல்மோட்டை வீதியில் மூன்றாம் கட்டை இராணுவ முகாமிற்கு அருகே காவலில் ஈடுபட்டிருந்த பொலீஸார்மீது இனந்தெரியாதவர்கள் கிரனேட் வீசினர். அது வெடித்ததில் அங்கு நின்றிருந்த பொதுமகன் ஒருவர் காயமடைந்தார். (ஓ-13)

## வெளிவிவகார அமைச்சராக அநுரா நேற்று பதவியேற்றார்

கொழும்பு, ஓக.23



ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சகோதரரும் சுற்றுலாத்துறை மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சருமான அநுரா பண்டார நாயக்க நேற்று வெளிவிவகார அமைச்சராக உத்தியோகபூர்வமாகப் பதவியேற்றுக் கொண்டார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு அநுரா பண்டார நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க இதுவரை கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் சுற்றுலாத்துறைகள் அமைச்சராகக் கடமையாற்றி வந்தார். தற்போது (16ஆம் பக்கம் பார்க்க)

## பாரீஸில் விபத்து: தமிழ்ப் பெண்ணும் குழந்தையும் பலி!

பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் நேற்று இடம்பெற்ற விபத்தில் புலம்பெயர்ந்த ஈழத்தமிழ்ப் பெண்மணியும் அவரது 3 வயது குழந்தையும் உயிரிழந்தனர்.

சுஜாதா நடராஜா என அடையாளம் காணப்பட்டுள்ள மேற்படி பெண்மணி வீதியோர உணவகத்தில் குழந்தையுடன் அமர்ந்திருந்தார் என்றும் -

அப்போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வேகமாக வாகனம் ஒன்று உணவகத்

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரச சமாதானச் செயலக அதிகாரியுடன் கண்காணிப்புக் குழுத் தலைவர் சந்திப்பு

கொழும்பு, ஓக 23

போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை செம்மையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் நேற்றுப் பிற்பகல் அரச சமாதான செயலகப் பதில் பணிப்பாளர் ஜோன் குணரட்னவுடன் முக்கிய பேச்சுகளை நடத்தியுள்ளார்.

அரச சமாதானச் செயலகத்தில் சுமார்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கான ஏற்பாடுகள் குறித்து நோர்வேத் தூதர் அரச தரப்புடன் பேச்சு


கொழும்பு, ஓக.23

போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செம்மையாக நடைமுறைப்படுத்துவது பற்றி அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறவுள்ள நேரடிப் பேச்சுகளுக்கான ஏற்பாடுகள் குறித்து நோர்வேத் தூதுவர் அரச சமாதான செயலகத்துடன் முக்கியமான பேச்சுகளை நடத்தியிருக்கின்றார்.

நேற்றுக் காலை அரச சமாதானச் செயலகத்

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவத்தையொட்டி தியாகி திலீபன் நினைவுத்தூபி அருகே தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேசத் தொடர்பகத்தால் நடத்தப்படும் கண்காட்சி நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. அதில் மாவீரர் கேணல் கிட்டு வரைந்த ஓவியங்கள் சர்வதேச ரீதியில் வெளியிடப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள், இறுவெட்டுக்கள், ஒலி, ஒளி நாடாக்கள் மற்றும் புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:- நேசன்)

# ஆயுதப்படைகளுக்குரிய அவசரகால அதிகாரங்கள்

கொழும்பு,ஒக.23

கடந்தவாரம் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால நிலையில் ஆயுதப்படைகளும் பொலீஸாரும் சந்தேகத்திற்குரிய எவரையும் கைதுசெய்யவும் காவலில் வைக்கவும் அதிகாரம் பெற்றுள்ளனர்.

இவ்வாறு செய்வதற்கு பிடி ஆணை அவசியமில்லை. எந்த வாகனத்தையும் சோ[illegible]க்கவும் கைப்பற்றவும் எடுத்துக் கொள்ளவும் பாதுகாப்பில் [illegible]கவும் அதிகாரம் உண்டு. ஒரு நபரை இவ்வாறு 90 நா[illegible]வரை காவலில் வைத்திருக்க அவர்களுக்கு அதிகாரம் உ[illegible]

கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்களைக் குறிப்பிட்ட காலத்திற்குத் தடைசெய்யும்படியும் ஆயுதப் படைகளுக்கு ஜனாதிபதியால் உத்தரவிடமுடியும்.

பிரசுரங்களை, பத்திரிகைகளைத் தணிக்கை செய்வதற்கான தகுதி பெற்ற அதிகாரி ஒருவரை நியமிக்கவும் ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு.

துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதையும் சுவரொட்டிகளைப் பொது இடங்களில் ஒட்டுவதையும் இது அடக்கும்.

பொய்யான அறிக்கைகளை வெளியிடுவது, வதந்திகளைப் பரப்புவது, பாதுகாப்பு மற்றும் தற்காப்பு சம்பந்தமான ஆவணங்களை வெளியிடுவது ஆகியவற்றைத் இந்த அதிகாரத்தின்கீழ் அடங்கும். (ப)

# அவசரகால நிலையின் கீழ் கொழும்பில் 800 தமிழர்கள் கைதாகி விசாரணை

கொழும்பு, ஒக.23

நாட்டில் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் சுமார் 800க்கும் அதிகமான தமிழர்கள் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் குறிப்பிட்ட சிறு எண்ணிக்கையினர் மட்டுமே தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினமிரவு மத்திய கொழும்பு மற்றும் கிராண்ட்பாஸ், கொம்பனித்தெரு போன்ற இடங்களில் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது சுமார் இருபதுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். எனினும், இது தொடர்பான சரியான விவரங்களைத் தர அதிகாரிகள் பின்னடித்தனர். கொம்பனித் தெருவில் 3 பெண்களும், சென்றல் வீதியில்இராணுவச் சீருடையுடன் இருந்தார் எனக் கூறப்படும் தமிழ் இளைஞர் ஒருவரும் கைதானவர்களில் அடங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் அதிகளவில் வெளிமாவட்டத்தில் கடமையாற்றும் பொலீஸாரே தேடுதல்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இதனால் கைதானவர்கள் பற்றிய விவரங்களை உரிய பொலீஸ் நிலையங்களில் இருந்து பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

புலனாய்வுப் பொலீஸார், இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் எனப் பல தரப்பினரும் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அவசரகாலச் சட்டம் அமுலில் இருப்பதால் கைது செய்யப்படுபவர்களை நீண்டகாலம் தடுத்து வைத்து விசாரிப்பதற்குப் பாதுகாப்பு படையினருக்கு அதிகாரம் உண்டு. இதன் காரணமாக உரிய விவரங்களைச் சம்பந்தப்பட்ட தரப்பினரும் தரமறுத்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-க)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஒக.23

தெல்லிப்பழை, பன்னாலை வரத்தலம் கற்பகவிநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 2ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 3ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

திருவிழாக் காலங்களில் 'சைவ சமய வாழ்வும் வழிபாடும்' என்ற தலைப்பில் சைவப்புலவர் கலாபூஷணம் சு.செல்லத்துரை தொடர்சொற்பொழிவாற்றுவார். (203)

* * *

யாழ்ப்பாணம்,ஒக.23

வண்ணார்பண்ணை, காட்டுத்துறை அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகதின மணவாளக்கோல விழாவும், அஷ்டோத்தரசத சங்காபிசேகமும் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறவுள்ளன.

மாலை 7 மணிக்கு வசந்த மண்டப விசேட பூசையைத் தொடர்ந்து திருவூஞ்சல் நடைபெற்று விநாயகப் பெருமான் தெருவீதியுலா வருவார். (எ-203)

## ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்தின்

# பத்திரிகையாளர் மன்றம் அமைக்கும் நடவடிக்கைகளுக்கு ஆட்சேபனை

யாழ்ப்பாணம்,ஒக.23

யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயற்படும் ஊடகவளங்கள் பயிற்சி மையத்தில் பத்திரிகையாளர் மன்றம் அமைப்பது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

இது குறித்து யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸுக்கு அச்சங்கம் கடிதம் ஒன்றை ஊடக வளங்கள் பயிற்சி நிலைய இணைப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஊடாக அனுப்பியுள்ளது.

அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டு ஊடகவியலாளர்களினது மேம்பாட்டிற்கென டென்மார்க் அரசின் உதவியுடன் யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயற்பட்டு வரும் ஊடகவளங்கள் பயிற்சி நிலையம் பத்திரிகையாளர் மன்றம் ஒன்றினை நிறுவ மேற்கொள்ளும் நடவடிக்கை குறித்துப் பலத்த சந்தேகம் எழும்பியுள்ளது.

போதிய திட்டமிடல்கள், ஆலோசனைகள் ஏதுமின்றி அமைக்கப்படும் பத்திரிகையாளர் மன்றம் தமிழ்த்தேசியத்திற்கு எதிரான சக்திகளிற்கு மேடை அமைத்துக்கொடுக்கவும், பொய்ப் பிரசாரங்களை முன்னெடுக்கவுமே வழிகோருமென்பதில் வேறு கருத்து இருக்க முடியாது. ஆகவே, பத்திரிகையாளர் மன்றம் தொடர்பில் பின்வரும் கோரிக்கைகளை எமது சங்கம் முன்வைக்கின்றது.

வடபுலத்திலிருந்து வெளிவரும் உதயன், யாழ். தினக்குரல், ஈழநாதம், நமது ஈழநாடு மற்றும் வலம்புரி பத்திரிகைகளது ஆசிரிய பீட பிரதிநிதிகள் மற்றும் பத்திரிகையாளர் சங்கப் பிரதிநிதிகளை உள்ளடக்கி நிறுவப்படும் ஆலோசனைக் குழுவின் சிபார்சின் அடிப்படையில் பத்திரிகையாளர் மன்றத்தை நிறுவுவது பற்றி முடிவுசெய்யப்படவேண்டும். அதுவரை தற்போது முன்னெடுக்கப்படும் பணிகள் இடைநிறுத்தப்படவேண்டும்.

யாழ். பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டமைப்புகளுள் சிக்குண்டிராத, சுயாதீன அமைப்பாக இது செயற்படவேண்டும்.

ஊடகங்களுடனும், துறைசார் ஊடகவியலாளர்களுடன் உறவுகளைச் சீராகப் பேணக்கூடியவர்களாகவும், ஆலோசனைக்குழுவால் சிபார்சு செய்யப்படும் ஆளணியே இதற்கு நியமிக்கப்படவேண்[illegible]ம்.

இவ்வடிப்[illegible]டை அம்சங்கள் நிறைவேற்[illegible] வரை பத்திரிகையாளர் மன்றம் [illegible]டர்பாக எந்தவொரு நிர்வாக செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படக் கூடாது.

இவ்விடயம் தொடர்பான தங்கள் எழுத்துமூலமான பதிலை எதிர்வரும் 24ஆம் திகதி (நாளை) புதன்கிழமைக்குள் எதிர்பார்க்கிறோம். தவறுமிடத்து எங்கள் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும் வரை அடுத்த நாளான 25ஆம் திகதி வியாழக்கிழமை முதல் ஊடகவளங்கள் பயிற்சி மையத்தின் பணிகளை முடக்கி தொடர்மறியல் போராட்டத்தில் குதிப்பதென்ற முடிவையும் அறியத் தருகின்றோம் - இவ்வாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தரிடம் நேற்றிரவு தொடர்புகொண்டு கேட்டபோது, வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் அனுப்பியதாகக் கூறப்படும் கடிதம் எதுவும் தனது பார்வைக்கு அதுவரை கிடைக்கவில்லை என்று தெரிவித்தார்.

# 'உதயன்' - 'சுடர் ஒளி' அலுவலகம் தாக்கப்பட்டதைக் கண்டிக்கிறார்கள்

## உண்மைகளை ஜீரணிக்காதோரின் கோழைத்தனமான செயல்....

### கடற்றொழிலாளர் சங்க சமாசம் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஒக.23

உண்மைகளை ஜீரணிக்கமுடியாத தமிழர் விரோத செயற்பாட்டாளர்களின் கோழைத்தனமான செயலே 'உதயன் - சுடர் ஒளி' பத்திரிகைகளின் அலுவலகம் மீதான தாக்குதலாகும்- இப்படித் தெரிவித்துள்ளது, வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம்.

'உதயன் - சுடர் ஒளி' பத்திரிகைகளின் கிளை அலுவலகம் மீது கொழும்பில் நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்மேளனத்தின் சார்பில் அதன் தலைவர் எஸ்.தவரட்ணம் விடுத்துள்ள அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'உதயன் - சுடர் ஒளி' பத்திரிகைகள் தமிழ் மக்களின் அபிலாஷைகளை துணிச்சலோடு வெளிப்படுத்திவருகின்றன. அவை பேரினவாதிகளினதும் அவர்களின் அடிவருடிகளினதும் தமிழர் விரோதச் செயல்களை வெளிச்சம் போட்டுக்காட்டின. இந்த உண்மைகளை ஜீரணிக்கமுடியாதவர்கள், இவ்வாறான கோழைத்தனமான செயலை மேற்கொண்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள், ஊடகங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் கடும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளனர். ஊடகங்களை மௌனிகளாக்க நினைக்கும் அவர்களின் எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது.

ஜனநாயகம் பாதுகாக்கப்படவேண்டுமாயின் ஊடக சுதந்திரம் பேணப்படவேண்டும். இது மக்களின் அடிப்படை உரிமையுமாகும். ஒட்டுமொத்த மக்களின் நலனையும்புறந்தள்ளியவர்களே இவ்வாறான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். தாக்குதலாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள்மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டியது மிக அவசியமானதாகும்.

ஊடகங்கள் அச்சுறுத்தப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு அவசர நடவடிக்கைகள் மேலும் தேவைப்படுகின்றன என்பதை இத்தாக்குதல்கள் மேலும் வலியுறுத்துகின்றன - இப்படி அந்த அறிக்கையில் உள்ளது. (ஐ-9)

## கியூடெக், கரித்தாஸ் அமைப்பும் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஒக.23

தலைநகரில் 'உதயன் - சுடர் ஒளி' கிளைப் பணிமனை மீது கிரனேட் வீசப்பட்ட சம்பவத்தை யாழ். மறை மாவட்ட மனித முன்னேற்ற நிலையமும் (கியூடெக்), கரித்தாஸ் அமைப்பும் கண்டித்திருக்கின்றன.

இந்த அமைப்புகளின் சார்பில் இயக்குநர் அருட்திரு. கி.ஜோ.ஜெயக்குமார் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

'சுடர் ஒளி - உதயன்' காரியாலயம் கொழும்பில் தாக்கப்பட்டமை குறித்த பெரும் அதிர்ச்சியும் அதிருப்தியும் அடைந்துள்ளோம்.

பேனா சுதந்திரத்தைப் பேனாவினாலேயே எதிர்கொள்ள வேண்டுமேயொழிய பலாத்காரத்தினாலோ, வன்முறையினாலோ மேற்கொள்வது ஜனநாயக முறைக்கு முரணானது. இவ்வாறான மீறல்கள் எங்கு நடந்தாலும் யாருக்கு நடந்தாலும் செய்தவர்கள் யாராக இருந்தாலும் அதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். ஜனநாயக மனித உரிமைகளுக்காக ஒன்றுபட்டு உழைப்போம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## உதயன் மீதான முந்திய தாக்குதல்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்காததன் விளைவு இது

யாழ்ப்பாணம்,ஒக.23

'உதயன்' மீது முன்னர் நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால் இப்போதைய தாக்குதல் இடம்பெற்றிருக்கமாட்டாது. இப்படித் தெரிவித்திருக்கிறது சமாதான மனித உரிமைப் பண்பாட்டுப் பணியகம்.

சமாதான, மனித உரிமைப் பண்பாட்டுப் பணியகத்தின் (செப்பாக்) தலைவர் வண.பிதா அ.இ.பேணாட் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கொழும்பில் 'உதயன் - சுடர் ஒளி' கிளைப் பணிமனை மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத்தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

உதயன் மீதும், அதனுடைய பணியாளர்கள் மீதும் இவ்விதமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது இதுவல்ல முதன்முறை. முன்னர் நடந்த சம்பவங்களுக்கு காத்திரமான, காரியசாத்தியமான நடவடிக்கையை எடுத்திருந்தால் இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெற்றிருக்கமுடியாது.

அரசு குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தகுந்த நடவடிக்கை எடுப்பதன்மூலம், ஜனநாயகத்தின் முக்கிய மதிப்பீடுகளில் ஒன்றாகிய ஊடக சுதந்திரத்தையும், ஊடகவியலாளர்களின் பாதுகாப்பையும் அது உறுதிப்படுத்தவேண்டுமெனக் கேட்டு நிற்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஊடகங்கள் மீதான தாக்குதல் ஜனநாயகத்தின் மீதான அடியே!

### ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம்

யாழ்ப்பாணம்,ஒக.23

ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் நடத்தப்படுகின்ற தாக்குதல்களை ஜனநாயகத்தின் மீதும் அடிப்படை உரிமைகள் மீதும் நடத்தப்படுகின்ற தாக்குதல்களாகவே கருதவேண்டும். - இப்படித் தெரிவித்திருக்கிறது ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம்.

'உதயன் - சுடர் ஒளி' கிளைப் பணிமனைமீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக அந்த அமைப்பு மேலும் தெரிவித்திருப்பதாவது:- அண்மைக்காலமாக எமது நாட்டில் ஊடகத்துறையினர் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருவதனையிட்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்த விரும்புகிறது.

திருமதி ரேலங்கி செல்வராஜா அவரது கணவருடன் படுகொலை செய்யப்பட்டார் என்ற செய்தி பிரசுரிக்கப்பட்ட 'மை' காயும் முன் சுடர் ஒளி - உதயன் பத்திரிகைகளின் இணைக் காரியாலயம் மீது கைக்குண்டு எறியப்பட்ட நிகழ்வு அதிர்ச்சியைத் தருகிறது. ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் நடத்தப்படும் தாக்குதல்களை ஜனநாயகத்தின் மீதும், அடிப்படை உரிமைகள் மீதும் நடத்தப்படும் தாக்குதல்களாகவே முஸ்லிம் மீடியா போரம் கருதுகிறது.

ஆகவே, சுடர் ஒளி - உதயன் இணைக் காரியாலயத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை முஸ்லிம் மீடியா போரம் வன்மையாகக் கண்டிக்கிறது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இரண்டாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்; ஆசிய லெவன் அணி 17 ஓட்டங்களால் வெற்றி

டர்பன்,ஓக.23

ஆபிரிக்க லெவன் அணிக்கு எதிரான இரண்டாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 17 ஓட்ட வித்தியாசத்தில் ஆசியா லெவன் அணி வெற்றியீட்டியது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற முதல் ஆட்டத்தில் 2 ஓட்டங்களில் ஆசியாவை வென்றது ஆபிரிக்கா.

இதுவரை இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியைப் பெற்று சமநிலையில் இருந்தன.

முதலாவது ஆபிரிக்கா - ஆசியா கோப்பை கிரிக்கெட் தொடரின் இரண்டாவது ஆட்டம் தென்னாபிரிக்காவின் டர்பனில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆசிய லெவன் அணி 50 ஓவரில் 7 விக்கெட் இழப்பில் 267 ஓட்டங்களைக் குவித்தது.

இலங்கையின் சங்க்க்கார 61 ஓட்டங்களையும், ஜயவர்த்தன 52 ஓட்டங்களையும், பாகிஸ்தானின் யுஹானா 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

கென்யாவின் ஒடோயோ 3 விக்கெட்டுக்களையும், சிம்பாப்பேயின் ஸ்ட்ரீக் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

அடுத்து களமிறங்கிய ஆபிரிக்க லெவன் அணி 49.2 ஓவரில் சகலவிக்கெட்டுக்களையும் இழந்து 250 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

டிகோலோ 43 ஓட்டங்களையும், வியர்ஸ், கெம்ப் ஆகியோர் தலா 39 ஓட்டங்களையும் பெற்றனர்.

கான் 3 விக்கெட்டுகளையும் அக்தர் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். (203)



சுண்டுக்குளி கிறின்பீல்ட் விளையாட்டுக் கழகத்தின் 47 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற 25 கிலோமீற்றர் ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியில் முதலாவது , இரண்டாவது, மூன்றாவது இடத்தினைப் பெற்றவர்களைப் படத்தில் காணலாம். *(படம்: தமிழினியன்)*

# சுற்றுப்போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஓக.23

இளவாலை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் வெண்புறா விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் சிவகுருநாதன் ஞாபகார்த்த கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாளையும் நாளைமறுதினமும் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

- நாளை புதன்கிழமை பிற்பகல் 4 மணி இளவாலை வெண்புறா வி.க. எதிர் பன்னாலை கணேசன் வி.க.
- மாலை 5 மணி இளவாலை இளம்சுடர் வி.க. எதிர் ஆனைக்கோட்டை வி.க.
- நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி உடுப்பிட்டி சிவகுமாரன் வி.க. எதிர் மட்டுவில் மோகனதாஸ் வி.க.
- மாலை 5 மணி இளவாலை வி.க.II எதிர் சிறுப்பிட்டி ஜனசக்தி வி.க. (190)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.23

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

- இன்று செவ்வாய் பிற்பகல் 3.30 மணி- விபுலானந்தா வி.க. எதிர் வல்வை வி.க.
- நாளை புதன் பிற்பகல் 3.30 மணி - திறீஸ்ரார் வி.க. எதிர் திக்கம் வி.க. (202-190)

# 15 வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி அணி வெற்றி

யாழ்ப்பாணம்,ஓக.23

யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தால் நடத்தப்பட்ட 15 வயதுக்குட்பட்டோருக்கு இடையேயான இரண்டாம் சுற்றுக் கிரிக்கெட் போட்டியொன்றில் யாழ்.மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

யாழ்.மத்திய கல்லூரி அணிக்கும் யூனியன் கல்லூரி அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது.

விளையாட்டு

இதில் சுயதரன், டினேஸ் ஆகியோர் முறையே 24, 22 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரீபன்ராஜ் 6 விக்கெட்டுக்களையும் கோபிகன், மயூரன், தனுஷன் ஆகியோர் முறையே தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 218 ஓட்டங்களைப் பெற்றது.

ஸ்ரீபன்ராஜ், விமலகாந்தன், ஜேம்ஸ் யோன்சன், மயூரன், ஜெனோசன் முறையே 19, 23, 22, 50, 33 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் காந்தசீலன், டினோஸ் 3விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

யாழ்.மத்திய கல்லூரி அணி ஆட்டத்தை இடைநிறுத்தியது. யூனியன் கல்லூரி அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களை இழந்து 113 ஓட்டங் களைப் பெற்றது.

இதில் சுதர்சன், சுயந்தன், டினோஸ் முறையே 24, 31, 19 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் தனுஷன் 2 விக்கெட்டுக்களையும் மயூரன், ஸ்ரீபன்ராஜ், சிவதரன் முறையே தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர். (202-190)

## மரதன் ஓட்டப்போட்டி

யாழ்ப்பாணம்,ஓக.23

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் பொன்விழா ஆண்டை முன்னிட்டு வடமாகாண ரீதியிலான மரதன் ஓட்டப் போட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது. (190)

## சைக்கிள் ஓட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,ஓக.23

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் பொன்விழா ஆண்டினை முன்னிட்டு அங்கத்தவர்களுக்கு இடையிலான சைக்கிள் ஓட்டப்போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி 6 மணிக்கு இடம்பெறவுள்ளது. (190)

## வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கு

வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் தரம் 'சி' இற்கு தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் தமக்குரிய விண்ணப்பப் படிவங்களை யாழ்.பல் கலைக்கழக உடற்கல்வி அலகில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை நாளை 12 மணிக்கு முன்னதாக ஒப்படைக்குமாறும் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி நடைபெறும் எனவும், வலைப்பந்தாட்ட சங்கத்தின் செயலாளர் திருமதி ஜெ.சரவணபவஐயர் தெரிவித்துள்ளார். (த-190)

# விளையாட்டுத்துறை புத்தக வெளியீடு

யாழ்ப்பாணம்,ஓக.23

ஆசிரியர் சு.இளங்கோவன் எழுதிய 'குரும்பசிட்டி மக்களின் விளையாட்டுத்துறை ஓர் ஆய்வு' புத்தக வெளியீட்டு விழா எதிர்வரும் 27ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக சாவகச்சேரி ஜி.ரி.எம்.எஸ்.அதிபர் ந.ஜெயக்குமாரன் கலந்துகொள்வார்.

நூலின் வெளியீட்டுரையை மருத்துவபீட உடற்கல்வி விஞ்ஞான அலகின் இணைப்பாளர் டாக்டர் டி.குணராஜசிங்கமும் நூலின் மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி விஞ்ஞான அலகின் உதவி விரிவுரையாளர் எம் இளம்பிறையனும் நிகழ்த்துவர்.

சிறப்பு நிகழ்வாக குரும்பசிட்டி கலைக்காவிரிமன்றத்தினரின் இசை நடனநிகழ்வும் இடம்பெறவுள்ளது. (202-190)

# இந்தோனேஷிய அச்சே மாநிலத்திலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட துருப்பினர் வாபஸ்

## சமாதான உடன்படிக்கையின் முதற்கட்டம்

ஜகர்த்தா,ஓக.23

இந்தோனேஷியாவின் அச்சே மாநிலத்தில் நிலைகொண்டுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரச துருப்பினர் நேற்றுத் திருப்பியழைக்கப்பட்டனர்.

கடந்தவாரம் அரசுக்கும் அச்சே தீவிரவாதிகளுக்கும் இடையில் பின்லாந்தில் கைச்சாத்திடப்பட்ட சமாதான ஒப்பந்தத்தை தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதென தெரிவிக்கப்படுகிறது.

சுமார் ஆயிரத்து 200 துருப்பினர்கள் கடற்படைக் கப்பல்கள் மூலமாக வட அச்சே மாநிலத்தை விட்டு வெளியேறியுள்ளனர்.

இரு தரப்பினர்களுக்கிடையிலான சமாதான உடன்படிக்கையின்படி இந்த ஆண்டு இறுதிக்குள் அச்சே மாநிலத்தில் நிலைகொண்டுள்ள அனைத்து உள்நாட்டுப் படையினரும் திருப்பியழைக்கப்படுவர்.

அச்சே மாநிலத்தில் போராடிவரும் சுதந்திர அச்சே அமைப்பு அரசியலில் ஈடுபடவும் சம்மதம் தெரிவித்துள்ளது.

சுமார் 29 ஆண்டுகளாக நடைபெற்று வரும் உள்நாட்டு யுத்தம் காரணமாக இது

உலக அரங்கில்

வரையில் சுமார் 15 ஆயிரம் பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த கொடூர யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் சமாதான ஒப்பந்தத்தின் முதற்படியாக இந்த அரச படையினர் திருப்பியழைக்கப்பட்டுள்ளனர் என இராணுவ பேச்சாளர் அஹமட் யானி பசுகி கூறியுள்ளார்.

சர்ச்சைக்குரிய அச்சே மாநிலத்தில் தற்போது 40 முதல் 50 ஆயிரம் வரையிலான பொலீஸ் மற்று இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்.

ஆயிரத்து 200 இராணுவத்தினர் திருப்பியழைக்கப்பட்ட தன் பின்னர், அங்கு நிலைகொண்டுள்ள பொலீஸ் படையினரில் 9 ஆயிரத்து 100 பேர் திருப்பியழைக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

அச்சே மாநிலத்தில் அமைதி, சமாதானம் நிரந்தரமாக ஏற்படும் என படையினர் நம்பிக்கை தெரிவித்தனர். (க-9)




## ஆப்கானிஸ்தானில் குண்டுவெடிப்புகள்

காபூல்,ஓக.23

ஆப்கானிஸ்தானில் இரு வெவ்வேறு இடங்களில் நடத்தப்பட்ட இரு குண்டுவெடிப்புகளில் சிக்கி 6 பேர் கொல்லப்பட்டனர்; 5 பேர் காயமடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

தென் ஆப்கானிஸ்தானில் பாதையோரத்தில் நடத்தப்பட்ட குண்டுவெடிப்பில் சிக்கி4 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர்; 3 பேர் காயமடைந்தனர் என்றும் -

இரண்டாவது குண்டுவெடிப்பு அமெரிக்கத் தூதரகத்துக்கருகில் வெடித்ததில் இரு அதிகாரிகள் காயமடைந்தனர் - என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அரசுக்கு ஆதரவான மதகுரு ஒருவர் தலிபான் தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்தே இந்தக் குண்டுவெடிப்புகள் நிகழ்ந்துள்ளன என தெரிவிக்கப்படுகிறது. (க-9)

# ஈராக் மக்களுக்காக எம்மையே அர்ப்பணித்தோம்

## தன் நண்பனுக்கு எழுதிய கடிதத்தில் சதாம்

அம்மான்,ஓக.23

'நானும் என் குடும்பத்தினரும் ஈராக் பிரஜைகளுக்காகவும் பலஸ்தீன பிரஜைகளுக்காகவும் எம்மையே முழுமையாக அர்ப்பணித்துள்ளோம்' - என ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹூசைன் தன் கைப்பட நண்பருக்கு எழுதிய கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் கையளிக்கப்பட்ட இந்தக் கடிதம் ஜோர்தான் பத்திரிகையான 'அட்டஸ்டோர்' மற்றும் 'அல் - அராப் அல் - யோவ்ப்' ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்கப் படையினரால் ஈராக்கில் இரகசிய சிறையொன்றில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சதாம் ஹூசைன், அவரது கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அன்பையும், பரம்பரையான பழக்க வழக்கங்களையும் கொண்டவர்களாக இருந்த போதிலும் ராஜ விசுவாசமற்ற எமது சமூகம் அழிவை நோக்கி போகிறது.

'எவனொருவன் தனது சொத்துக்களையும், உயிரையும் நாட்டுக்காக அர்ப்பணிக்கின்றானோ அவனுக்கு அந்த நாட்டு மக்கள் சிறிதளவேனும் நன்றி தெரிவிக்கவேண்டும். ஆனால், இந்த சமூகம் அதனை மறந்துவிட்டது. - என இறுதிசெய்துள்ள அந்தக் கடிதத்தில் 'பலஸ்தீனமே நீ நீண்டகாலங்கள் வாழ்க! உன் சமூகத்தை நேசி!' - என்று எழுதியுள்ளார்.

2003 ஆம் ஆண்டு சதாம் அமெரிக்கப் படையினரால் கைதுசெய்யப்பட்டதன் பின்னர் தனது கைப்பட நெருங்கிய சகாவுக்கு எழுதிய முதலாவது கடிதம் இதுவென தெரிவிக்கப்படுகிறது. (க-9)

## வலி.தெற்கில் வீதிகள் புனரமைப்பு

வலி.தெற்கு,ஓக.23

வலிகாமம் தெற்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பல வீதிகள விரைவில் புனரமைக்கப்படவுள்ளன.

மழைகாலம் ஆரம்பமாவதற்கு முன்னர் இவ்வீதிகளைப் புனரமைப்பதற்குப் பிரதேச சபை நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றது. இணுவில் சின்னத்தம்பி புலவர் வீதி, தாவடி ஆரம்ப சுகாதார நிலைய வீதி, சுன்னாகம் செல்லத்துரை வீதி, சுன்னாகம் தில்லைகட்டி வீதி, ஏழாலை கேசாவத்தை நாச்சியபுரம் வீதி என்பனவே புனரமைக்கப்படவுள்ள வீதிகளாகும்.

சுன்னாகம் பொது நூலகத்தைப் புனரமைத்து வர்ணம் பூசுவதற்கும் பிரதேச சபை நடவடிக்கை எடுத்துவருகிறது.

(எ-152)

## கால்நடை வளர்ப்போர் சமாச அலுவலகம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.23

யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் சங்கங்களின் சமாச அலுவலகம் கடந்த சனியன்று திருநெல்வேலி தபால் பெட்டிச் சந்திக்கு அருகில் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

பெயர்ப்பலகையினைத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் க.சங்கர் திரைநீக்கம் செய்துவைத்தார்.

ஐக்கிய நாடுகள் அபி...நிதி நிறுவனத்தின் யாழ். அலுவலகப் ...திதி திருமதி ஞானசிவபாதசுந்தரம் நா...வ வெட்டி அலுவலகத்தினைத் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து உரைகள் இடம்பெற்றன.

(த-7)

## வாகனப் பரிசோதனை கோப்பாயில் தீவிரம்

கோப்பாய்,ஓக.23

கோப்பாய் பிரதேசத்தின் பல பகுதிகளிலும் குழுவாக வரும் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவுப் பொலீஸார் வாகனப் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முக்கிய சந்திகளில் நாற்புறமும் நிற்கும் பொலீஸார் சகல வாகனங்களையும் நிறுத்தி ஆவணங்களைப் பரிசோதிப்பதுடன், ஆவணங்கள் இன்றி வாகனங்களைச் செலுத்துவோர், தலைக்கவசம் அணியாது பயணிப்போர் மீது சட்ட நடவடிக்கைக்கான பதிவுகளையும் மேற்கொள்கின்றனர்.

இவ்வாறான குழுப் பரிசோதனை அண்மை நாள்களில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(எ-72)

### மணமகள் தேவை

*யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1973 ஆம் ஆண்டு மிருகசீரிடம் 4 ஆம் பாதம் 9 இல் செவ்வாய் கிரகபாவம் குறைந்த கனடாப் பிரஜாவுரிமையுள்ள தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ள மணமகனுக்கு ஏற்ற மணமகள் தேவை.*

தொடர்பு :
**விளம்பர இல.2680,**
**மே/பா உதயன், யாழ்ப்பாணம்.**
(32.21.18.34) (39172)

### HOUSE FOR RENT

COMPLETELY RENOVATED A-9 KANDY ROAD (MAMPALAM JUNCTION) ARIYALAI 15 MINUTES TO JAFFNA TOWN LARGE PROPERTY.

IDEAL FOR NGOs OR PROFESSIONAL PRIVATE TENANTS, AVAILABLE FROM 1st SEPT.

APPLY
604 , NAVALAR Rd., ARIYALAI.

T.P.NO:- 077 9232690 *(39131)(17-45)*

### வீடு வாடகைக்கு

A-9 கண்டிவீதி (மாம்பழம் சந்தி), அரியாலையில் புதிதாகத் திருத்தி அமைக்கப்பட்ட 15 நிமிடத்தில் யாழ். நகரை அடையக் கூடிய பெரும்காணி வசதிகொண்ட வீடு வாடகைக்குண்டு.

அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். மற்றும் உயர்தர உத்தியோகத்தரும் விண்ணப்பிக்கலாம்.

*தொடர்பு:-*
*604, நாவலர் வீதி,*
*அரியாலை.*
*தொலைபேசி* NO.077 9232690
*(39130)(21.18.34)*

### சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
### சாவகச்சேரி
## கிளைக்குழு உறுப்பினர் தெரிவுக்கான மீள் அறிவித்தல்

எமது சங்கத்தின் கிளை இல.08, மலர்மகள் கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக மீண்டும் ஒரு சந்தர்ப்பமளிக்கும் முகமாக எதிர்வரும் (28.08.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளைக்கட்டடத்தில் இக் கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது. இக் கிளைக் குழுத்தெரிவு தொடர்பான அறிவித்தல்கள் தனித்தனியாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இவ்வறிவித்தல்கள் கிடைக்கப் பெறாத தகுதியுள்ள உறுப்பினர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொண்டு தவறாது சமுகமளித்து கிளைக் குழுவைத் தெரிவுசெய்ய உதவுமாறு வேண்டுகின்றோம்.

ந.பாலச்சந்திரன்
தலைவர்.

(39167)
(21-34-18)

சோ.ஸ்ரீதரன்
செயலாளர்.

## 20 ஆண்டுகள் நிறைவு நாள் நினைவுகள்

அன்னை மடியில்
16 - 12 - 1921



ஆண்டவன் அடியில்
03 - 09 - 1985

## அமரர் முருகப்பர் கந்தையா

*திதி: அபரபக்க சதுர்த்தசி*

விழியோரம் நீர் சுரக்க விதியோரம் போகின்றோம்
அப்பா உன் நினைவாக எந்நாளும் வாழ்கின்றோம்

\- குடும்பத்தினர்.

*16, மணிக்கூண்டு ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*
(39179)(21.18.34)


S-Lon என்றால் PVC குழாய்கள்
ஆனால் எல்லா PVC குழாய்களும் S-Lon அல்ல.

## தரமுயர்ந்த எஸ்-லோன் குழாய்களையே கேட்டு வாங்குங்கள்




### எஸ்-லோன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளதை நிச்சயப்படுத்த தவறாதீர்கள்

பரம்பரை பரம்பரையாக மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கும் எஸ்-லோன் பி.வி.சி. குழாய்களும் அவற்றிற்கான பொருத்துக்கள். பீலிகள் முதலிய யாவும் சகல அளவுகளிலும் கிடைக்கின்றன. எனவே, நீங்கள் தரக்குறைவான பொருட்களை வாங்கி ஏமாற வேண்டிய அவசியமே கிடையாது.

உங்களுக்கு நீரக்குழாய்கள், பொருத்துக்கள். பீலிகள் தேவைப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எஸ்-லோனை நாடுங்கள்.

S-Lon
என்றும் முன்னணியில்

S-Lon இல்லம்
நிம்மதியான வாழ்வுக்கு

எஸ்-லோன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட், 7, பிறேபுருக் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 4792630-4 ∴பெக்ஸ்: 5352741

Rediffusion DYR 497/1/04

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் – 222 2030, 222 2083, 222 3837.

# இந்தப் போக்கைத் தொடரவிடலாமா?

கொழும்பில் உள்ள 'உதயன் - சுடர்ஒளி' பத்திரிகைகளின் கிளைப் பணிமனை மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல், ஊடக சுதந்திரத்தின் மீது ஏவப்பட்ட நாசகாரி என்றே கொள்ளப்படவேண்டும். இதனைச் சமூக விரோதிகளின் ஈனச் செயல் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் மிகச் சரியாகக் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் உரிமைகளின் காவல் நாய் என்று வர்ணிக்கப்படுபவை பத்திரிகைகள். ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்றும் அவற்றைக் கருதுவது உண்டு.

ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் மக்களின் அபிலாசைகளுக்கு மாறாக, முரணாகச் செயலாற்றும் போது, அதன் மீது வெளிச்சம்போட்டுக் காட்டி சம்பந்தப்பட்டவர்கள் திருந்த வழிசெய்பவையும் பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களே.

மக்கள் வழங்கிய அதிகாரத்தின் மீது குந்தியிருந்து கொண்டு, மக்கள் நலனுக்கு எதிராகச் செயற்படுவோரை அம்பலப்படுத்துவது ஊடகத்தின் அடிப்படைக் கடமை. மக்கள் நலன்களுக்கு அரசியலாளர்களால், அதிகாரிகளால், சமூகவிரோதிகளால் ஆபத்துகள் உண்டாகும் வேளைகளில் அவற்றைப் புட்டுக்காட்டி, கண்டித்துக் கருத்துச் சொல்வது மக்களை விழிப்புணர்வு கொள்ளச் செய்வதற்காகவே அன்றி வேறு எதற்காகவும் அல்ல.

மக்கள் சார்பில் போராடும் திறன், மக்கள் சக்திக்குச் சமமாகப் பேனாவுக்கு மட்டுமே - பேனாவிடம் மட்டுமே - உண்டு. அதனாலேயே பத்திரிகைகளை - ஊடகங்களை மக்கள் தமது பாதுகாவலர்களாக மதிக்கிறார்கள். தமக்கு இன்னல்கள், கொடுமைகள் இழைக்கப்படும் போது ஊடகங்களை நாடுவதும், அவை அதனை வெளிப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் அதன் பாற்பட்டதே.

மிக அண்மைக் காலமாக ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் தாக்குதல் நடத்துவது இந்த நாட்டில் பெருகிவருகிறது. உண்மைகளைச் சொல்லும்போதும் மக்கள் நலன்களுக்கும் அவர்களது அபிலாசைகளுக்கும் விரோதமானவர்களைச் சுட்டிக்காட்டும்போதும் சம்பந்தப்பட்டவர்கள் திருந்த முயற்சிக்காமல் ஊடகங்களையும் ஊடகவியலாளர்களையும் பழிவாங்க முனைகிறார்கள்; பழிவாங்குகிறார்கள்.

இத்தகைய அராஜகமான, அநீதியான வன்செயல் போக்கு கடந்த சில வருடங்களாகத் தொடர்ந்து தமிழ் ஊடகங்கள் மீதும் தமிழ் ஊடகவியலாளர்கள் மீதும் அடிக்கடி கட்டவிழ்த்துவிடப்படுகிறது. அந்த வரிசையில் வெள்ளவத்தையில் அமைந்துள்ள 'உதயன் - சுடர்ஒளி' கிளைப்பணிமனை மீது கடந்த சனிக்கிழமை கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

உதயனும், சுடர்ஒளியும் சகோதரப் பத்திரிகைகள். அவை முறையே யாழ்ப்பாணத்தையும் கொழும்பையும் தளமாகக் கொண்டு இயங்குகின்றன. தளங்கள் வேறாக இருப்பினும் தமிழ் மக்களின் உரிமைக்குரல்களாக ஒலிப்பவை அவை. உண்மையை வெளிச்சம்போட்டுக் காட்டுவதிலும் தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்துவதிலும் தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவிப்பதிலும் இரண்டுமே உறுதியாக உழைக்கின்றன.

இந்த இரண்டு நாளிதழ்களும் நீதியின்பால் நின்று செய்திகளையும் கருத்துகளையும் துணிச்சலாக வாசகர்களுக்குத் தருபவை. மக்களின் - வாசகர்களின் - அபிலாசைகளைத் துடிப்புடனும் உயிரோட்டத்துடனும் அதே வேளை, ஆணித்தரமாகவும் வெளிப்படுத்த அவை தயங்குவதில்லை.

உண்மையைச் சொன்னதற்காக, தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களை எழுத்தில் வடித்ததற்காக தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை ஆணித்தரமாக எடுத்துக் கூறியதற்காக 'உதயன்' மீது நடத்தப்பட்ட தாக்குதல்களும் அதன் ஊடகவியலாளர்கள் அனுபவித்த இடர்களும் நீண்டவரிசை கொண்டவை..

இப்போது மீண்டும் கொழும்பில், 'சுடர் ஒளி - உதயன்' கிளைப் பணிமனை மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. இதனை வெறுமனே எமது பத்திரிகைகள் மீதான தாக்குதல் என்று தனிமைப்படுத்தி நோக்கமுடியாது. பல தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்ச்சியாகப் படுகொலைசெய்யப்பட்டது, தாக்கப்பட்டது ஆகியவற்றுடனும் சேர்த்து நோக்குவதே பொருத்தம்.

எமது பத்திரிகைகள் மீது இதுவரை நடத்தப்பட்ட தாக்குதல்கள் பற்றியோ, தமிழ் ஊடகவியலாளர்களின் கொலைகள், அவர்கள் மீதான தாக்குதல்கள் குறித்தோ விசாரணைகள் எதுவும் உரியமுறையில் நடைபெறவில்லை. குற்றவாளிகளும் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஆட்சியில், அதிகாரத்தில் உள்ளவர்கள் தமிழ் ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் நலன்களைக் கவனிக்க எத்தனிப்பார்கள் என்று எண்ணத் தோன்றவில்லை.

மொத்தத்தில் இந்நிலை, தமிழ் ஊடகத்துறையை நசுக்கும், அவற்றின் கருத்துச் சுதந்திரத்தைப் பறிக்கும் திட்டமிட்ட செயலே. ஆகையால், தமிழ் ஊடகத்துறையும் ஊடகவியலாளர்களும் தமது மக்கள் நலன்கருதிப் பணியாற்றுவதற்கான, உண்மையைச் சொல்லக்கூடிய சூழ்நிலை தோற்றுவிக்கப்படவேண்டும்.

இது குறித்து மிக ஆழமாகவும் அக்கறையுடனும் இத்துறை சார்ந்தோர் ஒன்றிணைந்து சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய வேளை வந்துவிட்டது.



யாழ். மாவட்டத்தில் குருதிக் கொடை வழங்குபவர்களை ஒன்றிணைத்து குருதிக் கொடையாளர் கழகம் அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவு பொறுப்பதிகாரி டாக்டர் சிவசங்கர் உரையாற்றுவதையும் - யாழ். பிரதி சுகாதாரசேவைகள் பிரதிப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் மற்றும் வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவைச் சேர்ந்த டாக்டர் கே.அகிலன் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்ட குருதிக்கொடை வழங்குபவர்களை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (படங்கள்: பிரபா)

# கதிர்காமரின் பாதுகாப்புக்கு மாதாந்தம் ரூ.12 லட்சம் செலவு

கொழும்பு, ஓக.23

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மறைந்த லக்ஷ்மன் கதிர்காமர் உயிரோடு இருந்தபோது அவரின் பாதுகாப்புக்கு மட்டும் மாதாந்தம் 12 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. 96 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 24 மணிநேரமும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். அவரது பாதுகாப்பு ஆலோசகராக திருமதி சுகந்தி கதிர்காமரின் சகோதரரும் ஓய்வுபெற்ற லெப்டினன்ட் கேணலுமான சரத் ஜயவர்த்தனவே கடமையாற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தனை பாதுகாப்பு ஏற்பாடுகள் இருந்தபோது கதிர்காமர் கொல்லப்பட்டுள்ளார். பாதுகாப்புப் பிரிவினரின் கவனயீனமும், அசட்டையுமே முன்னாள் அமைச்சரின் கொலைக்கு இடமளித்துள்ளது என ஜே.வி.யினரும், அமைச்சர் மங்கள சமரவீரவும் ஏற்கனவே குற்றஞ்சாட்டியுள்ளனர். அதேவேளை, அரசியல் அவதானிகளும் விமர்சித்துள்ளனர்.

மாதாந்தம் பத்தாயிரம் ரூபா வேதனத்துக்கு 40 இராணுவத்தினரும், கொமாண்டோ படைப் பிரிவைச் சேர்ந்த 42 பேரும் அமைச்சரின் பாதுகாப்புக் கடமைக்கென அமர்த்தப்பட்டிருந்தனர். கொமாண்டோ படையினருக்கு 15 ஆயிரம் ரூபா முதல் 20 ஆயிரம் ரூபாவரை சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

இவற்றிற்கு மேலதிகமாக அமைச்சர்களுக்கான விசேட பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த 12 பேர் மாதாந்தம் தலா பத்தாயிரம் ரூபா சம்பளத்தில் கதிர்காமரின் பாதுகாப்புக் கடமைகளுக்காக அமர்த்தப்பட்டிருந்தனர்.

கதிர்காமரின் பாதுகாப்புப் பிரிவு கொமாண்டோக்களை வழி நடத்துவதற்காக இராணுவ கப்டன் மனதுங்க நியமிக்கப்பட்டிருந்தார். இவருக்கு மாதாந்தம் 20ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்பட்டது.

அமைச்சின் பாதுகாப்பு அதிகாரிகளின் வாகனங்களுக்கு மேலதிகமாக 3 'டபிள் கப்' வாகனங்களும், 3 மோட்டார் சைக்கிள்களும் வழங்கப்பட்டிருந்தன. இந்த வாகனங்கள் அனைத்திற்கும் கட்டுப்பாடற்ற அளவு எரிபொருள்களும் விநியோகிக்கப்பட்டன.

முன்னாள் அமைச்சர் கதிர்காமர் எங்கு சென்றாலும் அவரைச் சுற்றி பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டு பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. அமைச்சர் அலுவலகத்திலும் வீட்டிலும் இருக்கும்போதும் இதே பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. பாதுகாப்பு அதிகாரிகள் எப்போதும் அவர் கூடவே இருந்தனர்.

இவ்வளவு பாதுகாப்புகளுக்கும் மத்தியில்தான் கதிர்காமர் கொல்லப்பட்டுள்ளார். இது பாதுகாப்புப் பிரிவினரின் அசட்டையா அல்லது கவனயீனமா என்று அரசியல் அவதானிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். (எ-க)

## உதயவாக்கு

நீ செய்த தவறுகளை வாழ்த்து. அந்தத் தவறுகள் நீ அறியாமலே உனக்கு வழி காட்டும் தெய்வங்களாக இருந்திருக்கின்றன. - சுவாமி விவேகானந்தர்.

## நாளை

ஆவணி 08
புதன்கிழமை
24.08.2005
திதி: பஞ்சமி
பிற்பகல் 03.11 வரை
நட்சத்திரம்: அச்சுவினி
பின்னிரவு: 02.28 வரை
சுபநேரம்: 04.35 - 06.05
ராகுகாலம்: 12.05 - 01.35
(யாவும் பழைய நேரப்படி)

# சுகாதார முறையில் உணவு வழங்குமாறு உணவக உரிமையாளரைக் கோருங்கள்

## பாவனையாளருக்குப் பணிப்பாளர் அறிவுரை

குருநகர்,ஓக.23

யாழ்ப்பாணத்திலுள்ள உணவகங்களில் சுகாதாரமுறையில் உணவுகளை வழங்குமாறு உணவக உரிமையாளர்களைப் பாவனையாளர்கள் கோரவேண்டும். அத்துடன், சுகாதார முறையில் சுகாதார நடைமுறைகளைப் கைக்கொள்ளாமல் வழங்கும் உணவுகளைப் புறக்கணிக்கவேண்டும் என்றும் -


அவ்வாறு சுகாதார முறையைப் பின்பற்றாமல் உணவகங்கள் தொடர்ந்தும் செயற்பட்டால் அந்த உணவகங்களின் பெயர்களை உரிய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் அல்லது யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு அறிவிக்கவேண்டும் என்றும் -

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் பாவனையாளர்களைக் கோரியுள்ளது.

உணவகங்களில் சுகாதாரம், சுத்தம் பேணப்படவேண்டிய முறை, உணவுகள் எவ்வாறு பாவனையாளர்களுக்கு வழங்கப்படவேண்டும், உணவுகளை எவ்வாறு சுகாதார முறையில் பாவனையாளர்களுக்கு வழங்கப்படவேண்டும் என்ற விளக்கங்கள் கடந்த இரு மாதங்களுக்கு மேலாக யாழ். மாவட்டத்தில் இயங்கும் சகல உணவக உரிமையாளர்களுக்கும் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் மேற்பார்வையில் வழங்கப்பட்டுள்ளன.

எனவே, இவைகளைப் பின்பற்றி உணவகங்கள் சுகாதார முறையில் உணவுகளைப் பாவனையாளர்களுக்கு வழங்கவேண்டியது அவசியம் என்றும் -

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-51)



# துறைமுகம் எக்கேடு கெட்டாலும் உயரதிகாரிகளுக்கு சொகுசுக் கார்கள்

திவயின

கொழும்பு,ஓக.23

சிறிலங்கா துறைமுக அதிகார சபை, இரண்டு கோடி ரூபாய்களுக்கும் அதிகமாக செலுத்தி அதன் உயரதிகாரிகள் மூவருக்கு வழங்க மூன்று சொகுசுக் கார்களைக் கொள்முதல் செய்துள்ளது.

'அவுடி' வர்க்கத்தைச் சேர்ந்த இந்த அதி நவீன சொகுசுக் கார்கள் துறைமுக அதிகார சபையின் தலைவருக்கும், உப தலைவருக்கும் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளருக்கும் வழங்கப்பட்டுள்ளன.

துறைமுக அதிகார சபை பெரும் நிதி நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள இச்சந்தர்ப்பத்தில் போதிய அளவில் துறைமுக அதிகார சபை வசம் சொகுசு வாகனங்கள் உள்ளன. எனினும் இவ்வாறு புதிய வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளமை தொடர்பாக அதன் ஊழியர்கள் பெரும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, துறைமுக அதிகார சபையின் தேவையற்ற இக் கொள்முதல் தொடர்பான தகவல்கள் ஊடகங்கள் வாயிலாக வெளிவந்திருப்பதை அடுத்து அதன் நிதிப் பிரிவில் பணியாற்றிய சிலர் துறைமுக நிர்வாக அதிகாரியால் வேறு பிரிவுகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன. அண்மையில் இடம்பெற்றுள்ள கூட்டமொன்றில் வைத்து துறைமுக உயரதிகாரி ஒருவர் மூலம் துறைமுகத் தகவல்கள் ஊடகங்களில் பிரசுரமாவது தொடர்பாக அங்கு பணிபுரியும் ஊழியர்கள் மீது காட்டமாகக் கண்டனக் கணைகள் விடுக்கப்பட்டுள்ளன.

(ஐ-206)

# 20 வகையான ஆடம்பரப் பொருள்களுக்கு பெறுமதிசேர் வரி அதிகரிக்கப்பட்டது

லங்காதீப

கொழும்பு,ஓக.23

. 20 வகையான ஆடம்பரப் பொருள்கள் தொடர்பாக இதுவரையில் அறவிடப்பட்டு வந்துள்ள 18 வீதமான பெறுமதி சேர் வரி கடந்த 2ஆம் திகதிமுதல் 20 வீதம் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, மோட்டார் வாகனங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், வானொலிப் பெட்டிகள், வீடியோ உபகரணங்கள், புகைப் படக் கருவிகள், குளிர்சாதனப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள், மணிக்கூடுகள், மதுபான வகைகள், தங்க நகைகள், சங்கீதக் கருவிகள், விளையாட்டு உபகரணங்கள், இனிப் புச் சுவையுள்ள குடிபான வகைகள், குளிரூட்டும் சாதனங்கள் மற்றும் மின் அடுப்புகள் உட்பட 20 வகையான ஆடம்பரப் பொருள்கள் தொடர்பாக 20 வீத பெறுமதிசேர் வரி அறவிடப்படுமென தேசிய வருமான வரி ஆணையாளர் நாயகம் பீ.பி.டீ.பி. கருணாசேகர தெரிவித்துள்ளார்.




மோட்டார் வாகனங்கள் தொடர்பாக பெறுமதிசேர் வரி 20 வீதமாக அதிகரிக்கப் படவுள்ள போதிலும் மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள், லொறிகள், பாரிய வாகனங்கள் (ட்ரக் வண்டிகள்), பொருள்களை ஏற்றிச்செல்லும் வாகனங்கள் மற்றும் பொதுசன போக்குவரத்துத் தொடர்பான வாகனங்கள் போன்றவற்றிற்கு பெறுமதிசேர்வரி அறவிடப் படமாட்டாதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதைவிடவும் ஹோட்டல்கள் மற்றும் ஓய்வு விடுதிகளில் இடம்பெறும் விழா நிகழ்வுகள் தொடர்பாக இதுவரை அறவிடப் பட்டு வந்துள்ள 18 வீதமான பெறுமதிசேர் வரி 20 வீதமாக அறவிடப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆடம்பரப்பொருள்கள் தொடர்பாக அறவிடப்பட்டுவந்துள்ள 18 வீதமான பெறுமதி சேர் வரி மேலும் 2 சதவீதமாக உயர்த்தப் படுவது தொடர்பான அரச வர்த்தமானி கடந்த 2ஆம் திகதியன்று வெளியிடப்பட்டுள்ளது. (ஐ-206)

## ஜனாதிபதித் தேர்தல் வருவதை முன்னிட்டு

# மீண்டும் ஜே.வி.பி. - சு.கட்சி கூட்டை ஏற்படுத்த முயற்சி

லங்காதீப

வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் ஒருங்கிணைந்து போட்டியிடுவது தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் உத்தியோகபூர்வமற்ற சந்திப்புகள் இடம்பெற்றுவருகின்றன என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இரு கட்சிகளும் மீண்டும் கைகோத்துச் செயற்படவேண்டுமாயின், புதிய ஒப்பந்தமொன்றின் கீழ் ஒருங்கிணையவேண்டுமென்று ஸ்ரீ.ல.சு.கட்சிக்கு ஜே.வி.பி. அறிவுறுத்தியிருப்பதாகவும் தெரியவநதுள்ளது. அத்தோடு, கூட்டு முன்னணியின் பழைய கொள்கைகளுக்குப் பதிலாக புதிய கொள்கைகள் வகுக்கப்படவேண்டும் என்ற யோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த இரு கட்சிகளும் இணையவேண்டுமாயின், அரச சொத்துக்கள் தனியார் மயமாக்கப்படுதல், சுனாமி நிவாரணச் சபை மற்றும் வடக்கு - கிழக்குப் பிரச்சினை தொடர்பாக இரு கட்சிகளும் ஒத்தகருத்தையே கொண்டிருக்கவேண்டுமென்பதும் ஜே.வி.பியின் நிலைப்பாடாக இருப்பதாகவும் தெரியவந்துள்ளது. அத்தோடு புதிய கூட்டணியின் தலைமை பற்றிய தனது கருத்துக்களையும் ஜே.வி.பி. ஸ்ரீ.ல.சு.கட்சி முன் ஏற்கனவே தெரிவித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், இவ்விவகாரங்கள் தொடர்பாக ஜனாதிபதி கொண்டுள்ள கருத்துக்கள் பற்றி தமது கட்சி கவனம் செலுத்தி வருவதாகவும் ஸ்ரீ.ல.சு.கட்சியிடம் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. (ஐ-206)

# மனநோய் வைத்தியசாலைகள் நோயாளரால் நிரம்பி வழிகின்றன

லங்காதீப

கொழும்பு,ஓக.23

நாட்டில் இயங்கும் மனநல மருத்துவமனைகளுக்கு வந்துசேரும் மனநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதும் அவர்களுக்கு சிகிச்சையளிக்க அந்த மருத்துவமனைகளில் போதியளவு வசதிவாய்ப்புகள் இல்லை.

- இவ்வாறு சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிலைப்பாடு காரணமாக அங்கோடை, முன்னேரியாவ மற்றும் ஹெந்தலை ஆகிய இடங்களில் உள்ள மனநல மருத்துவமனைகள் மனநோயாளர்களால் நிரம்பிவழிகின்றன என்று தெரியவந்துள்ளது.

1970ஆம் ஆண்டில் மனத்தாக்கங்களுக்கு உட்பட்டுள்ளோர் ஒரு லட்சம் பேருக்கு 177 பேர் என்ற விகிதாசாரத்தில் சிகிச்சைபெற்று வந்துள்ளபோதும் அந்த எண்ணிக்கை 1995 ஆம் ஆண்டில் 262 ஆக உயர்ந்துள்ளது. 2002 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 222 ஆகும்.

மனநல மருத்துவமனைகள் நிரம்பிவழிவதற்கு மற்றொருகாரணம், நோயாளர்கள் நீண்ட நெடும் காலங்களுக்குச் சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்படுவதாகும். சில நோயாளர்கள் தமது வாழ்நாள் முழுவதும் மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சைபெற வேண்டிய நிலை உள்ளது. சிலவேளைகளில் மனநோயாளர்கள் குணமடைந்தாலும் அவர்களைப் பொறுப்பேற்கும் நபர்களைத் தேடிக் கண்டுபிடிக்கஇயலாது போவதால் மருத்துவமனைகளில் தொடர்ந்தும் அவர்களை வைத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதே இத்தகைய நிலைமைக்குக் காரணமாகியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.(ஐ-206)

**YAP PHONE விற்பனைக்கு**

Internet calls கணனி மூலம் எடுப்பதற்கான உலகத் தரம்வாய்ந்த Net 2 phone தயாரிப்பான Yap phone விற்பனைக்கு உண்டு.

குறைந்தளவே கையிருப்பில் உள்ளன.

T.P.: 021 222 6637, 021 459 1298

Visitalk.net

315 A, Parameswara Junction,

Thirunelvely. (39170) (25-18-34)

# கடந்த ஆண்டு நாடு முழுவதும் 53,458 வீதி விபத்துக்கள்

ராவய

2004 ஆம் ஆண்டில் இடம்பெற்ற வாகன விபத்துக்களின் எண்ணிக்கை 53 ஆயிரத்து 458 ஆகும்.

மோட்டார் போக்குவரத்துப் பொலீஸ் பிரிவின் கணிப்பீடுகள் இத்தகவலை வெளிப்படுத்தியுள்ளன. இவற்றுள் 2 ஆயிரத்து 116 விபத்துக்கள் மிகப் பயங்கரமான வாகன விபத்துக்களாகும். கடும் காயங்களை ஏற்படுத்திய வாகன விபத்துக்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 560 ஆகும். சிறு காயங்களை விளைவித்துள்ள வாகன விபத்துக்களின் எண்ணிக்கை 13 ஆயிரத்து 918 ஆகும். வாகனங்களுக்கு மாத்திரம் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள வாகன விபத்துக்களின் எண்ணிக்கை 32 ஆயிரத்து 864 ஆகும். பெருமளவு வாகன விபத்துக்களான 8 ஆயிரத்து 875 வாகன விபத்துக்களில் பஸ் வண்டிகள் சம்பந்தப்பட்டுள்ளன. பஸ் வண்டிகள் மூலம் ஏற்பட்டுள்ள பயங்கரமான விபத்துக்களின் எண்ணிக்கை 391 ஆகும். அதுபோன்ற பிரயாணிகள் கடும் காயங்களுக்கு உள்ளாகிய பஸ்வண்டி விபத்துக்கள் 772 ஆகும். இதைவிடவும் சிறு காயங்களை ஏற்படுத்தியுள்ள பஸ்வண்டி விபத்துக்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 482 ஆக இருப்பதோடு பஸ் வண்டிகளுக்குப் பாதிப்புக்களை மாத்திரம் ஏற்படுத்தியுள்ள வீதி விபத்துக்களில் 5 ஆயிரத்து 230 பஸ் வண்டிகள் சம்பந்தப்பட்டுள்ளன. (ஐ-206)

# அடுத்த வரவு - செலவுத் திட்டம் நவம்பர் 10 இல் சமர்ப்பிப்பு

லங்காதீப

2006 நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தேசிக்கப்பட்டு வருவதாக நிதியமைச்சின் செலாளர் கலாநிதி பி.பி.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வைத்து அவர் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இடைக்கால அபிவிருத்தியை இலக்காகக் கொண்டதாக இந்த வரவு -செலவுத் திட்டம் தயாரிக்கப் படவுள்ளது. வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிப்பது தொடர்பான ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களைச் சமர்ப்பிக்குமாறு பலதரப்பினரையும் கோரியுள்ளோம். அடுத்த நிதியாண்டுக்கான தத்தமது திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் குறித்த ஆலோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு சகல திணைக்களங்களையும் கோரியுள்ளோம் - என்று தெரிவித்தார்.

(ஐ-205)

**முதலாவது பிறந்ததின வாழ்த்து**



அமெரிக்கா (Newyork) இல் வசிக்கும்
திரு.திருமதி சிறிதரன் - கோமதி
தம்பதியரின் செல்வப் புதல்வி
**செல்வி சர்யோனா**
தனது முதலாவது பிறந்த தினத்தை
இன்று (23-08-2005) செவ்வாய்க்கிழமை
Newyork இல் உள்ள தனது இல்லத்தில்
கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா,
அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா,
அம்மம்மா, மாமாமார், மாமிமார்,
பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா,
சித்தி, தாத்தாமார், பேர்த்திமார்,
சகோதரர்கள், உறவினர்
அனைவரும் பல்லாண்டு
வாழ்ந்து சகல வளமும் பெற்று சிறப்புற
வாழ்த்துகின்றனர்.

செல்வி சர்யோனா

சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

தகவல்: ம.சிறிகாந்தன் (மாமா).

HAPPY BIRTHDAY

(39148)(24-25-18-34)

**திருமணக் கார்** (குளிரூட்டியது)

**வாடகைக்கு**

✦ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
✦ விசேட வைபவங்கள் ✦ சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய [ஆங்கில இலக்கம் கொண்ட] குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.



T.P.: 0777 - 903090, 077-3086939, 0777-246117, 077-6018467. (c/43631)

தொடர்பு: ரட்ணம்,
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22,சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

**கண்ணீர்க் காணிக்கை!**

*எமது சங்க உறுப்பினர்*

அமரர்

**டானியல் வசந்தகுமார் குருஸ்**

*(மருந்துக்கலவையாளர்-அரசினர் வைத்தியசாலை, காரைநகர்)*

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

-அரச மருந்துக் கலவையாளர் சங்க யாழ்.கிளை.

(39169) (25-18-34)

# நலிவடைந்திருக்கும் உற்பத்தித்துறை மேம்பாடடைய விவசாய சம்மேளனங்கள் வழிகாட்ட வேண்டும்

## மாவை சேனாதிராஜா வலியுறுத்து

வலி.தெற்கு,ஓக.23

குப்பிளான் பகுதி நீண்டகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு பகுதி. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இதுபோன்ற கிராமங்கள் பலவற்றில் விவசாயிகளும் விவசாய நிலங்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கு விவசாய சம்மேளனங்களூடாகத் துரித நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா குப்பிளானில் நடைபெற்ற விவசாய சம்மேளனத்துக்கான புதிய கட்டடத்திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்.

சுமார் ஐந்து லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள குப்பிளான் விவசாய சம்மேளனத்துக்கான கட்டடம் சம்மேளனத் தலைவர் எஸ்.கேதீஸ்வரநாதன் தலைமையில் திறந்துவைக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் கட்டடத்தைத் திறந்துவைத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:-



யாழ்ப்பாணம் கமநல சேவைகள் திணைக்களம், விவசாயத் திணைக்களம் என்பன இது போன்று விவசாய சம்மேளனங்களூடாக விவசாய நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கு எடுத்துவரும் நடவடிக்கைகளைப் பாராட்டுகிறேன். விவசாய சம்மேளனங்களை உயிரோட்டமுள்ளவையாக ஆக்குவதன் மூலம் விவசாயிகள் பல நன்மைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களில் விவசாய சம்மேளனக் கட்டடங்களை மட்டும் நிறுவுவதோடு மட்டும் நின்றுவிடக்கூடாது. இப்பகுதிகளில் பாதிக்கப்பட்டுள்ள நீர் நிலைகள் பல புனரமைத்துப் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கவேண்டும்.

செயற்கைப் பசளைகளோடு இயற்கைப் பசளைகளையும் கூடுதலாகப் பயன்படுத்துவதன் மூலம் விவசாயிகள் கூடிய பலனைப் பெறமுடியும். விவசாய சம்மேளனங்களினூடாக விற்கப்படும் பசளைகள், கிருமிநாசினிகள், உரங்கள் போன்ற பொருள்களை விவசாயிகள் பெற்றுப் பலன்பெறவேண்டும்.

நச்சுத்தன்மையுடைய உற்பத்திப்பொருள்களே தற்போது மக்களுக்குக் கிடைக்கின்றன. நச்சுத்தன்மையற்ற ஆரோக்கியமான விவசாயப் பொருள்கள் மக்களுக்குக் கிடைக்க வேண்டும். விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்துவதில் பல பிரச்சினைகள் இருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். இவற்றுக்கெல்லாம் தீர்வு காணப்படவேண்டும் - எனக் கூறினார்.

யாழ்ப்பாண அரச அதிபர் கே.கணேஷ் தமது உரையின்போது, யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாய சம்மேளனத்தினர் முதன் முதலாக ஒரு கட்டடத்தை நிறுவி, அதன் மூலம் இப்பகுதி விவசாயிகளுக்கு உதவ முன்வந்திருப்பதையிட்டுப் பாராட்டுகிறேன். இச்சம்மேளனத்தினூடாக இப்பகுதி விவசாயிகள் மேலும் பல நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் சம்மேளனத்தை ஸ்திரப்படுத்திக்கொள்ள வேண்டும் - என்றார்.

யாழ்ப்பாண மாவட்ட கமத்தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன், யாழ்ப்பாணம் விவசாயத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.செல்வராசா மற்றும் விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள், கிராம சேவையாளர்கள், விவசாயிகள், பொதுமக்கள் எனப் பலரும் திறப்புவிழாவில் கலந்துகொண்டனர். (ப-152-204)

# பண்பாட்டுச் சீரழிவைத் தடுக்க விழிப்புடன் இருந்து செயற்படுவோம்

## நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன்

வலி.கிழக்கு, ஓக.23

பெறுமதிமிக்க தமிழர் பண்பாடு, கலாசாரம் சீரழிவதை நாம் அனுமதிக்கக்கூடாது. அதனைக் காப்பாற்ற நாம் விழிப்புடன் செயற்படவேண்டும்.

- இவ்வாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

கல்வியங்காடு, ஞானபாஸ்கரோதய சங்கத்தின் 85ஆவது ஆண்டு விழா அண்மையில் நடைபெற்றது.

அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று எமது கலாசாரம்,பண்பாடு சீரழிந்து செல்கிறது. இதனைக் காப்பாற்றவேண்டிய தேவை எம் அனைவரிடமும் உள்ளது.

வெளிநாடுகளில் இருந்து இங்குவரும் வெளிநாட்டவர் எமது பண்பாடு, கலாசாரம் என்பவற்றை மெச்சுவதோடு, தாமும் பின்பற்றுகின்றனர். ஆனால், இன்று எமது இளஞ்சந்ததியினர் வெளிநாட்டவரின் பாணியைப் பின்பற்றி நமது கலாசார பண்பாட்டைப் புறக்கணிக்கின்றனர்.

இந்நிலையை நாம் மாற்றவேண்டும். எமது பண்பாடு, கலாசாரம் தனித்துவமானது அதனை என்றும் அழியவிடலாகாது.



எந்நேரமும் யுத்தம் வெடிக்கலாம் என்ற மனநிலையில்தான் எமது மக்கள் வாழ்கின்றனர். அரசு எமக்கான எந்த உரிமையையும் இதுவரை வழங்கியதில்லை; வழங்கப்போவதுமில்லை. எமது உரிமைகளை நாம் தான் மீட்டெடுக்கவேண்டும் - என்றார்.

ஆசியுரையினை கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ வ.நகுலேஸ்வரக் குருக்கள் நிகழ்த்தினார். தொடர்ந்து சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினர் எஸ்.சிவசுந்தரமூர்த்தி, கல்வியங்காடு கிராம அலுவலர் எஸ்.முத்துக்குமாரசாமி ஆகியோர் கருத்துரைகள் நிகழ்த்தினர்.

சங்கத்தின் 85ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. (ப-180-204)

# மாற்று மருத்துவ முறைகளையும் நாடி நம் மக்கள் பயன்பெறவேண்டும்

## கூட்டுறவு விழாவில் உரை

யாழ்ப்பாணம்,ஓக.23

எமது சமூகம் நோய்வாய்ப்பட்ட சமூகமாக மாறிக்கொண்டிருக்கிறது. மாற்று வைத்திய வழிமுறைகளைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டிய கட்டத்தில் இருக்கின்றோம்.

இவ்வாறு தெரிவித்தார் வட்டு.- மூளாய் வீதி ஐக்கிய நாணயச் சங்கத் தலைவரும் சங்கானைப் பிராந்திய சபை உப தலைவருமான சி.இராமச்சந்திரா.

சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் யாழ்.மாவட்ட சமாசத்தால் நடத்தப்பட்ட 83 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் விழாவில் இராமச்சந்திரா உரை நிகழ்த்தினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது சமூகம் ஒரு நோய்வாய்ப்பட்ட சமூகமாக மாறிக்கொண்டிருக்கின்றது. நாள்தோறும் யாழ்.ஆஸ்பத்திரிக்குச் செல்லும் நோயாளிகளின் எண்ணிக்கை வயது, பால் வித்தியாசம் இல்லாமல் அதிகரித்துச் செல்கின்றது. அவர்களுள் பெரும்பாலானவர்களுக்கு சீவியகாலம் வரை மருந்து மாத்திரைகளுடன் வாழ வேண்டுமென ஆலோசனை வழங்கப்படுகின்றது. ஆலோசனையின்படி மருந்து மாத்திரைகள் எடுத்தாலும் நோயின் தன்மை தணிவதாக இல்லை. எடுக்கவேண்டிய மருந்து மாத்திரைகளின் வீரியமும் அளவும் நாள் செல்லச் செல்ல கூடிக்கொண்டு போகின்றது. உட்கொள்ளும் மருந்து மாத்திரைகளின் பாதிப்பு நோயாளியின் உடல் உறுப்புகளைப் பாதிப்பதோடு, நோயாளியின் ஆயுளையும் குறைக்கின்றது. இந்நிலையில் என்ன செய்யலாம்? மாற்று வைத்திய வழிகளைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். மாற்று வைத்திய முறைகளாக ஆயுள்வேத வைத்தியம், ஹோமியோபதி வைத்தியம், அக்கியூபஞ்சர் வைத்தியம் ஆகியன காணப்படுகின்றன.

எமது மூதாதையர் பேணிக்காத்த வைத்திய முறைகளை மீண்டும் முன்னணிக்குக் கொண்டுவர வேண்டும். ஹோமியோபதி வைத்தியம் எமது நாட்டின் தென்பகுதியில் பிரபல்யமாகி வருகின்றது.

அக்கியூபஞ்சர் வைத்தியம் எமது பகுதியிலும் மக்களால் ஏற்றுப் பயன்பெறும்நிலை உருவாகிக் கொண்டுவருகின்றது. பல ஆண்டுகள் மருந்து மாத்திரைகளுடன் வாழ்ந்தவர்கள் அக்கியூபஞ்சர் வைத்தியத்தை ஏற்று ஒரு விதமான மருந்து வகையும் இல்லாமல் ஆரோக்கியமான வாழ்வை நோக்கி மனத்தென்புடன் முன்னேறுவதைக் காணக் கூடியதாக உள்ளது. அத்துடன், இவ்வகை வைத்தியத்தைத் நாடிச் செல்வோர் எண்ணிக்கை அதிகரிப்பது யதார்த்தமாக உள்ளது.

இருப்பினும் போதிய அளவு வைத்தியர் இல்லை. இவ்வைத்தியத்தின் அனுகூலங்கள் ஏனைய மக்களைச் சென்றடையவில்லை. எனவே, கூட்டுறவுச் சமூகம் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். கூட்டுறவு நிறுவனங்கள் ஸ்தாபனரீதியாக ஆக்கபூர்வமான தங்கள் பங்களிப்பைச் செய்ய வேண்டும் - என்றார் அவர். (ப-204)




# புத்தபெருமானையே போர்க்கருவியாக மாற்றிவிட்டார்கள் பேரினவாதிகள் !

## பண்டிதர் பரந்தாமனின் நூல் வெளியீட்டில் இளம்பரிதி

நல்லூர்,ஓக.23

மனிதனின் பெறுமானத்தை உயர்த்திய புத்த பெருமானையே போர்க்கருவியாக்கியதுடன், திருமலையில்ஓர் இனத்தின் சின்னமாகவும் ஆக்கியுள்ளனர் சிங்களப் பேரினவாதிகள்.

- இவ்வாறு பண்டிதர் வீ.பரந்தாமனின் 'வேர் - அடிவழித் தமிழ்ச் சொற்பிறப்பியற் சிற்றகர முதலி' நூலை வெளியிட்டுப் பேசிய யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி கூறினார்.



யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் சி.சிவலிங்கராஜா தலைமையில் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில்- பண்டிதர் பரந்தாமனின் 'வேர் அடிவழித் தமிழ்ச் சொற்பிறப்பியற் சிற்றகர முதலி' நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதி அங்கு மேலும் பேசும்போது கூறியதாவது:-

எமது விட்டுக் கொடுப்புகளைப் பலவீனம் எனக் கருதுகிறார்கள். இந்த நாடு பௌத்த சிங்கள நாடு என உண்மைக்கு மாறான கருத்துக்களை சிங்கள இனவாதிகள் கூறுகின்றனர். இங்கே இருக்கும் இன்னோர் இனத்தை நசுக்க முனைகிறார்கள். யுத்தத்தின் பின் ஏற்பட்ட யுத்தநிறுத்தத்தைத் தொடர்ந்தும் எமது மக்கள் எதிர்பார்த்த இயல்பு வாழ்க்கை கிடைக்கவில்லை. மாறாக, எமது மக்கள் இராணுவத்தின் அச்சுறுத்தல்கள் நெருக்கடிகளுக்குள் தள்ளப்பட்டு வருகின்றனர்.

யுத்தச் சூழல் நிறுத்தப்பட்ட பின்னரும் கூட சிங்களக் குடியேற்றம் தொடர்கிறது. கீரிமலை தமிழர்களின் பிரதேசம். அரசியல் ஆன்மீகத் தொடர்புகள் கொண்ட வரலாற்றுப் பிரதேசம். இன்று சங்கமித்த இறங்கிய இடமாகக் கொள்ளப்படுகிறது. எமது பரம்பரைக் காணிகளைக் கொண்ட மாவிட்டபுரம் பௌத்த புனித இடமாக மாற்றப்பட்டுள்ளது. நாங்கள் புத்த பிரானை மனிதராக மதிக்கிறோம் ஆனால், அவரது இருப்பு இனவாதத்தின் அடையாளமாக்கப்படுகின்றது.

பொதுக்கட்டமைப்பு வந்தாலும் வராவிட்டாலும் எமது வாழ்வாதாரத்தைக் காக்கும் சக்திகளாக நாங்களே இருப்போம். தமிழ் வளர்ச்சியில் பரந்த நிலையில் இருந்து அதை மேம்படுத்துவோம். வியாபாரத்தில் தூயதமிழில் பெயர் கொண்டுவந்தபோது சர்ச்சைகள் இருந்தன. எனினும், இன்று அது முன் நிலையில் உள்ளது. தூயதமிழின் வருகை தமிழர்கள் மத்தியில் மாற்றத்தைத் தெளிவைச் செயற்படுத்தியுள்ளது.

இரண்டு நாடுகளுக்கான தளம் உண்டு என சந்திரிகா சொன்ன போது மறுத்த ரணில் இன்று அதனை ஏற்றுள்ளார். நிலம், படை நாட்டுக்குரிய கட்டுமானங்களைப் பார்க்கும் போது இது மறுக்க முடியாததாகிறது.

தமிழர் போராட்டம் முக்கிய கட்டத்தில் நிற்கும்போது அதற்குப் புத்துயிரூட்டும் வகையில் இந்த நூல் வருவது வரலாற்றுச் சிறப்பும் இனத்தின் பெருமையுமாகும். எமது மொழி குறித்த தேசியத்திற்குக் காப்பரணாக உள்ளது. விழிப்பையூட்டி மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதுடன், தமிழன் இருப்புக்கு இது ஒரு தளத்தை ஏற்படுத்தும். எமது வீரர்கள் களத்தில் ஆற்றும் வீரத்திற்குக் கிடைத்த மதிப்பாக இந்த ஆக்கம் உள்ளது. பாடக்குறிப்புகளைப் பார்க்கும் போது தமிழில் தவறும் பிழைகளும் காணப்படும் சூழலில் இந்த நூலின் வரவு ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தும்.

சுதந்திரத்தை - விடுதலையை - ஆளுமையை - யாரும் அச்சுறுத்தாத எங்களை மதிக்கக் கூடிய மக்களாக வாழ்வோம். எங்களை நசுக்கும் சந்தர்ப்பவாதிகளுக்கு விட்டுக் கொடுத்து வந்தது இனியும் தொடரக்கூடாது. கடந்த மூன்று ஆண்டுகளாக மக்களின் பிரச்சினைகள் தீர்வு காணப்படவில்லை.

தமிழ் முதல் மொழி. ஐம்பதாயிரம் ஆண்டு பழைமை கொண்டது என்பதில் அது எங்கள் மொழி என்பதில் பெருமையாக இருக்கிறது. மொழிக்குள் இருந்து தான் உணர்வுகள் பிறக்கின்றன. 'நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழெங்கே' என்று கூறுவதைப் பார்க்கும் போது ஆன்மீக வழியில் தமிழுக்கு முதலிடம் கொடுத்து வந்துள்ளார் என்பதை அறியமுடிகிறது.

பண்டிதர் பரந்தாமன் எமது விடுதலைப் போரின்போது தமிழ்மொழிக்கு அதன் வளர்ச்சிக்குத் தொண்டாற்றியவர்.

எமது மனத்திடமே, எம்மை உயர்த்தும் தலைவர். மக்கள், சக்தி என்ற தளத்தில் ஒன்றுபடவேண்டும். சிங்களப் பேரினவாதிகள் தமிழர் பிரச்சினையை மக்கள் பிரச்சினை என்ற தளத்தில் தீர்க்கமாட்டார்கள் என்ற முடிவுக்குத் தலைவர் வந்துள்ளார். சர்வதேசமும் இதை உணரத் தலைப்பட்டுவிட்டது. எனவே, ஒரு வெற்றிக்கான சந்தர்ப்பத்தை உருவாக்கியுள்ளார். எங்களை நாங்கள் பாதுகாக்கப் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தினால் வெற்றி கிட்டும். அது உங்கள் கைகளில் உள்ளது.

### கண்டுபிடிப்புகள் தேவை

முனைவர் சிவலிங்கராஜா தனது தலைமையுரையில்:-

தமிழ்மொழிக்கு வலுச்சேர்க்கும் வகையில் கண்டுபிடிப்புகள் தேவை. ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவ பாதிரிமார் மக்களுடன் பழகுவதற்காக முதலில் ஆங்கில அகராதியை உருவாக்கினர். அந்த மரபில் தமிழுக்கும் அகராதியை உருவாக்கினர். 19 ஆம் நூற்றாண்டில் வைமன் கதிரவேல்பிள்ளை தொகுத்த அகராதி 1904 இல் முதலில் மதுரைத் தமிழ் சங்கத்தில் அரங்கேறியது. காலத்திற்குக் காலம் இலங்கையில் போர்கள் வந்து கொண்டிருக்கும் காரணத்தால் தமிழுக்கும் இடர்ப்பாடுகள் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பண்டிதர் பரந்தாமன் ஈழத்தின் புகழ்பூத்த தமிழ் தாத்தா கந்தமுருகேசனாரோடு இணைந்து அவரிடம் கற்றவர். தமிழில் ஈடுபாடு கொண்ட ஈ.வே.ரா. பெரியார்போல பணியாற்றிய மேலைப் புலோலி கந்தமுருகேசனாரிடம் மரபுவழிக்கல்வி முறையில் ஆசிரியருக்குப் பணிசெய்து படித்தவர். அவர் ஒரு நல்ல கவிஞர். அற்புதமாக வெண்பா பாடக் கூடியவர். அவர் இந்த அகராதிக்காக உழைத்த உழைப்பு இதனூடாகத் தெரிகின்றது - என்றார்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ், பதில் கலைப் பீடாதிபதி எஸ்.நித்தியானந்தன், கலாநிதி செ.திருநாவுக்கரசு, நூலாசிரியர் பண்டிதர் பரந்தாமன் உட்படப் பலர் பேசினார்கள்.

நூலின் முதல் பிரதியை அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியிடம் இருந்து கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவி செல்வி தி. பெரியதம்பி பெற்றுக் கொண்டார். முன்னதாகத் தமிழீழ தேசியக் கொடியைப் பேராசிரியர் சண்முகதாஸ் ஏற்றிவைத்தார். (ப-111)

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு - 2005

தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளளிப்புக்கு நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவில் மூப்பின் அடிப்படையில் தெரிவானோரின் பெயர்களில் இறுதிப்பகுதியும் இப்பிரிவில் குலுக்கல் அடிப்படையில் தெரிவானோரின் பெயர்களும் யாழ். உதவி அரச அதிபர் பிரிவில் மூப்பின் அடிப்படையில் தெரிவானோரில் ஒரு பகுதியினரின் பெயர்களும் இங்கு வெளியிடப்படுகின்றன.

| | |
|---|---|
| ந/ 10962 | திரு. தாமோதரம்பிள்ளை விஜயசண்முகம் |
| ந/ 10963 | திருமதி. கண்ணம்மா கைலாசபிள்ளை |
| ந/ 10968 | திரு. செல்லத்துரை சீவரத்தினம் |
| ந/ 10990 | திரு. கார்த்தி பொன்னையா |
| ந/ 11000 | திருமதி. மகேஸ்வரி சங்கரப்பிள்ளை |
| ந/ 11005 | திரு. கணபதிப்பிள்ளை புஸ்பராசா |
| ந/ 11009 | திரு. அகஸ்ரின் அருளப்பு |
| ந/ 11020 | திருமதி. புவனேஸ்வரி இரத்தினசிங்கம் |
| ந/ 11031 | திருமதி. கமலாவதியம்மா செல்லையா |
| ந/ 11044 | திரு. பொன்னுத்துரை துரைசிங்கம் |
| ந/ 11047 | திரு. ஆறுமுகம் பொன்னையா |
| ந/ 11048 | திருமதி. தங்கம்மா திருநாவுக்கரசு |
| ந/ 11049 | திரு. குமாரசாமி கதிர்காமத்தையா |
| ந/ 11061 | திருமதி. சீதாலெச்சுமி சண்முகம் |
| ந/ 11062 | திருமதி. வனிதாலட்சுமி மகேஸ்வரன் |
| ந/ 11065 | திரு. வேலு விசுவலிங்கம் |
| ந/ 11072 | திரு. முத்துக்குமாரு சபாபதிப்பிள்ளை |
| ந/ 11074 | திரு. செல்லப்பா இராசதுரை |
| ந/ 11080 | திருமதி. தெய்வானைப்பிள்ளை கனகரத்தினம் |
| ந/ 11095 | திருமதி. பூமலர் விஜயரத்தினசிங்கம் |
| ந/ 11098 | திரு. வைத்திலிங்கம் ஏகாம்பரம் |
| ந/ 11116 | திருமதி. சரஸ்வதி சின்னராசா |
| ந/ 11119 | திரு. ஆறுமுகம் மாணிக்கம் |
| ந/ 11129 | திரு. கந்தையா வாமதேவா |
| ந/ 11158 | திரு. நாகலிங்கம் காசிப்பிள்ளை |
| ந/ 11159 | திருமதி. கோனேஸ்வரி பாலசுப்பிரமணியம் |
| ந/ 11168 | திரு. செல்லத்துரை இராமச்சந்திரன் |
| ந/ 11179 | திரு. குமாரசாமி நாகராசா |
| ந/ 11186 | திருமதி. நல்லம்மா சிற்றம்பலம் |
| ந/ 11208 | திரு. முத்துராசா மீனாட்சிசுந்தரம் |
| ந/ 11225 | திருமதி. சோபிதம்ணி இரத்தினசபாபதி |
| ந/ 11228 | திருமதி. இராசேஸ்வரி கணபதிப்பிள்ளை |
| ந/ 11235 | திருமதி. பரமேஸ்வரி பாலசுப்பிரமணியம் |
| ந/ 11246 | திருமதி. கிறிஸ்தீனா புளோறன்ஸ் மாட்டின் |
| ந/ 11253 | திருமதி. சிவயோகமலர் இரத்தினசிங்கம் |
| ந/ 11263 | திருமதி. பராசக்தி துரைரத்தினம் |
| ந/ 11265 | திரு. குமாரு கந்தையா |
| ந/ 11284 | திருமதி. மகேஸ்வரி பரமநாதன் |
| ந/ 11298 | திருமதி. லலிதாம்பாள் யோகேஸ்வரசர்மா |
| ந/ 11341 | திருமதி. சரஸ்வதி பழனி |
| ந/ 11345 | திருமதி. சரஸ்வதி நடராசா |
| ந/ 11346 | திரு. அப்புத்துரை சோமசுந்தரம் |
| ந/ 11348 | திருமதி. பொன்னம்மா கனகரத்தினம் |
| ந/ 11378 | திருமதி. சீனியம்மா நடராஜா |
| ந/ 11388 | திரு. மாணிக்கம் சிவனடியார் |
| ந/ 11391 | திருமதி. வள்ளியம்மை ஆறுமுகம் |
| ந/ 11404 | திரு. சுவாமிநாதர் ஆறுமுகம் |
| ந/ 11410 | திருமதி. பூமணி பாலசிங்கம் |
| ந/ 11421 | திருமதி. கணபதி பரமன் |
| ந/ 11428 | திரு. செல்லத்துரை கனகநாதன் |
| ந/ 11429 | திரு. கந்தையா பூபாலசிங்கம் |
| ந/ 11437 | திருமதி. தனலட்சுமி கந்தையா |
| ந/ 11439 | திருமதி. சௌபாக்கியவதி சிற்றம்பலம் |
| ந/ 11487 | திருமதி. இராசம்மா தம்பிப்பிள்ளை |
| ந/ 11493 | திரு. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை |
| ந/ 11504 | திருமதி. முத்தம்மா அப்பையா |
| ந/ 11514 | திரு. கந்தையா கோபாலசிங்கம் |
| ந/ 11520 | திருமதி. பரமேஸ்வரி சண்முகராசசர்மா |
| ந/ 11534 | திரு. ஆறுமுகம் தம்பிப்பிள்ளை |
| ந/ 11550 | திருமதி. பொன்னாச்சிப்பிள்ளை செல்லத்துரை |
| ந/ 11558 | திரு. பொன்னம்பலம் தில்லைநாதன் |
| ந/ 11561 | திரு. காசிப்பிள்ளை பொன்னம்பலம் |
| ந/ 11563 | திருமதி. ஜோன் சோமசுந்தரம் |
| ந/ 11594 | திருமதி. கனகம்மா கதிரேசு |
| ந/ 11597 | திருமதி. சிவபாக்கியம் பஞ்சாட்சரம் |
| ந/ 11599 | திரு. தம்பிப்பிள்ளை சிவானந்தன் |
| ந/ 11609 | திருமதி. நாகரத்தினம் சுப்பிரமணியம் |
| ந/ 11610 | திரு. இராமகிருஷ்ணஐயர் இராமசாமிஐயர் |
| ந/ 11611 | திரு. சங்கரப்பிள்ளை பொன்னுச்சாமி |
| ந/ 11616 | திருமதி. தங்கம்மா சீவரெத்தினம் |
| ந/ 11622 | திருமதி. சிவஞானமணி இரத்தினசபாபதி |
| ந/ 11633 | திருமதி. சிவபாக்கியம் கந்தையா |
| ந/ 11635 | திருமதி. நேசம்மா கந்தையா |
| ந/ 11638 | திருமதி. அருளம்மா இராசநாயகம் |
| ந/ 11642 | திருமதி. சிவபாக்கியம் இராசரத்தினம் |
| ந/ 11645 | திரு. கணபதிப்பிள்ளை சீவகாருணியம் |
| ந/ 11663 | திரு. இளையதம்பி தங்கராசா |
| ந/ 11664 | திரு. தில்லையம்பலம் வீரசிங்கம் |
| ந/ 11669 | திரு. தம்பிஐயா இரத்தினராசா |
| ந/ 11676 | திரு. பிலிப் பிரான்சிஸ் |
| ந/ 11677 | திரு. மருதப்பு இரட்ணகோபாலபிள்ளை |
| ந/ 11685 | திரு. துரையப்பா சிவபாலன் |
| ந/ 11697 | திரு. வயிரமுத்து தம்பிராசா |
| ந/ 11704 | திருமதி. சந்திராவதி கனகரத்தினம் |
| ந/ 11717 | திருமதி. பொன்னம்மா பொன்னுத்துரை |
| ந/ 11720 | திரு. ஏகாம்பரம் பேரின்பராசா |
| ந/ 11721 | திரு. கணபதிப்பிள்ளை கோபாலபிள்ளை |
| ந/ 11723 | திருமதி. முத்தாச்சி தம்பன் |
| ந/ 11730 | திருமதி. கனகம்மா தர்மரட்ணம் |
| ந/ 11732 | செல்வி. வாலாம்பிகை கந்தையா |
| ந/ 11736 | திரு. சிற்றம்பலம் சோதிநாதன் |
| ந/ 11744 | திருமதி. கனகாம்பிகை இராமநாதன் |
| ந/ 11746 | திரு. செல்லத்துரை சிவசுப்பிரமணியம் |
| ந/ 11752 | திருமதி. பவளம் சுப்பிரமணியம் |
| ந/ 11769 | திருமதி. தங்கம்மா குமாரசாமி |
| ந/ 11775 | திரு. சோமசுந்தரம் பாலசிங்கம் |
| ந/ 11785 | திருமதி. மகேஸ்வரி குகதாசன் |
| ந/ 11789 | திருமதி. பூமணி செல்லையா |
| ந/ 11791 | திரு. சின்னத்தம்பி சிவஞானசுந்தரம் |
| ந/ 11806 | திருமதி. பூரணம் வீரகத்தி |
| ந/ 11814 | திரு. மனுவேற்பிள்ளை நல்லையா |
| ந/ 11826 | திருமதி. தங்கம் கந்தசாமி |
| ந/ 11836 | திருமதி. வாலாம்பிகை பொன்னுத்துரை |
| ந/ 11840 | திருமதி. அன்னலட்சுமி பொன்னையா |
| ந/ 11867 | திரு. தம்பு இரத்தினம் |
| ந/ 11870 | திரு. வைத்திலிங்கம் கிருஷ்ணபிள்ளை வேதாசலம். |
| ந/ 11878 | திரு. முருகேசு செல்லத்துரை |
| ந/ 11880 | திருமதி. ராசம்மாள் பரமசிவம் |
| ந/ 11885 | திருமதி. மெல்லிஅம்மா செல்லத்துரை |
| ந/ 11888 | திருமதி. சரஸ்வதி பரமேஸ்வரன் |
| ந/ 11895 | திரு. நடராசா கந்தசாமி |
| ந/ 11897 | திரு. முத்தர் பொன்னுத்துரை |
| ந/ 11919 | திருமதி. கயிலாசபதி சண்முகராசா |
| ந/ 11921 | திருமதி. பரமேஸ்வரி கனகசபாபதி |
| ந/ 11933 | திரு. தம்பு ஜயாத்துரை |
| ந/ 11943 | திரு. தம்பியான் கிட்டிணன் |
| ந/ 11946 | திரு. காசிப்பிள்ளை கனகரத்தினம் |
| ந/ 11948 | திருமதி. கனகாம்பிகை நவரத்தினம் |
| ந/ 11951 | திரு. கந்தையா கருணானந்தம் |
| ந/ 11952 | திரு. அண்ணாமலை சொர்ணலிங்கம் |
| ந/ 11958 | திரு. கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம் |
| ந/ 11959 | திரு. கந்தையா கந்தசாமி |
| ந/ 11969 | திருமதி. இராசேஸ்வரி நடராசா |
| ந/ 11980 | திரு. அப்பாக்குட்டி வீரசிங்கம் |
| ந/ 12016 | திரு. மதியாபரணம் இராஜரட்ணம் |
| ந/ 12029 | திருமதி. மகேஸ்வரி துரைராசா |
| ந/ 12051 | திரு. சுப்பிரமணியம் நடராசா |
| ந/ 12054 | திருமதி. இராசலட்சுமி தங்கவடிவேல் |
| ந/ 12096 | திரு. நடராசா கடம்பேஸ்வரன் |
| ந/ 12099 | செல்வி. ஷெலன் மரியரட்ணம் அம்புறோஸ் |
| ந/ 12103 | திரு. சுந்தரம்பிள்ளை பாலசுப்பிரமணியம் |
| ந/ 12104 | திரு. சுப்பையா இளையதம்பி |
| ந/ 12107 | திரு. பொன்னன் கணபதி |
| ந/ 12124 | திரு. சின்னையா பாலசுப்பிரமணியம் |
| ந/ 12125 | திரு. சின்னத்தம்பி இராசலிங்கம் |
| ந/ 12128 | திருமதி. குலமணி இலங்கராஜா |
| ந/ 12137 | திரு. கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் |
| ந/ 12149 | திரு. ஆள்வார் சண்முகம் |
| ந/ 12154 | திருமதி. அன்னலட்சுமி பழனித்துரை |
| ந/ 12159 | திருமதி. சிவபாக்கியம் மாணிக்கம் |
| ந/ 12161 | திரு. கனகசபை தனபாலசிங்கம் |
| ந/ 12165 | திரு. மயில்வாகனம் குமாரசாமி |
| ந/ 12173 | திருமதி. செல்லம்மா கந்தையா |
| ந/ 12177 | திரு. சபாரத்தினம் சிவநாதப்பிள்ளை |
| ந/ 12185 | திருமதி. சிவபாக்கியம் தம்பியப்பா |
| ந/ 12208 | திருமதி. பூமணி கணேசு |
| ந/ 12212 | திருமதி. சிவபாக்கியம் கந்தையா |

### நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவு குலுக்கல் அடிப்படையில் தெரிவானோர்

| | |
|---|---|
| ந/ 189 | திரு. முத்தன் இராசன் |
| ந/ 207 | திருமதி. சுகிர்தம்மா அருளம்பலம் |
| ந/ 208 | திரு. வல்லிபுரம் தியாகராசா |
| ந/ 236 | திரு. கந்தையா யோகேஸ்வரராசா |
| ந/ 268 | திருமதி. சரஸ்வதி பரராசசிங்கம் |
| ந/ 352 | திரு. பொன்னுத்துரை மனோரஞ்சிதம் |
| ந/ 486 | திரு. சின்னத்தம்பி குகநேசன் |
| ந/ 501 | திருமதி. புவனராணி பரமேஸ்வரன் |
| ந/ 750 | திருமதி. இராஜேஸ்வரி நடராசா |
| ந/ 780 | திரு. முத்தையா பத்மநாபன் |
| ந/ 793 | திருமதி. வரதலெட்சுமி இராமசேகரம் |
| ந/ 1051 | திரு. சின்னத்துரை சுகிர்தகுமார் |
| ந/ 1147 | திரு. கணபதிப்பிள்ளை குணரத்தினம் |
| ந/ 1184 | திருமதி. ஜெயசோதி மகாதேவா |
| ந/ 1719 | திருமதி. சின்னட்டி துரைசிங்கம் |
| ந/ 2130 | திரு. யோசேப்பு பிரான்சிஸ் |
| ந/ 2206 | திருமதி. மகிழ்மலர் மாணிக்கவாசகர் |
| ந/ 2253 | திருமதி. பிறேமாவதி நடராஜா |
| ந/ 2264 | திருமதி. பராசக்தி நடராசா |
| ந/ 2282 | திருமதி. இராசநாயகி கந்தசாமி |
| ந/ 2454 | திரு. தர்மலிங்கம் சண்முகநாதன் |
| ந/ 2506 | திருமதி. பரமேஸ்வரி சங்கநாதபிள்ளை |
| ந/ 2551 | திரு. வைத்திலிங்கம் லிங்கேஸ்வரன் |
| ந/ 2647 | திருமதி. பகவதி [illegible]ஜியசேகரம் |
| ந/ 2788 | திருமதி. அன்னபூர[illegible]ம் பாலசிங்கம் |
| ந/ 2901 | திரு. மு[illegible]துச்சாமி பாலேந்திரா |
| ந/ 2931 | திரு. கந்தையா இரத்தினசிங்கம் |
| ந/ 3084 | திரு. சபாபதி கதிரேசு யோகநாதன் |
| ந/ 3094 | திருமதி. சிரோன்மணி கணேஷ் |
| ந/ 3116 | திருமதி. குணநாயகி [illegible]தேவா |
| ந/ 3221 | திரு. நாகேந்திர[illegible] இரா[illegible]மனாதன் |
| ந/ 3270 | திருமதி. சற்குணவ[illegible] குகதாசன் |
| ந/ 3325 | திரு. தம்பையா தேவராசா |
| ந/ 3540 | திருமதி. சின்னம்மா நடராசா |
| ந/ 3563 | செல்வி. வசந்தாதேவி தர்மலிங்கம் |
| ந/ 3584 | திரு. தங்கராசா ஜெயசுப்பிரமணியம் |
| ந/ 3943 | திரு. செல்லத்துரை வேலாயுதபிள்ளை |
| ந/ 4102 | செல்வி. வைத்தியக்கலாநிதி பரமேஸ்வரி சின்னப்பா |
| ந/ 4181 | திரு. வல்லிபுரம் மகாலிங்கம் |
| ந/ 4411 | திருமதி. இரத்தினம் கெங்காதரன் |
| ந/ 4674 | திருமதி. கனகலட்சுமி வில்வரெட்ணம் |
| ந/ 4785 | திருமதி. நகுலேஸ்வரி ஜெகநாதன் |
| ந/ 4860 | திரு. நன்னித்தம்பி பூபாலசிங்கம் |
| ந/ 5211 | திருமதி. கமலராணி குணபாலசிங்கம் |
| ந/ 5308 | திரு. வேலன் பொன்னன் |
| ந/ 5361 | திருமதி. றாதா றாதாகிருஷ்ணன் |
| ந/ 5487 | திருமதி. ஜெயராணி லிங்கதாசன் |
| ந/ 5905 | திரு. செல்வத்துரை கதிர்காமத்தம்பி |
| ந/ 6050 | திருமதி. ராசம்மா நாராயணன் |
| ந/ 6067 | திருமதி. இராசமணி சச்சிதானந்தன் |
| ந/ 6069 | திருமதி. பராசக்தி சச்சிதானந்தம் |
| ந/ 6202 | திரு. விசுவலிங்கம் நடராசா |
| ந/ 6373 | திருமதி. குணராணி சோதீஸ்வரன் |
| ந/ 6406 | திரு. காசிப்பிள்ளை லோகேஸ்வரன் |
| ந/ 6514 | திருமதி. வள்ளிக்கொடி மார்க்கண்டேயர் |
| ந/ 6600 | செல்வன். யோகராசா சிவரூபன் |
| ந/ 6612 | திரு. மாணிக்கம் அலோசியஸ் |
| ந/ 6618 | செல்வி. நாகேஸ்வரி கந்தசாமி |
| ந/ 6768 | திருமதி. இராஜேஸ்வரி சிறிகாந்தராஜா |
| ந/ 6832 | திருமதி. தனலஷ்மி தனபாலசிங்கம் |
| ந/ 7009 | திருமதி. இராஜேஸ்வரி சுப்பிரமணியம் |
| ந/ 7014 | திருமதி. தவமணி தனபாலசிங்கம் |
| ந/ 7051 | திருமதி. சந்திரமலர் அன்ரனிமரியதாஸ் |
| ந/ 7141 | திரு. இராமலிங்கம் பரமலிங்கம் |
| ந/ 7151 | திருமதி. லீலாவதி தர்மரட்ணம் |
| ந/ 7243 | திரு. இராமலிங்கம் சோமசுந்தரம் |
| ந/ 7436 | திருமதி. தவமணி இராசையா |
| ந/ 7445 | திருமதி. அருள்தேவி பரமசிவம்பிள்ளை |
| ந/ 7592 | திரு. இராசையா நடராசா |
| ந/ 7671 | திரு. வேலுப்பிள்ளை அருந்தவசோதி |
| ந/ 7736 | திரு. இராசலிங்கம் தேவராசா |
| ந/ 7798 | திரு. சண்முகம் இராஜதுரை |
| ந/ 7850 | திரு. கந்தையா சண்முகலிங்கம் |
| ந/ 7993 | திரு. பெருமாள் கந்தசாமி |
| ந/ 8067 | திருமதி. வசந்தி பஞ்சலிங்கம் |
| ந/ 8146 | திரு. அந்தோனிப்பிள்ளை எலியாஸ் |
| ந/ 8300 | திரு. இராசரட்ணம் நவரட்ணம் |
| ந/ 8492 | திரு. கணபதியாம்பிள்ளை கதிர்காமன் |
| ந/ 8521 | செல்வி. சறோஜினிதேவி வேலாயுதம் |
| ந/ 8574 | திரு. கணபதிப்பிள்ளை வடிவேல் |
| ந/ 8649 | திரு. சரவணை தருமன் |
| ந/ 8654 | செல்வி. திருமகள் வினாசித்தம்பி |
| ந/ 8729 | திருமதி. சின்னத்தங்கம் கந்தையா |
| ந/ 8750 | திருமதி. ஞானம்பாள் ஸ்ரீமோகன் |
| ந/ 8807 | திரு. சரவணமுத்து நாகராசா |
| ந/ 8940 | திருமதி. பராசக்தி சந்திரகுலசிங்கம் |
| ந/ 8945 | திரு. யோகராசா சிவகுமார் |
| ந/ 9032 | திரு. பாலசுப்பிரமணியம் பாஸ்கரன் |
| ந/ 9193 | திரு. கதிரவேல் றஞ்சன் |
| ந/ 9277 | திருமதி. ஜெயந்தி சிவசுப்பிரமணியம் |
| ந/ 9421 | திருமதி. திவ்வியகுமாரி கோபாலசிங்கம் |
| ந/ 9460 | திருமதி. கமலம்மா ஆறுமுகம் |
| ந/ 9535 | திரு. கார்த்திகேசு பஞ்சரத்தினம் |
| ந/ 9538 | திருமதி. நகுலேஸ்வரி புஸ்பராஜா |
| ந/ 9539 | திரு. காசிநாதர் விசுவநாதர் குருநாதன் |
| ந/ 9541 | திருமதி. கமலாதேவி கனகசிங்கம் |
| ந/ 9654 | திரு. இளையதம்பி பேரின்பநாயகம் |
| ந/ 9722 | திரு. சுப்பிரமணியம் இராசகுலேந்திரன் |
| ந/ 9723 | திருமதி. கௌரி கணேசலிங்கம் |
| ந/ 10233 | திரு. ஐயன் வயித்திலிங்கம் |
| ந/ 10278 | திரு. சுப்பிரமணியம் பரதாசன் |
| ந/ 10444 | செல்வி. துளபகாதேவி பரஞ்சோதி |
| ந/ 10551 | செல்வி. நந்தினி நடராசா |
| ந/ 10639 | திருமதி. லோகநாயகி ஜெயக்குமார் |
| ந/ 10767 | திரு. நடேசபிள்ளை வித்தியாதரன் |
| ந/ 10867 | திருமதி. நாகேஸ்வரி அரியரத்தினம் |
| ந/ 10996 | திருமதி. மல்லிகாதேவி குணசிங்கம் |
| ந/ 11008 | திரு. திருமேனி நடராசா |
| ந/ 11091 | திரு. செல்லத்துரை பாலச்சந்திரன் |
| ந/ 11340 | திரு. நாகர் சின்னராசா |
| ந/ 11372 | திருமதி. தனலட்சுமி தம்பிஐயா |
| ந/ 11486 | திருமதி. தர்மபாலினி றஞ்சன் |
| ந/ 11559 | செல்வி. இராஜலட்சுமி செல்லையா |
| ந/ 11647 | திரு. ஐயாத்துரை யோகேஸ்வரன் |
| ந/ 11716 | திரு. பஞ்சலிங்கம் சவுண்டீஸ்வரன் |
| ந/ 11754 | செல்வி. சறோஜினி கனகன் |
| ந/ 11788 | திருமதி. தர்மரஞ்சிதம் சண்முகலிங்கம் |
| ந/ 11839 | திரு. செல்வரட்ணம் பன்னீர்செல்வன் |
| ந/ 11954 | திரு. கிருஸ்ணசாமிஐயர் சுப்பிரமணியஐயர் |
| ந/ 11972 | திருமதி. ஜெயகௌரி கிருஸ்ணராஜா |
| ந/ 12080 | திரு. முருகன் பிள்ளையான் |
| ந/ 12113 | திரு. அப்புத்துரை முருகதாஸ் |

### யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர் பிரிவு முப்பின் அடிப்படையில் தெரிவானோர்

| | |
|---|---|
| யா/ 20 | திரு. அந்தோனி யோசேப்ஜேக்கப் |
| யா/ 29 | திருமதி. இராஜேஸ்வரி பத்மநாதன் |
| யா/ 33 | திரு. பொன்னையா நவரத்தினம் |
| யா/ 34 | திரு. வேலுப்பிள்ளை அருள்சிங்கம் |
| யா/ 50 | திருமதி. மேரிறோஸ் குமாரசாமி |
| யா/ 70 | திருமதி. நாகரத்தினம் நடராசா |
| யா/ 81 | திரு. பரமு தெய்வேந்திரன் |
| யா/ 82 | செல்வி. மேசி மமான்ஸ் |
| யா/ 90 | திரு. நாகலிங்கம் சிவபாதன் |
| யா/ 94 | திரு. சி. காசிப்பிள்ளை சதாசிவம் |
| யா/ 101 | திரு. முத்துக்குமாரு சிவசிதம்பரநாதன் |
| யா/ 102 | திரு. முத்துக்குமாரு சிவசிதம்பரநாதன் |
| யா/ 116 | திரு. தர்மலிங்கம் குலேந்திரன் |
| யா/ 117 | திருமதி. றீட்டா சேவியர் |
| யா/ 118 | திரு. சுப்பிரமணியம் தியாகராசா |
| யா/ 120 | திருமதி. திரேசம்மா அந்தோனிப்பிள்ளை |
| யா/ 133 | திரு. செபஸ்தியாம்பிள்ளை ஜாசப்தியோப்பிலஸ் |
| யா/ 134 | திரு. கபிரியேல் செபமாலைஇருதயம் |
| யா/ 138 | திரு. சங்கரப்பிள்ளை இராசையா |
| யா/ 144 | திரு. கிறிஸ்ரீன் பேக்மன்ஸ் |
| யா/ 151 | திரு. அம்பலவாணர் நாகேந்திரா |
| யா/ 164 | திரு. மயில்வாகனம் சதானந்தன் |
| யா/ 166 | திரு. செபதேயு சிங்கராஜர் |
| யா/ 181 | திரு. செல்லப்பா இராசரத்தினம் |
| யா/ 198 | திரு. சாம்பசிவம் பஞ்சலிங்கம் |
| யா/ 204 | திரு. துரைச்சாமி செல்வநாயகம் |
| யா/ 206 | திரு. ஜேக்கப் விசேந்தி ஏபிரகாம் |
| யா/ 207 | திரு. பொன்னம்பலம் சதாசிவம் |
| யா/ 211 | திரு. கனகர் பொன்ராசா |
| யா/ 215 | திருமதி. விஜயாள் சிவசோதி |
| யா/ 219 | திரு. ஆறுமுகம் கதிரவேலு |
| யா/ 223 | திருமதி. ரதி பாஸ்கரதேவன் |
| யா/ 240 | திருமதி. தங்கம்மா சதாசிவம் |
| யா/ 250 | திருமதி. ரதி பாஸ்கரதேவன் |

(9ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு - 2005

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

யா/ 260 திரு. கனகசபை பொன்னுத்துரை
யா/ 282 திருமதி. கௌரிஅம்மாள் கந்தவேல்
யா/ 283 திரு. சாம்பசிவம் பஞ்சலிங்கம்
யா/ 293 திருமதி. சரஸ்வதி சேனாதிராசா
யா/ 294 திரு. சின்னையா சண்முகம்
யா/ 298 திரு. இராசையா நடராசா
யா/ 302 திருமதி. றோஸ் சில்வெஸ்ரர்
யா/ 303 திருமதி. நகுலேஸ்வரி முருகதாஸ்
யா/ 307 திரு. வஸ்தியாம்பிள்ளை மரியாம்பிள்ளை
யோசேப்
யா/ 315 திருமதி. யோகமணி சபாரத்தினம்
யா/ 318 திருமதி. பாக்கியம் செல்லத்துரை
யா/ 333 திரு. சவரிமுத்து பெனடிக்ற்
யா/ 336 திருமதி. வில்லிதேவபாக்கியம்
ஞானநாயகம்
யா/ 340 திருமதி. நாகேஸ்வரி பாலசுப்பிரமணியம்
யா/ 341 திரு. பாண்டியபிள்ளை சிவசங்கு
யா/ 347 திருமதி. சற்குணம் கணபதிப்பிள்ளை
யா/ 360 திரு. வேதநாயகம் அற்புதஜெயம்
யா/ 363 திருமதி. காமாட்சி குமாரசாமி
யா/ 376 திருமதி. தங்கம்மா சின்னத்துரை
யா/ 400 திரு. வேலுப்பிள்ளை இராசலிங்கம்
யா/ 403 திருமதி. அமிர்தவல்லி கதிர்காமப்பிள்ளை
யா/ 407 திருமதி. திரேசம்மா அந்தோனிப்பிள்ளை
யா/ 409 திருமதி. லூர்த்தம்மா மனுவல்
யா/ 418 செல்வி. அமிர்தமலர் சின்னத்தம்பி
யா/ 428 திரு. இம்மனுவல் யோசேப்
யா/ 438 திருமதி. தனேஸ்வரி விக்கினராஜா
யா/ 446 திரு. நமசிவாயம் சிவசுப்பிரமணியம்
யா/ 448 திரு. கனகசபை விஸ்வலிங்கம்
யா/ 465 திருமதி. இந்திராணி கிருபராஜ்
யா/ 480 திரு. இராசையா குமாரசாமி
யா/ 500 திருமதி. தங்கேஸ்வரி அருளானந்தன்
யா/ 510 திருமதி. தங்கமணி நல்லையா
யா/ 514 திரு. குமாரசாமி சிவலிங்கம்
யா/ 519 திரு. அம்பலவாணர் இராசையா
யா/ 525 திரு. ஆழ்வாப்பிள்ளை இராசசிங்கம்
யா/ 527 திருமதி. சிவமலர் இராசசிங்கம்
யா/ 547 திரு. தம்பிஐயா கனகராசா
யா/ 549 திருமதி. லில்லிகிரேஸ் தேவசகாயம்
யா/ 553 திரு. கணபதிப்பிள்ளை இலகுப்பிள்ளை
யா/ 559 செல்வி. சுபோதினி இரத்தினசிங்கம்
யா/ 569 திரு. அல்பேட் சின்னையா
யா/ 570 திரு. சுப்பிரமணியம் நடராசா
யா/ 571 திரு. துரையப்பா சிவசுப்பிரமணியம்
யா/ 621 திரு. இராசரெத்தினம் சிவகுமாரன்
யா/ 625 திருமதி. பகவதி கனகலிங்கம்
யா/ 640 திருமதி. கேதாரகௌரி உருத்திரபசுபதி
யா/ 648 திரு. நாகமுத்து நாகராஜா
யா/ 654 திரு. இளையதம்பி கந்தையா தங்கராசா
யா/ 664 திருமதி. காந்திமதி நல்லையா
யா/ 669 திருமதி. அன்னம் தர்மலிங்கம்
யா/ 692 திரு. முருகேசு குமரேசன்
யா/ 694 திரு. தம்பு நடராசா
யா/ 698 திரு. நாகமுத்து பத்மநாதன்
யா/ 700 திரு. சிற்றம்பலம் கந்தமூர்த்தி
யா/ 717 திரு. சண்முகம் வரதராசன்
யா/ 733 திருமதி. தனலட்சுமி சுப்பிரமணியம்
யா/ 754 திருமதி. விஜயலட்சுமி சண்முகரெட்ணம்
யா/ 768 திருமதி. நாகபுஸ்பம் கணபதிப்பிள்ளை
யா/ 773 திரு. தம்பிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்
யா/ 778 திரு. மாரிமுத்து கந்தசாமி
யா/ 780 செல்வி. பரமேஸ்வரி இராமலிங்கம்
யா/ 788 திரு. துரைராஜா ஜெகநாதன்
யா/ 797 திருமதி. அன்னலட்சுமி தம்பியையா
யா/ 810 திரு. தம்பிப்பிள்ளை வேலுப்பிள்ளை
யா/ 817 திரு. வைத்திலிங்கம் சுப்பையா
யா/ 846 திரு. இராசையா முத்துலிங்கம்
யா/ 851 திரு. செல்லத்துரை செல்வராஜா
யா/ 855 திரு. கந்தையா துரைச்சாமி
யா/ 857 திரு. தணிகாசலம் கதிர்காமநாதன்
யா/ 886 திரு. விசுவாசம் பிலேந்திரன்
யா/ 899 திரு. இளையதம்பி கணேசன்
யா/ 905 திரு. அந்தோனிமுத்து தேவராசா
யா/ 939 திருமதி. செபபாக்கியம் இராஜரெட்ணம்
யா/ 950 திரு. செபமாலை அறுக்காஞ்சி
யா/ 959 திருமதி. புஸ்பம் செபதேயு
யா/ 966 திரு. முருகேசு பொன்னையா
யா/ 969 திரு. நீக்கிலாப்பிள்ளை ஆசீர்வாதம்
யா/ 971 திரு. செபஸ்தியாம்பிள்ளை டானியல்
யா/ 980 திருமதி. செபமாலை பற்றிக்
யா/ 984 திரு. சாள்ஸ் அன்ரனி
யா/ 987 திருமதி. ஜெகதாம்பாள் சிவப்பிரகாசம்
யா/ 998 திரு. கபிரியேல்பிள்ளை வில்லியம் ஜோர்ஜ்
யா/ 1002 திரு. செல்வரட்ணம் துரைராஜசிங்கம்
யா/ 1003 திரு. கிறிஸ்ரிஇம்மானுவல் திசவீரசிங்கி
யா/ 1007 திரு. கிறிசாந்துஸ் எக்பேட்
யா/ 1013 திரு. டானியல்ஜெஸ்லி ஜெயராஜா எட்வேட்ஸ்
யா/ 1014 திரு. வில்லியம்யோண் நவரட்ணம்
யா/ 1016 திருமதி. மகேஸ்வரி நடராஜா
யா/ 1020 திரு. கனகசபை பரமநாதன்
யா/ 1034 திரு. குமாரசுவாமி சிவகுமார்
யா/ 1035 திரு. வயித்தியநாதர் தர்மலிங்கம்
யா/ 1043 திரு. முத்தையாலூட்ஸ் றேமன்ற்
யா/ 1048 திரு. இறப்பியேல்பிள்ளை பிரான்சிஸ்சேவியர்
யா/ 1049 திரு. சங்கரப்பிள்ளை சொக்கலிங்கம்
யா/ 1053 திருமதி. மகேஸ்வரி கந்தையா
யா/ 1054 திருமதி. யோசவ்வின் அலெக்ஸாண்டர்
யா/ 1065 திருமதி. இமெல்டா திருச்செல்வம்
யா/ 1067 திரு. அன்ரன்லேனாட் சவிரிமுத்து
யா/ 1079 திரு. கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்
யா/ 1083 திரு. முத்துத்தம்பி தனபாலசிங்கம்
யா/ 1088 திருமதி. அடைக்கலநாயகி பூமணிலூயிஸ்
யா/ 1089 திரு. குமாரசாமி துரைராசா
யா/ 1090 திரு. நாணு ஶ்ரீதரன்
யா/ 1097 திரு. பிரான்சிஸ் லெனாட்
யா/ 1099 திரு. ஹெரல்ட்னொட்குணரத்தினம்
கொண்சன்டையின்
யா/ 1100 திரு. மாணிக்கராஜா சிவகுருநாதன்
யா/ 1112 திருமதி. யசிந்தா சேவியர்
யா/ 1122 திரு. இராமலிங்கம் சின்னத்துரை
யா/ 1128 திரு. ஜெயரத்தினம் விஜயரத்தினம்
யா/ 1134 திருமதி. மேரிதிரேசா பாக்கியம் அழகையா
யா/ 1135 திருமதி. புண்ணியம் கிருஷ்ணபிள்ளை
யா/ 1152 திரு. பிலிப் மரியநாயகம்
யா/ 1154 திருமதி. அருளம்மா நாகலிங்கம்
யா/ 1155 திருமதி. எலிசபெத் மரியநாயகம்
யா/ 1156 திருமதி. புஸ்பராணி மனோகரா திருநாவுக்கரசு
யா/ 1160 திருமதி. பெரியநாயகி இராமச்சந்திரன்
யா/ 1161 திரு. விஜயரட்னம் பிலமன்ஸ்ரனிஸ்லாஸ்
ஜீவரட்ணம்
யா/ 1163 திருமதி. இராசலட்சுமி ஐயாத்துரை
யா/ 1165 திரு. யோசேப் சத்தியதாஸ்
யா/ 1166 திரு. யேக்கப் இலங்கபாகு யோன்பிள்ளை
யா/ 1180 திரு. சாமிநாதர் வின்சன்ற் யேசுதாசன்
யா/ 1183 திரு. சிற்றம்பலம் நவரெத்தினம்
யா/ 1208 திரு. சின்னத்தம்பி கிருஷ்னன்
யா/ 1209 திரு. கனகசுந்தரம் அனஸ்லி செயின்ட்
குவின்டின்
யா/ 1211 திருமதி. மாகிறேற் இறபாயேல்
யா/ 1240 திருமதி. மேரிதிரேசா வின்சன்
யா/ 1247 திருமதி. மேரிஎல்சம்மா டேவிற் பாலசிங்கம்
யா/ 1259 திரு. மரியாம்பிள்ளை இராசேந்திரம்
யா/ 1268 திருமதி. ஜடாமாகிறெட் நவறட்ணம்
யா/ 1284 திரு. தோமஸ் ஜோண்
யா/ 1287 திரு. துரைச்சாமி சிவசாமி
யா/ 1289 திருமதி. நேசமணி பாலசிங்கம்
யா/ 1293 திரு. பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை
யா/ 1298 திருமதி. மரியம்மா சவரிமுத்து
யா/ 1304 திரு. லெட்சுமணன் பக்கீர்சாமி
யா/ 1307 திரு. தில்லையம்பலம் பாலசுப்பிரமணியம்
யா/ 1316 திரு. தம்பையாப்பிள்ளை ஜேம்ஸ்
நவரட்ணசிங்கம்
யா/ 1323 திரு. அந்தோணிப்பிள்ளை சுவாம்பிள்ளை
அகஸ்ரின்
யா/ 1326 திரு. ஞானேந்திரன் மயில்வாகனம்
யா/ 1335 திரு. கார்த்திகேசு துரைராஜா
யா/ 1338 திருமதி. மாசிலாமணி செபமாலை
யா/ 1340 திரு. சபரிமுத்து செபஸ்தியான் நவரட்ணம்
யா/ 1341 திரு. சின்னையா குகராஜா
யா/ 1344 திரு. ஆறுமுகம் முருகேசு
யா/ 1351 திருமதி. யோசபின் பெஞ்சமின்
யா/ 1354 திருமதி. மேரிஜொஸ்பின் புவிராஜசிங்கி
யா/ 1364 திருமதி. லெட்சுமி அப்புத்துரை
யா/ 1366 திருமதி. மங்கையற்கரசி சின்னத்துரை
யா/ 1376 திரு. தம்பையா அருள்நேசன் தம்பித்துரை
யா/ 1382 திரு. செல்லையா வீரசிங்கம்
யா/ 1388 திருமதி. றோஸ்மலர் பரஞ்சோதி
யா/ 1392 திரு. குமாரசாமி சரவணமுத்து
யா/ 1394 திருமதி. ஆன்யோசப்பின ஸ்ரீபன்
யா/ 1413 திரு. சந்தியா மனுவல் ஸ்ரனிஸ்வொஸ்
யா/ 1417 திரு. சந்தியா மனுவல் ஸ்ரனிஸ்லொஸ்
யா/ 1425 திரு. முத்துவேலு நாகராசா
யா/ 1450 திரு. ஜோசப் ஜோர்ஜ்
யா/ 1463 திருமதி. இராணி சண்முகம்
யா/ 1471 திரு. செல்லையா இரத்தினகோபால்
யா/ 1474 திரு. பஸ்தியாம்பிள்ளை இம்மானுவேல்
யா/ 1489 திரு. அல்வின்தேவக்கிருபை லைமன்
யா/ 1490 திரு. ரொசாரியோ திபூர்சியஸ்
அமிர்தன்கர்வாலோ
யா/ 1496 திருமதி. சிவபாக்கியம் சொக்கலிங்கம்
யா/ 1502 திரு. சிவஞானம் பாவநாசம்சிவன்
யா/ 1511 திரு. விஸ்வலிங்கம் கோமளேஸ்வரன்
யா/ 1524 திரு. பேட்டன் கனகரத்தினம் மேதர்
யா/ 1532 திரு. பொன்னையா பூவிலிங்கம்
யா/ 1540 திரு. ஆசை குமாரசுவாமி
யா/ 1557 திருமதி. மங்கையற்கரசி சுந்தரலிங்கம்
யா/ 1562 திருமதி. பரிபூரணம் பொன்னையா
யா/ 1581 திருமதி. மேரிமாக்கிறேட் நீக்கிலஸ் யேம்ஸ்
யா/ 1587 திரு. சாமிநாதபத்தர் நாராயணசாமி
யா/ 1588 திரு. தம்பு நடராஜா
யா/ 1596 திருமதி. கனகம்மா செல்லத்துரை
யா/ 1600 திரு. கந்தையா சுப்பிரமணியம்
யா/ 1601 திரு. சங்கரப்பிள்ளை கிருஸ்ணபிள்ளை
யா/ 1605 திரு. சிவசம்பு தவராசன்
யா/ 1610 திரு. சின்னத்தம்பி கனகசபை
யா/ 1612 திருமதி. சிவயோகம் கதிரவேலு
யா/ 1621 திரு. எரப்பஞ்செட்டியார் பஞ்சாட்சரம்
யா/ 1629 திரு. எறப்பன்செட்டியார் பஞ்சாட்சரம்
யா/ 1677 திரு. செல்லையா இராசதுரை
யா/ 1691 திருமதி. புஸ்பவதி சண்முகநாதன்
யா/ 1699 திரு. அன்ரன் றெஜினோல்ட் பேதுருப்பிள்ளை
யா/ 1700 திரு. சிதம்பரம்பிள்ளை துரைச்சாமி
யா/ 1705 திருமதி. கமலாதேவி குணபாலசூரியர்
யா/ 1712 திரு. சதாசிவம் சண்முகசுந்தரம்
யா/ 1717 திரு. சின்னையா சூசைப்பிள்ளை
யா/ 1720 திருமதி. மகேஸ்வரி கந்தையா
யா/ 1726 திரு. ஆறுமுகம் பத்மநாதன்
யா/ 1730 திரு. எட்வேட் இராஜரட்ணம் ஆசீர்வாதம்
யா/ 1756 திரு. தவனாயகம் கெங்காதரன்
யா/ 1762 திரு. சூசைப்பிள்ளை ஞானப்பிரகாசம்
யா/ 1764 திரு. வைத்திலிங்கம் சபாரத்தினம்
யா/ 1768 திருமதி. நீலாவதி சிவனேஸ்வரன்
யா/ 1771 திருமதி. கனகவல்லி வேணுகோபால்
யா/ 1779 திரு. பாக்கியநாதன் யோசேப்
யா/ 1780 திருமதி. றோசம்மா அருளப்பு
யா/ 1787 திருமதி. முத்துத்தம்பி மனோன்மணி அம்மாள்
யா/ 1788 திருமதி. பார்பதிப்பிள்ளை நடராசா
யா/ 1797 திரு. நடராசா சண்முகலிங்கம்
யா/ 1799 செல்வன். ஜெகதீஸ்வரன் கணேசமூர்த்தி
யா/ 1800 திரு. சின்னத்தம்பி பரமலிங்கம்
யா/ 1807 திருமதி. பூமணி பொன்னுத்துரை
யா/ 1812 திருமதி. அன்னபூரணம் அழகரத்தினம்
யா/ 1823 திருமதி. லட்சுமி சுப்பிரமணியம்
யா/ 1825 திருமதி. இன்பம் நாகராசா
யா/ 1831 திரு. இரத்தினம் சொர்ணலிங்கம்
யா/ 1848 திருமதி. சரஸ்வதி குமாரசாமி
யா/ 1852 திரு. பொன்னம்பலம் தங்கத்துரை
யா/ 1856 திருமதி. கிறிஸ்ரலோயா யேசுரத்தினம்
யா/ 1860 திருமதி. திரேசம்மா அந்தோனிப்பிள்ளை
யா/ 1863 திரு. சிவப்பிரகாசம் பஞ்சலிங்கம்
யா/ 1875 திரு. நாராயணசாமி சிறீரங்கநாதன்
யா/ 1889 திருமதி. திரேசம்மா அந்தோனிப்பிள்ளை
யா/ 1895 திருமதி. ஸ்ரெலா பிறெட்றிக்
யா/ 1905 திருமதி. பாக்கியம் சின்னத்துரை
யா/ 1914 திருமதி. பூபதி குமாரசாமி
யா/ 1915 திருமதி. ஞானேஸ்வரி செல்லையா
யா/ 1945 திரு. கோணையா தியாகராசா
யா/ 1947 திருமதி. மேலைசா தேவமதி பிளைக்
யா/ 1958 திரு. மோசேஸ் அருளானந்தம்
யா/ 1962 திரு. விஸ்வலிங்கம் வயிரமுத்து
யா/ 1970 திரு. தம்பு துரைராசா
யா/ 1981 திரு. செல்லையா ராஜசூரியர்
யா/ 2001 திரு. யேக்கப் பிரான்சிஸ் இசிதோர்
யா/ 2002 திரு. பஸ்ரியாம்பிள்ளை பிலிப்
யா/ 2006 திரு. நாகலிங்கம் மகேஸ்வரன்
யா/ 2009 திருமதி. மேரிஜேற்றூட் சபாரெட்ணம்
யா/ 2021 திருமதி. திரேசம்மா பிரான்சீஸ்
யா/ 2032 திரு. தம்பிஐயா தியாகராசா
யா/ 2046 திரு. விசுவலிங்கம் இராசலிங்கம்
யா/ 2050 திரு. இராயப்பு வேதநாயகம்
யா/ 2053 திருமதி. அன்னம் பிரான்சிஸ்
யா/ 2060 செல்வி. கிளாறிஸ் தவப்பிரகாசம்
யா/ 2063 திரு. பொன்னப்பா கந்தையா
யா/ 2065 திரு. அருளானந்தம் அல்விறேற்
யா/ 2068 திரு. சங்கரப்பிள்ளை இரத்தினசபாபதி பீற்றர்
யா/ 2070 திருமதி. அன்னம்மா அன்ரனி
யா/ 2073 திருமதி. புனிதம் அருளானந்தம்
யா/ 2079 செல்வி. யசோதா மார்க்கண்டு
யா/ 2085 திரு. தம்பிராஜா ஸ்ரனிஸ்லோஸ்
யா/ 2087 திரு. பிலிப் எமில்
யா/ 2095 திருமதி. லூத்தம்மா கணபதிப்பிள்ளை
யா/ 2113 திருமதி. தில்லையம்மா யோகநாதன்
யா/ 2122 திரு. டோமினிக் அல்பிரட் மரியதாஸ்
குணசிங்கம்.
யா/ 2133 திரு. சுவாம்பிள்ளை பற்றிக்
யா/ 2149 திருமதி. எலிசபெத் ஞானப்பிரகாசம்
யா/ 2159 திருமதி. ருக்குமணி இராஜசிங்கம்
யா/ 2163 திருமதி. றோஸ்சுகிர்தமலர் சக்கறாயஸ்
யா/ 2164 திருமதி. றோஸ்சுகிர்தமலர் சக்கறாயஸ்
யா/ 2167 திரு. நல்லதம்பி பொன்னுத்துரை
யா/ 2180 திரு. இராமலிங்கம் மயில்வாகனம்
யா/ 2184 திரு. பாலசிங்கம் பாலச்சந்திரன்
யா/ 2189 திரு. பாலசிங்கம் பாலச்சந்திரன்
யா/ 2190 திரு. அந்தோனிப்பிள்ளை போல்றாஜா
யா/ 2192 திரு. சுவாமிநாதர் பாலசிங்கம்
யா/ 2193 திருமதி. றோஸ் ராஜேஸ்வரி பெனடிக்ற்
யா/ 2195 திரு. சுவாம்பிள்ளை கபிரியப்பிள்ளை
யா/ 2196 திரு. றங்கன் ரங்கசாமி
யா/ 2200 திரு. கிறிஸ்தோப்பர் றேமன் யோசவ்
யா/ 2212 திருமதி. செபமாலைமரியை சூசைப்பிள்ளை
யா/ 2213 திருமதி. பிரகாசியம்மா துரைராசா
யா/ 2217 திருமதி. இராசமலர் அவுறாம்பிள்ளை
யா/ 2219 திருமதி. நேசமணி சின்னத்தம்பி
யா/ 2220 திரு. சூசைப்பிள்ளை கிறிசோஸ்தம்
யா/ 2224 திருமதி. பூமணி அல்வீன்
யா/ 2230 திரு. சலமோன் அலெக்சாண்டர்
யா/ 2232 திருமதி. அழகம்மா நடராசா
யா/ 2236 திரு. சூசைப்பிள்ளை பிலிப்
யா/ 2245 திருமதி. சரஸ்வதி ஐயாத்துரை
யா/ 2254 திரு. பாவிலுயேக்கப் பிரான்சிஸ்
யா/ 2259 திருமதி. ஞானபுஷ்பம் சிவநாதன்
யா/ 2262 திரு. கார்த்திகேசு கணேசதாசன்
யா/ 2263 திருமதி. ஞானாம்பிகை சிவப்பிரகாசம்
யா/ 2264 திரு. யோவான் சூசைப்பிள்ளை
யா/ 2289 திருமதி. ஞானம்மா மைக்கேல்
யா/ 2293 திருமதி. நவமணி பூலோகசிங்கம்
யா/ 2308 திரு. சிவஞானம் சிவநாதன்
யா/ 2319 திரு. வைரமுத்து யோகநாதன்
யா/ 2320 செல்வி. எலிசபெத் மனோறஞ்சிதமலர் தேவா
யா/ 2325 திரு. அருமைமுத்து செல்வராஜா
யா/ 2330 திரு. அந்தோனிப்பிள்ளை இம்மனுவல்
யா/ 2335 திரு. நீக்கிலாப்பிள்ளை அருள்
யா/ 2340 திரு. கனகரத்தினம் சத்தியானந்தசிவம்
யா/ 2365 திரு. ஆறுமுகம் கிருஷ்ணப்பிள்ளை
யா/ 2367 திருமதி. கிறிஸ்ரினம்மா அந்தோனிப்பிள்ளை
யா/ 2384 திருமதி. சவிரியம்மா சிவஞானம்
யா/ 2385 திருமதி. தனலட்சுமி தங்கநாதன்
யா/ 2386 திருமதி. நாகேஸ்வரி சந்திரசேகரம்
யா/ 2411 திருமதி. மரியகன்னி செபஸ்ரியாம்பிள்ளை
யா/ 2463 திருமதி. அந்தோனிப்பிள்ளை திரேசம்மா
யா/ 2465 திரு. விக்ரர் கிருபைரட்ணம்மேன்
யா/ 2485 திருமதி. அன்னம்மா ஆபிரகாம்
யா/ 2490 திரு. கதிரவேலு சிவபாதலிங்கம்
யா/ 2501 திரு. கயித்தாம்பிள்ளை இறப்பியேல்
யா/ 2539 திரு. கபிரியேல் விக்ரர்
யா/ 2550 திருமதி. குணலக்சுமி கனகசுந்தரம்
யா/ 2551 திரு. சிவசம்பு திருஞானம்
யா/ 2553 திரு. இராசையா சண்முகசுந்தரம்
யா/ 2558 திரு. வேலுப்பிள்ளை சின்னையா
யா/ 2565 திரு. வீரவாகு ஐயாத்துரை
யா/ 2571 திரு. நாகலிங்கம் சிவஞானசுந்தரம்
யா/ 2572 திரு. முத்தையா கனகச்பை
யா/ 2592 திரு. முருகேசு முத்துக்குமாரசாமி
யா/ 2599 செல்வி. தையல்நாயகி சுப்பையா
யா/ 2601 திருமதி. தெய்வானைப்பிள்ளை சதாசிவம்
யா/ 2644 திருமதி. பூரணம் விஸ்வலிங்கம்
யா/ 2645 திருமதி. லூர்த்தம்மா பறுனாந்து
யா/ 2647 திருமதி. செல்லம்மா செல்லத்துரை

(வளரும்)

# வழிகாட்டல் ஆலோசனைச் சேவை காலத்தின் தேவை கருதியதொன்று

## ஒப்பீட்டுக்கல்வியியல் ஆய்வு அடிப்படைத் திறன்பெற உதவும்

இன்றைய நவீன காலத்தின் தரிசனம் மிக்க தமிழறிஞரும் தமிழ்ப் பற்றாளரும் இலக்கியவாதியும் மகத்தான எனது குருநாதருமாகிய பேராசான் மூதறிஞர் சொக்கன் அவர்களின் ஞாபகார்த்த நினைவுப் பேருரையை நிகழ்த்தக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டுப் பெருமையடைகின்றேன். இங்கு நான் முன்வைக்கும் ஆய்வியற் சிந்தனைகளை எனது பேராசான் சொக்கன் அவர்களுக்குக் காணிக்கையாக்குகிறேன்.

எந்த ஓர் இனத்தினதும் சமூகத்தினதும் எதிர்காலத்திற்கும் நல்வாழ்விற்கும் இருப்பிற்கும் முழு நிறைவான கல்வி இன்றியமையாதது. மானுடவியல் அடிப்படையில் உலகளாவிய ரீதியில் இன்று முழுநிறைவான கல்வியின் சகல முகங்களையும் உள்ளடக்கி அபிவிருத்தி நோக்கிய நகர்வுகள் மிக விரைவாக மேற்கொள்ளப்படுகின்றன. உலக நாடுகள் அனைத்துமே நிலையான அபிவிருத்தியை நோக்கி கல்வியை முன்னெடுக்கின்றன. ஆனாலும், தற்போது இலங்கைத் தீவின் நிலைமையை ஆராய்கின்றபோது அது தோல்வியுற்ற- பன்முக நெருக்கடியில் சிக்கித் தவிப்பது புலனாகிறது.

காலனித்துவத்திலிருந்து விடுபட்டு 56 வருட சுதந்திரத்திற்குப் பின்னர் தோல்வி உணர்வைக் கொண்டுள்ளோம். தோல்வியுற்ற அரசு, தோல்வியுற்ற மக்கள், தோல்வியுற்ற சமூகங்கள் என்ற உணர்வுகளே முனைப்பாகவுள்ளன. நிகழ்காலம் பற்றியும் எதிர்காலம் பற்றியும் உள்ள நம்பிக்கைதான் சமூக நிலை பற்றிய அளவு கோல் எனின் கடந்த காலத்தில் சிற்சில வெற்றிகளையும் நோக்க வேண்டியுள்ளது. மனித அபிவிருத்திக் குறிகாட்டி, பால்நிலை சமத்துவக் குறிகாட்டி, பெருந்தோட்டங்கள், ஆடைக்கைத்தொழில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு, வீடமைப்புத் திட்டங்கள் என்பவை வெற்றிகளுக்கான உதாரணங்களாக உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை கடந்த மூன்று தசாப்தங்களுக்கு முற்பட்டவை.

பின் வந்த இரு தசாப்தங்களும் தோல்விகளையே தளமாகக் கொண்டவையாகவுள்ளன. இவற்றில் உள்நாட்டு யுத்தம், இளைஞர் கிளர்ச்சிகள், இனவாத அடக்கு முறைகள், விழுமியங்களின் சீரழிவுகள், திறமையற்றவர்களினதும் சுயநலவாதிகளினதும் நிர்வாகம், சந்தர்ப்பவாத அரசியல், தடையற்ற நுகர்ச்சி விளம்பரக் கலாசாரம், கலாசாரச்சீரழிவுகள், வரட்சி, இயற்கைச் சூழல் மாசடைதல், சுனாமித் தாக்கங்கள், ஏற்க முடியாத அளவில் இளைஞர் வேலையின்மை, மாயமாகி நிற்கும் நிரந்தர சமாதானம், வன்முறைகள், போதைப் பொருள் பாவனை, சிறுபாலியற் துன்புறுத்தல்கள் இவைதான் இன்றைய இலங்கைத் தீவின் நிலைகள். இவை தோல்வியுற்ற மாறும் நிலையினூடு நெருக்கடியை எடுத்துக் காட்டுகின்றன.

மேலும் சிறந்த வாழ்க்கையை நடத்துவதற்கு வேண்டிய அறிவு, விளக்கம், செயற்றிறன்கள், மனப்பாங்குகளைக் கொண்ட மாணவர்களை எமது கல்வி முறை வழங்கத் தவறிவிட்டது எனவும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. புத்ததாக்கங்கள் (Innovative), புதிய சீராக்கங்கள் (Modifications), பல்லூடக வெளிப்படுத்தல்கள் (Multi media Presentation), ஒழுக்கம், மற்றவர்களுக்கு மதிப்பளித்தல், சகிப்புத் தன்மை, அன்புடைமை என்பவற்றுடன்கூடிய பண்பாட்டுவிழுமியங்களைக் கொண்ட முழுமையான ஆளுமை விருத்தியை மாணவர்களுக்கு அளிக்க முடியாத பாடசாலைச் சூழ்நிலைகள் நிலவுகின்றன. இவற்றிலிருந்து விடுதலை பெற-

1. கல்வியினூடும், ஆசிரியர்களினூடும் வழிகாட்டல் சேவையைப் பிரயோகித்தல்.
2. கல்விக்கான வாய்ப்புக்களை விரிவாக்குதல்.
3. கல்வியின்தரத்தைமேம்படுத்தி, பாரம்பரிய விழுமியங்களைக் கைக்கொள்ளும் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
4. செயல்முறை மற்றும் தொழில்நுட்பத் திறன்களை விருத்தி செய்தல்.
5. ஆசிரியர் அதிபர்களுக்கு வினைத் திறனான பயில்வுகளை வழங்குதல்.
6. சுய கற்றல் கற்கக் கற்றல் தேர்ச்சி (Learning to learn), சேர்ந்து வாழ்வதற்குக் கற்றுக்கொள்ளல் (Learning to Live together), ஆற்றுவதற்காகக் கற்றுக்கொள்ளல் (Learning to do), அறிந்து கொள்வதற்காகக் கற்றுக்கொள்ளல் (Learning to Know ), ஆவதற்காகக் கற்றுக் கொள்ளல் (Learning to be) என்ற திறன்களை மாணவர்களுக்கு வழங்குதல் என்ற வகையில் சமூக வியாபகமான நோக்குகளின் தீய விளைவுகளில் இருந்து வளரும் பிள்ளைகளைப் பாதுகாத்தல், பெற்றோர்- பிள்ளைகள்- சமூகத்தவர்கள் ஆகியோருக்கு வழிகாட்டி ஆலோசனை வழங்கல் என்பனவும் புதிதாகச் சாதிக்க வேண்டியவையாகவுள்ளன.

தற்போதைய எமது கல்வி முறையானது முறைசார்- முறைசாரா ரீதியில் பல்வேறு பரிமாணங்களில் கல்வியியல் நிபுணர்களினால் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இவர்களின் கண்டுபிடிப்புக்கள் கல்விக் கொள்கை உருவாக்கங்களில் புகுத்தப்படுகின்றன. இத்தோடு ஏனைய நாடுகளின் கல்வி முறைமைகள் ஆராயப்பட்டு அவற்றுள் நல்ல அம்சங்கள் எமது கல்விச் சீர்திருத்த முன்மொழிவுகளில் சேர்க்கப்படுகின்றன. இவ்வடிப்படையில் இன்று சர்வதேச ரீதியாகக் கல்வியியல் ஆய்வுச் செல்நெறிகளில் ஒப்பீட்டு ஆய்வே (Comperative Research) முதன்மையாகவுள்ள சூழலில் நோர்வே, இலங்கை, எதியோப்பியா ஆகிய நாடுகளில் இடைநிலைப் பாடசாலைகளின் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை தொடர்பான எனது ஆய்வை இயம்ப முற்படுகின்றேன். இவ்வேளை நான் கல்வி ஆய்வுகள் நிமித்தம் நோர்வே, கனடா, ஜப்பான், பிரான்ஸ், இந்தியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் மேற்கொண்ட சுற்றுப் பயணங்கள் நிறைந்த அனுபவங்களை எனக்குத் தந்தன. பல ஒப்பீட்டுக் கல்வியியல் ஆய்வு அடிப்படைத் திறன்களைப் பெற வாய்ப்பாக இருந்தமையையும் இவ்வேளை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

### வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் (Guidance and Counselling)

உலகளாவிய ரீதியில் இன்று மிக வேகமான சமூக மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமுள்ளன. இம் மாற்றங்கள் குடும்பம், பாடசாலை ஆகிய முக்கிய சமூக அலகுகளைப் பல்வேறு தாக்கங்களுக்கு உட்படுத்துகின்றன. இத்தாக்கங்களின் விளைவாகப் பிள்ளை - பெற்றோர் தொடர்பு குறைதல், ஆசிரியர் - மாணவர் உறவு சிதைதல், பிளவுபட்ட குடும்பங்கள், கலாசாரச் சீர்கேடுகள், விழுமியங்களின் சிதைவு, இடைவிலகல், மனித உரிமை மீறல்கள் போன்ற தீய தாக்கங்களுக்குச் சமூகங்கள் ஆளாகி மோசமான நிலையில் காணப்படுகின்றன. இந்நிலையிலிருந்து விடுபட உகந்த நெறிமுறையாக வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் சேவை காணப்படுகின்றது. பண்டைய சமூகத்தில் நிலவிய பாரம்பரிய நம்பிக்கைகள், குடும்ப உறவுகள், மூத்தோர் வழிகாட்டல்கள், சமய பழக்க வழக்கங்கள், இயல்பாகவே வழிகாட்டல், ஆலோசனை வழங்கும் அம்சங்களாகச் செயற்பட்டன. இன்று இந்நிலை முற்றாக மாற்றமடைந்துள்ளது. இம்மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து இசைவாக்கம் அடையவைக்கும் செயன்முறையாகவும் ஆலோசனை வழிகாட்டல் சேவை அமைகின்றது.

இங்கு வழிகாட்டல் என்பது சரியானதைத் தெரிவுசெய்தல், பொருத்தப்பாடு காணல், பிரச்சினையைத் தீர்த்தல் ஆகியவற்றில் ஒருவர் மற்றவருக்கு ஆற்றும் உதவியாகவே வழிகாட்டல் அமைகின்றது. அதாவது, வாழ்க்கையின் சகல சந்தர்ப்பங்களிலும், எல்லாப் பருவங்களிலும் சூழலுடன் இசைவாக்கம் காணவும், சுயதிறன் விருத்தி செய்யவும், தீர்மானங்களை மேற்கொள்ளவும், உளவியல் அணுகுமுறை அடிப்படையில் வழங்கப்படும் உதவியாகவும் வழிகாட்டல் பரிணமிக்கின்றது. இப்பரிணமிப்பின் ஒரு முக்கிய கூறாகவே ஆலோசனை வழங்கல் அமைந்துள்ளது. இது ஆலோசனை நாடித் தனது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஆலோசகரை நேர்முகமாகச் சந்தித்துப் புரிந்துணர்வுடன் கலந்துரையாடி சுயவிளக்க அடிப்படையில் தனது பிரச்சினைகளைத் தானே தீர்ப்பதற்கான உதவி வழங்கும் அம்சமாக ஆலோசனை வழங்கல் சேவை உள்ளது. இன்று உலகளாவிய ரீதியில் மனிதர்கள் அனைவருக்குமே இவ் ஆலோசனை வழி காட்டல் சேவை மிக அவசியமாகவுள்ளது. இது உளவளத்துணைக்கான அடிப்படைகளையும் வழங்குகின்றது.

அடிப்படையான உளவளத்துணை இருவருக்கிடையில் ஏற்படும் நெருங்கிய உறவை வளர்க்க உதவுவதற்காகப் பயன்படுகின்றது. தொடர் உள ஆற்றல்கள், திறன்கள், உறவாடும் நிலைகள் இம்முறைமையின் மையங்களாகவுள்ளன.

மேலும் அடக்கி ஒடுக்கப்படும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தி ஆறுதல் பெறுவதற்கு ஒரு பாதுகாப்பான சூழலையும் இது உருவாக்குகின்றது. இவ்வாறான செயற்பாட்டில் உளவியல் விழிப்புணர்வும், உள்ளார்ந்த ஆற்றலும், ஆளுமை வளர்ச்சியும் ஏற்படுகின்றது. மன நலவியலில் (Mental Hyging) புத்தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றது. இவ்வகையில் பாடசாலைக் கல்வியுடன் வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் சேவையும் மாணவர்களுக்கு மிகுந்த அவசியமாக இன்றைய நிலையில் உள்ளது.

(வளரும்)




மூதறிஞர் கலாநிதி சொக்கலிங்கம் (சொக்கன்) நினைவாக யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரியில் அண்மையில் நினைவுப் பேருரை நிகழ்த்தப்பட்டது. 'இடைநிலைப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை- ஒப்பீட்டு ஆய்வு- நோர்வே - எதியோப்பியா- இலங்கை'' என்ற பொருளில் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன், உப பீடாதிபதி பா.தனபாலன் ஆகியோர் இந்த நினைவுப் பேருரையை நிகழ்த்தினர்.

### கல்விக்களம்

# கல்விச்சாலைக் காட்சிகள்



சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாசாலையில் அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின்போது சித்தன்கேணி சிவன் கோயிலைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ சபா உமாபதி சர்மா ஆசியுரை வழங்குவதையும், மேடையில் வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்ப் பிரிவு) செல்வி வி.கந்தையா, அதிபர் எஸ்.சந்திரசேகரம், லண்டனில் இயங்கும் 'இரத்தினம் பவுண்டேசனை' ச் சேர்ந்த இ.நித்தியானந்தம், நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

(படம்; சங்கானைச் செய்தியாளர்)



புலோலி புற்றளை மகாவித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். பாடசாலை அதிபர் எம்.அனந்தீஸ்வரன் அருகில் காணப்படுகின்றார்.

*(படம்: வடமராட்சிச் செய்தியாளர்)*



நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் பெயர் வளைவை முன்னாள் பிரதேச சபைத் தலைவர் வ.சங்கரப்பிள்ளை திரைநீக்கம் செய்துவைப்பதைப் படத்தில் காணலாம். மேற்படி பெயர் வளைவை லண்டனில் வசிக்கும் பாடசாலையின் பழைய மாணவன் ச.அருள் வாதன் அன்பளிப்புச் செய்திருந்தார். பாடசாலையின் அதிபரும் படத்தில் உள்ளார்.



சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை பரிசில் நாள் விழாவில் மாணவர்கள் தேவாரம் இசைப்பதையும், விருந்தினர்களாகக் கலந்து கொண்டதென்மராட்சிக் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப் பாளர் கு.பிரேமகாந்தன், கோட்டக் கல்வி அலுவலர் நா.சத்தியதாசன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாய பிள்ளை, யாழ்.பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளை உதவிப் பதிவாளர் யோ.ஜெயக்குமார் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்: தென்மராட்சிச் செய்தியாளர்).*

# வடக்கு - கிழக்கு கல்வி நிலைவரம் குறித்து ஜனாதிபதி தலைமையில் நாளை மாநாடு

காரைதீவு,ஓக.23

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பான மாநாடு ஒன்று நாளை புதன்கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது.

மாகாணத்தின் கல்விப் பிரச்சினைகள் தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், கல்வி அமைச்சின் செயலாளர், மேலதிகச் செயலாளர்கள், தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆசிரியர் சங்கப்பிரதிநிதிகள் ஆகியோருடன் ஜனாதிபதி விரிவாகக் கலந்துரையாடுவார் என்று கூறப்பட்டது.

இந்த மாநாட்டில் தொண்டராசிரியர் பிரச்சினைகள், ஒப்பந்த ஆங்கில ஆசிரியர் பிரச்சினைகள், இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் பற்றாக்குறை, பதில் அதிபர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரை நிரந்தரமாக்கல், மாணவர்களது பிரச்சினைகள் உட்படப் பல விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தூதுக்குழு வடக்கு - கிழக்கின் கல்விநிலைவரம் குறித்து ஜனாதிபதிக்கு விரிவாகக் கூறும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தூதுக்குழுவில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம், சிரேஷ்ட துணைப்பொதுச்செயலாளர் த.பஞ்சலிங்கம் ஆகியோர் இடம் பெறுவர்

இதற்கிடையில் - யாழ்.மாவட்ட ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை கல்வி அமைச்சின் செயலாளருடன் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரும் யாழ்.மாவட்ட வலயக்கல்விப் பணிப்பாளர்களும் கலந்துரையாடவுள்ளனர். (எ-84-203-410)

# சம்பளமற்ற படிப்பு விடுதலைக் காலத்துக்கும் புள்ளிவழங்க பட்டதாரி ஆசிரியர்கள் கோரிக்கை

மட்டக்களப்பு, ஓக. 22

சேவையிலுள்ள ஆசிரியர்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவைக்கான பதவி உயர்வு, உள்ளீர்ப்பு என்பனவற்றை மேற்கொள்ளும் போது பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காக ஆசியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளமற்ற படிப்பு விடுதலைக் காலத்திற்கும் புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும் என ஸ்ரீலங்கா பட்டதாரி ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைஆசிரியர்சேவைக்கென பதவி உயர்வு வழங்கும்போது ஆசிரியர் ஒருவர் தனது சேவைக்காலத்திற்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட சம்பளமற்ற விடுமுறைகளுக்காக புள்ளிகள்வழங்கப்படுவதில்லை. இந்நடைமுறையானது வெளிநாட்டு வேலைவாய்ப்பு வேறு நோக்கங்களைப் பொறுத்த மட்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட சம்பளமற்ற விடுமுறைகளைப் பொறுத்து பொருத்தமான தீர்மான மாக இருக்கலாம்.

1981ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்குக் கல்வி அமைச்சு சம்பளமற்ற படிப்பு லீவை வழங்கி வருகின்றது. ஆகக்கூடியது 4 ஆண்டுகளுக்கு இப்படிப்பு லீவு வழங்கப்படுகின்றது.

இக்காலப்பகுதி இவ்வாறு சம்பளமற்ற லீவாகக் கணிக்கப்படுவதால் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர் தனது சேவைக்காலத்தில் 4 புள்ளிகளையும் பயிற்றப்படாத ஆசிரியர் 2 புள்ளிகளையும் இழக்கின்றார்.

2004.12.31ஆம் திகதி வரை வயது வேறுபாடின்றி இலங்கை ஆசிரியர் சேவையின் முதலாம் தரத்திற்குப் பதவி உயர்வு வழங்குமாறு கல்வி அமைச்சு புதிய சுற்றறிக்கையை வெளியிட்டுள்ள போதிலும் சகல தகைமைகளைக் கொண்டிருந்தும் இவ்வாறான புள்ளிக் குறைவினால் பட்டதாரி ஆசிரியர்கள் சுற்றறிக்கையின் பலனை அனுபவிக்க முடியாதுள்ளனர்.

எனவே, ஆசிரியர்கள், தமது பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காக பெற்றுக்கொண்ட சம்பளமற்ற விடுமுறைக் காலத்திற்கும் புள்ளிகளை வழங்கி பதவி உயர்வு வழங்கப்படல்வேண்டும்.

- இவ்வாறு இலங்கைப் பட்டதாரி ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்திருக்கின்றது. (எ-க)

## 51ஆவது படையணியின் ஆண்டுநிறைவு மரியன்னை பேராலயத்தில் திருப்பலி

குருநகர் ஓக.23

51ஆவது படையணியின் 10 ஆவது ஆண்டு நிறைவுநாள் தினமான நேற்றுமுன்தினம் யாழ்.மரியன்னை பேராலயத்தில் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்து.

அன்றையதினம் காலை 7.45 மணிக்கு இடம்பெற்ற இத்திருப்பலியில் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் இருந்து வருகைதந்த இரு சிங்களக் குருமாரும் கலந்துகொண்டனர். இத்திருப்பலியில் இராணுவத்தினர் பெருமளவில் கலந்துகொண்டனர். திருப்பலி நிறைவில் திருப்பலியில் கலந்துகொண்ட பக்தர்களுக்கு 51 ஆவது படையணியினரால் குளிர்பானம் வழங்கப்பட்டது. (எ-51)

*ஜனாதிபதித் தேர்தல் ஆதரவு:*

## மு.கா. தலைவருடன் பேச ஓடித்திரிகிறது அரசாங்கம்!

கொழும்பு, ஓக.23

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவது பற்றி ஆலோசிக்கிறது என்று செய்திகள் வெளிவந்துள்ள நிலையில், அக்கட்சியின் தலைவருடன் இரகசியப் பேச்சுகளை நடத்தும் முயற்சியில் அரசின் முக்கியஸ்தர்கள் பலர் ஓடித் திரிகின்றனர் என்று தெரிகிறது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவருடன் பேச்சுகளை நடத்துவதற்கு உதவுமாறு கோரி அரசின் பிரதியமைச்சர் ஒருவர், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினரொருவரை நாடியுள்ளார். எனினும், அந்த முயற்சி கைகூடவில்லை என்று கூறப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சார்பான வகையில் இருக்கிறார் என்பதால் அரசின் முயற்சி கைகூடாதென்று மேற்படி முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தப்பட்ட பிரதியமைச்சருக்குத் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டார் எனத் தெரியவருகிறது. (எ-க)

## கௌரவிப்புக்குத் தெரிவான வலி.தென்மேற்கு விவசாயிகள்

வலி.தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 3 விவசாயிகள் சிறந்த விவசாயிகள் கௌரவிப்பிற்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கௌரவிப்புப் பெறத் தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளின் பெயரும், துறைபற்றிய விவரமும் வருமாறு:

சிவசம்பு அம்பிகைபாகன் - (நெற்செய்கை), செல்வராசா சந்திரலீலா - (வீட்டுத்தோட்டம்), சின்னையா விக்னேஸ்வரன் -(வினைத்திறனாக நிலத்தைப் பயன்படுத்தல்).

மேற்படி விவசாயிகளுக்கான கௌரவிப்பு விரைவில் நடைபெறும் என்று கூறப்பட்டது. (எ-185)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.23

நல்லூர் முருகன் ஆலயப் பெருந் திருவிழாக் காலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் 14 ஆம் நாளான இன்று செவ்வாய்க்கிழமை செல்வம் நாகராசாவின் பாட்டு இடம்பெறும்.

அணிசெய்கலைஞர்கள் வயலின் - ஜனனி நல்லைநாதன் மிருதங்கம் - எம். சிதம்பரநாதன், கெஞ்சிரா - ரி.சண்முகசுந்தரம். (எ-203)

* * *


யாழ்ப்பாணம்,ஓக.23

நல்லூர் முருகன் ஆலயப் பெருந் திருவிழாவை முன்னிட்டு நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய மண்டப அரங்கில் கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா கந்தபுராணம் என்ற தலைப்பில் ஆற்றிவரும் தொடர் சொற்பொழிவில் இன்று 'பிரணவ உபதேசம்' பற்றி உரையாற்றுவார். (எ-203)




# நல்லூர் உற்சவ காலச் சிறப்பகம்

பதினான்காம் நாள் திருவிழா



## நல்லூரான் திருவடி - 8



வந்ததிலும் போனதிலும்
மனதை வையாதேயென
விந்தையுடன் சென்னானெடி - கிளியே!
விளங்கு நல்லூர் வாசனடி.

*- யோகர் சுவாமிகள்.*

## நல்லூர்க் கந்தன் நாடகம் பார்ப்போம்

நல்லூர் முருகனிடம் என்ன இருக்கிறது
நாளும் பக்தர் கூட்டம் குவிகிறது
கல்லாய் இருப்பவன் கருணை புரிவானா?
கடவுளை நம்பியோர் கைவிடப் படாரா
எல்லாம் அவனது செயலெனச் சொல்கிறார்
இருளில் ஒளியாய் இருக்கிறான் என்கிறார்
நல்ல கதையிது நாமும் பார்ப்போம்
நல்லூர்க் கந்தன் நாடகம் அதனை

*- வ.யோகானந்தசிவம்*

## வாழ வழிகாட்டுமய்யா!

*நல்லூரின் வேந்தனே! நல்லோரின் சேவகனே!
நற்றமிழ் காக்க வந்த நல்லை வேலவனே!
பன்னிரு கரத்தோனே! பரமனின் தோன்றலே!
பக்தர் கண்ணீர் துடைக்கவந்த பழனி வேலவனே!
வேதனைகள் சுமந்து - சோதனைகள் பல தாண்டி-
வேலனே உனைக்காண விரைந்தோடி நாமிங்கே
வந்த வழி மறந்துவிட்டோம்! போகும் வழி தெரியாது!
பேச்சிருந்தும் ஊமைகளாய் புழுதியிலே புரள்கின்றோம்!
பாலமுருகனே! உன் பாதம் சரணடைந்தோம்-
பாவியரை மன்னித்து வாழ வழிகாட்டுமய்யா!*

*- சி.சிவகௌரி*

## அருள்வாய் முருகா !

வெற்றிவேல் கொண்டுசூர பத்மனை வதமேசெய்து
விண்ணவர் துயரம்தீர்த்த வீரனே கந்தவேளே!
பற்றினோம் உந்தன் பாதம் பாராது உய்யநல்லைப்
பதியினில் உறையும்பால சண்முகா எமக்குவந்து
உற்றதாம் துயரம் தீர்த்து உகந்ததாம் தீர்வு தந்தே
அகிலத்தில் அனைவர்வாழ்வும் ஓங்கிடச் செய்வாயப்பா
சுற்றியே வருகின்றோமுன் சுந்தரக் கோவிலப்பா
சிவன்திரு மைந்தா உந்தன் திருப்புகழ் பாடிப்பாடி

*-நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்*

## எழில் காண ஓடிவா

பல்லவி
கந்தன் எங்கள் கைக்குழந்தை
நல்லூரின் தேவ மைந்தன்
அனுபல்லவி
ஆராரோ பாடி நாங்கள்
அணைத்து முத்தம் கொடுப்போமடி
சரணம்
தேவாதி தேவன் மைந்தன் தேவி உமை பாலனவன்
தெவிட்டாத தேனமுதம் செந்தமிழின் சொற்கமவன்
புன்முறுவல் பூர்க்கிறான் அன்புப் பார்வை பார்க்கிறான்
ஓடி வாடி நல்லூருக்கு கந்தனவன் எழில் காண

நல்லூரான் ஆலயமோ தூய்மையின் சொற்கமடி
அமைதியின் மத்தியிலவன் அணிதிரண்டு வருவானடி
உற்றுமொய்க்கும் கண்களுடன் ஒன்றிணைந்து நிற்பானடி
உத்தமன் முருகனின்பம் நல்லூரில் காணவாடி

*மலர்.சின்னையா*

## நலத்தையீவாய்!

பாலுடனே தேன்கலந்த வாறுபோல
பைந்தமிழால் உனைப்பாடும் பேறுபெற்றேன்.
காலமெலாம் உனைத்தேடி ஓடுகின்றேன்
கந்தாவுன் கடைக்கண்ணால் பார்த்திடாயோ?

சீலத்தால் சிறந்தொளிரும் சிவனின் மைந்தா!
சித்தமதைச் சிதறாது சீராய்க் - காத்து
ஞாலமதில் நம்மினத்தின் வீரமோங்கி
நல்லாட்சி பெற்றிடவே நலத்தையீவாய்!

*கே.மகேஸ்வரி*

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

புதிய டிஜிற்றல் வீடியோ JVC Model No - 160 x, டிஜிற்றல் கமெரா Casio Qv-R40, கையடக்கத் தொலைபேசி motorola V 545, கையடக்கத் தொலைபேசி NOKIA 8310 என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 234, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 021 222 2573. (சி-44554)

சண்டெல் தொலைபேசி விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 077 3276347. (39171)

300 பதிவுசெய்யப்பட்ட வீடியோ கசற், 250 ஒறிஜினல் வீடியோ சீடி, றெம்மி ஓடியோ சீடி, றெக்கோடிங் செற், T.V., டெக் வீடியோ கடைக்குத் தேவையான கண்ணாடித் தளபாடங்கள் நேரில் 712, காங்கேசன்துறை வீதி, சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். T.P.: 077 3024410. (சி-44728)

பருத்தித்துறை, முதலாம் கட்டை சந்தி பிரதான வீதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: V.யோகேஸ்வரி வியாபாரிமூலை, பருத்தித்துறை T.P.: 226 3278. (சி-44729)

## வீடு விற்பனைக்கு

நாமகள் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கில் (பொற்பதி வீதி) உள்ள புதிய வீடு 3 அறை, கோல், குசினி Open Varandch, bulcany (மொட்டமாடி) உடன் கூடிய தரமான வேலைப்பாடுகள் நிறைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: ப.சிவதாஸ், நாமகள் ஒழங்கை, கொக்குவில் கிழக்கு. (39181)

## தேவை

யாழ்.மடத்தடியில் வசிக்கும் ஆசிரியர் குடும்பம் ஒன்றிற்கு குழந்தையைக் கவனிப்பதற்கு (8.30-5.00 வரை) ஒருவரும், சமயல் வேலை செய்வதற்கு ஒருவரும் (சமையல் முடிய வீடு செல்லலாம்) தேவை. தொடர்பு: விளம்பர இல. 2679, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (39164)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் ஆஸ்திரேலியா குடியுரிமையுடைய 1975 கார்த்திகை, இடபராசி 4இல் செவ்வாய் 36¼ கிரக பாவம் உயரம் 5'8" B.Sc. Engineering and Electrical - Electronics M.Sc Soft ware Hard Ware, CIMA full Qualified பொறியியலாளர் மணமகனுக்கு அழகான M.B.B.S மணப்பெண் தேவை. தொடர்பு: சிவாலயா நல்லூர் T.P. 021 222 7844. (39185)

யாழ்.இந்து கௌரவ குடும்பம் பிரித்தானிய குடியுரிமை 1977 மூலம் தனுசுராசி உயரம் 5'5" கிரகபாவம் -38 U.K பல்கலைக்கழகத்தில் கம்பியூட்டர் எஞ்சினியரிங் முடித்து எஞ்சினியராக பணிபுரியும் மணமகனுக்கு அழகான பட்டதாரி மணமகள் தேவை. புகைப் படத்துடன் தொடர்பு கொள்ளவும். சிவாலயா, T.P.: 021 222 7844. (39186)

யாழ்.இந்து கௌரவ குடும்பம் அமெரிக்க குடியுரிமை 1976, உத்திரம் கன்னிராசி 7இல் செவ்வாய் A/L Diploma in Computer Science Technizian (மிதிவெடி வெடித்து ஒரு கால் பாதிப்புக்கு உள்ளானவர், சுயமாக வேலை செய்யக் கூடியவர்) மணமகனுக்கு படித்த தியாக மனப்பான்மை உடைய மணமகள் தேவை. சீதனம் எதிர் பார்க்கப்படமாட்டாது. தொடர்பு: சிவாலயா சர்வதேச திருமண நிலையம், 68/15, சட்டநாதர் வீதி, நல்லூர் T.P.: 021-222 7844. (39184)

## தவறிவிட்டது

சிவபாலன் விஜயராகவன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (841131983V), வாகன அனுமதிப்பத்திரம் (Ao110 16056), வர்த்தக வங்கி கற்அட்டை என்பன பணப்பையுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும் தொடர்பு: சி.விஜயராகவன், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை, T.P.No.: 0773086909 (சி-44730)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர்-1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 24.08.2005 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முற்கூட்டியே மேற்கொள்ளவும். றஜீவ் -ஆனைக்கோட்டை, தாரகை - முதலாம் கட்டை, பருத்தித்துறை. றஞ்சித் - 517, ஸ்ரான்லி றோட், றாதா- மாவடி வட்டுக்கோட்டை, ரவி -சாவகச்சேரி. T.P 021-222 3529, 021-222 2867. (39188)

## வீடு வாடகைக்கு

கந்தர்மடத்தில் வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: 0776736871. (39187)


### விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ். போன் சொப்**

10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (றீ ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.

(சி.44496)


## கட்டுத்துவக்கு வெடித்துக் காயம்

கட்டுத்துவக்கு வெடித்து குடும்பஸ்தருக்கு காலில் காயமேற்பட்டது.

மிருசுவில் கெற்பேலியில் கடந்த வியாழனன்று இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கந்தையா கேதீஸ்வரன் (வயது 34) என்பவரே காயமடைந்தவராவார்.

வலது காலில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

தோட்டவேலை முடிந்து பற்றைக்காடுகளுக்கூடாக வீடு நோக்கி வந்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-117)


## மனமுவந்து பாராட்டுகின்றோம்



மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளராக கடமையாற்றிய

**துரைசிங்கம் ரகு**

அவர்கள் தனது ஆற்றல், அறிவு என்பவற்றினால் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வு பெறுவதையிட்டு நாம் பேருவகையடைவதுடன் அவர் மேன்மேலும் உயர்வு பெற்றுப்பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

யோய்ஸ் பார்மசி, பிரதான வீதி, மானிப்பாய். T.P:222 2754

### பால் விநியோகம்

அராலி மத்தி செல்லப்பா முத்துக்குமாரசாமி பாற் பண்ணையூடாக இப்பகுதி மக்களுக்கு நேரடியாக வீடுகளுக்குச் சென்று பால் விநியோகிக்கப்படும். 1 போத்தல் 25/= தேவையானோர் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: செல்லப்பா முத்துக்குமாரசாமி அராலி மத்தி, வட்டுக்கோட்டை.

(C/44733)(21.34.15)

## இந்திய பரம்பரை ஜோதிடர்



அருள்வாக்கு

**அம்பிகா அம்மா**



மீண்டும் யாழ். புண்ணிய பூமிக்கு வருகை தந்துள்ளார்.

கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும்

உங்களின் எதிர்காலப் பலன்களை அறிந்து கொள்ளவும் உங்களின் வாழ்வில் வெற்றியும், சுபிட்சமும் அடையவும் அருள்வாக்கு அம்பிகா அம்மாவை நேரில் ஒரு முறைசந்தியுங்கள்.

அம்மாவைச் சந்திக்கும் இடம்:

அருள்வாக்கு அம்பிகா அம்மா, 121.கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (ஸ்ரீமுருகன் ஜுவல்லர்ஸ் / நியூ லிங்கம் கூல்பார் அருகில்)


## UNIVERSITY OF JAFFNA, SRILANKA

# VACANCY

Applications are invited by me up to 19th September 2005, from suitably qualified candidates for the following post:

## ASSISTANT REGISTRAR

**(LEGAL & DOCUMENTATION)**

*Qualifications :* L.L.B.Degree of a recognized University/Attorney - at - Law with not less than 03 years experience in Court Work, Legal Work relating to Corporations/Companies and in drafting legal documents.

*Age:* Not more than 45 years

*Selection:* By Structured Interview

*Salary scale :* Rs.16,870-3x420-18,130(EB)19,895-12x585 -26,915p.m.

(with effect from 01.01.2006)

*Salary Payable upto 31.12.2005 :* 14,550

plus allowances as indicated below

1. Interim allowance approved in 2000
2. Interim allowance approved in 2001
3. Interim allowance approved in 2005

*STATUTORY BENEFITS*

a.Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System.

b.Gratuity payments.

c.Employment Trust Fund benefits.

d.Free medical services

Applications should be made on the forms available in the office of the Senior Assistant Registrar/Establishments of this University on a payment of Rs.20/= for each application form at the People's Bank, University of Jaffna Branch or at the Shroff's Counter of this University. Those who wish to obtain the forms by post should send a Money Order/Postal Order to the value of Rs.20/= in the name of the Bursar, University of Jaffna, together with a self addressed Rs. 4.50 stamped envelope of 23x10 cm, in size. Applications sent on **specified forms** will only be accepted.

Applicants from Government Departments/State Corporations and Statutory Bodies should apply through their appointing authority. Age limit is not applicable to those who are in service. Applications from Retired Officers or persons who are over 45 years will also be considered for appiontment on **contract** basis.

Applications received after the closing date will be rejected without intimation.


**REGISTRAR,**
University of Jaffna, Srilanka.
22.08.2005.

(C/44731)(42)


## கணபதி ஜோதிட நிலையம்



**பண்டிட் ஐயப்ப சாஸ்திரி**



இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிற்குப் பரிகாரம் கூறுவார். ஒரு முறை சந்தியுங்கள்.

தொடர்பு: **SHANJAEYA REST HOUSE,**
NO.5, RAKKA ROAD (ICRC Office அருகில்),
JAFFNA.T.P.: 077 9173940. (39182)(26.19)


## கண்ணீர் அஞ்சலி

*யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை ஆசிரியர்*

திரு. கு.ஜெயபாலீஸ்வரனின் *அன்புத்தாயார்*

**திருமதி குமாரசாமி இராசம்மா**

அவர்களின் திடீர் மறைவைக் கேட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர் கழகம்,
யா/வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை.

*(சி.44733)(21-34-15)*

## கண்ணீர் அஞ்சலி

*நல்லூர் கமநலசேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்*

**திருமதி மனோகரன் பாமா** *அவர்களின் தாயார்*

*அமரர்* **பார்பதி கந்தப்பு**

*20.08.2005 அன்று இறைபதம் எய்தியுள்ளார்.இவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு இவர் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

உதவி ஆணையாளர் கமநல அபிவிருத்தித் திணைக்களம் - யாழ் மாவட்டம், திணைக்கள உத்தியோகத்தர்களும், நல்லூர் கமநல சேவைக்குழு உறுப்பினர்களும் - உத்தியோகத்தர்களும், கமத்தொழில் காப்புறுதிச் சபை உத்தியோகத்தர்களும்.

(32-21-34-15) (39175)

## மரண அறிவித்தல்

**கணபதிப்பிள்ளை விசுவலிங்கம்**

*(விசுவலிங்கம் பேக்கரி உரிமையாளர்)*

நெடுந்தீவு கிழக்கு, 15 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கணபதிப் பிள்ளை விசுவலிங்கம் 2005.08.20ஆம் திகதி சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும் தவமணி, குணமணி, கோணேஸ்வரி, பரராசசிங்கம் (றோ.க.மகளிர் கல்லூரி- நெடுந்தீவு), கமலேஸ்வரி (கனடா) மங்களேஸ்வரி (டென்மார்க்), றஞ்சிதமலர் (ஆசிரியை றோ.க.மகளிர் கல்லூரி -நெடுந்தீவு), அமிர் தலிங்கம் (அஞ்சல் திணைக்களம் -யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பற்றிக் ரவீந்திரன், பாலச்சந்திரன், தனலட்சுமி (அரசினர் வைத்தியசாலை - நெடுந்தீவு), கணேசமூர்த்தி(கனடா), சத்தியதாசன் (டென்மார்க்), பத்மலிங்கம் (பல.நோ.கூ.சங்கம்- நெடுந்தீவு) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற கமலம் (அன்னம்), அம்பலவாணி (விசுவமடு), றோஸ்மேரி ஆகியோரின் சகோதரரும் சுபானு, சஜித், சானுஜன், பிரதீபன், தர்மியா, மதுரா, தனுசன், மேனுசன் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.08.2005) புதன் கிழமை பி.ப.2 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கிழக்கு கட்டுறாஞ்சல்லி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

***15 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.***

**தகவல்: ச.பத்மலிங்கம் (மருமகன்).**

*(39180)(21.15.34)*

# கல்விக்கு மட்டுமல்ல தேசத்துக்கும் பாடசாலைகள் பணியாற்ற வேண்டும்

## முல்லை. வலயக் கல்விப் பணிப்பாளர் உரை

புதுக்குடியிருப்பு,ஓக.23

ஒரு பாடசாலை தன் வளர்ச்சிப் பாதையில் பல்வேறு சாதனைகளைப் படைத்துப் பலதரப்பட்ட அறிஞர்களை உருவாக்கி இந்தத் தேசத்துக்கும் கல்விக்கும் பணியாற்ற வேண்டும். அந்தவகையில், முல்லைத்தீவு வலயப் பாடசாலைகளுக்கு முன்னுதாரணமாகத் திகழ்வது புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

- இவ்வாறு தெரிவித்தார் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம்.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழாவில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

இக்கல்லூரி தன் வளர்ச்சிப் பாதையில் 5 தசாப்தங்களாகப் பல சாதனைகளைப் படைத்து வருகின்றது. இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் பல சாதனைகளைப் படைத்துள்ளது.

யுத்த அனர்த்தகாலத்திலும் இடம்பெயர்வுகள் ஏற்பட்ட போதும் அரசின் எந்த உதவியும் கிடைக்காத நிலையில் கூட நிலை தளராது கல்விப் பணியைச் சிறப்பாக ஆற்றிய ஒரு கல்லூரி என்றால் மிகையாகாது.

இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் பலர் அறிஞர்களாகவும் சான்றோர்களாகவும் பெருமை சேர்த்துள்ளனர். கடல் கடந்து சென்றும்கூடத் தமது நிலை தளராது மண்பற்றுடன் உழைத்துக்கொண்டிருக்கிறார்கள். எமது தேசம், எமது பாடசாலை என்று கல்லூரிக்கும் தமக்குமிடையில் ஒரு தாய் சேய் உறவைப் பேணுகின்றார்கள்.




இப்பொன்விழா மண்டபத்தைச் சிறப்பாக அமைத்துத் தந்த ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கத்திற்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள். இவ்வலயத்திலுள்ள 48 பாடசாலைகளின் பழைய மாணவர்களுக்கும் இவர்கள் நல்ல ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கின்றார்கள். - என்றார். (த-353-202)

## பளையில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்கள் இன்று திறப்பு

தென்மாராட்சி,ஓக.23

பளைப் பிரதேசத்தில் 'நீர்ப்' நிறுவனத்தினரால் 25 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பிரதேச செயலகம், பிரதேச சபைத் தலைமை அலுவலகம், பொது நூலகம், ஆயுள்வேத மருந்தகம் ஆகிய கட்டடங்கள் இன்று செவ்வாய்க்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு இக்கட்டடங்களைத் திறந்துவைப்பார்.

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களின்போது இக்கட்டடங்கள் முற்றாகச் சேதமடைந்ததால் இந்த அலுவலகங்கள் தனியார் கட்டடங்களில் 2002ஆம் ஆண்டு தொடக்கம் இயங்கிவருகின்றன.

16 மில்லியன் ரூபா செலவில் பிரதேச செயலகத்திற்கு இருமாடிக் கட்டடமும் 9 மில்லியன் ரூபா செலவில் பிரதேச சபைத் தலைமை அலுவலகம், பொதுநூலகம், ஆயுள்வேத மருந்தகம் ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(9-117)



கிளிநொச்சி, கண்டாவளை மகாவித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற கல்விக் கண்காட்சியில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. கண்டாவளைக் கிராம உத்தியோகத்தர் இ.சண்முகநாதன் மங்கள விளக்கேற்றுவதையும் கண்டாவளை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி.பரமதாஸ் நாடாவை வெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதையும் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா கண்காட்சியைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். இரண்டாவது படத்தில் பாடசாலை அதிபர் சிறிதரனும் காணப்படுகிறார்.

(படங்கள்: மு.கந்தசாமி ,பரந்தன் செய்தியாளர்)

# 'லைசென்ஸ்' விண்ணப்பங்களை புதுப்பிக்குமாறு அறிவுறுத்து

கிளிநொச்சி,ஓக.23

கடந்த ஏப்ரல் மாதம் 29ஆம், 30ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள நடமாடும் சேவையின்போது சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான எழுத்து, செய்முறைப் பரீட்சைகளில் சித்தியடையத் தவறியவர்கள் தமது விண்ணப்பங்களைப் புதுப்பித்துக்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட செயலகம் அறிவுறுத்தியுள்ளது.

சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடையத் தவறியவர்களும் செய்முறைப் பரீட்சையில் சித்தியடையத் தவறியவர்களும் மாவட்ட செயலத்தில் உள்ள மோட்டார் போக்குவரத்துக் கிளையுடன் தொடர்புகொண்டு தமது விண்ணப்பங்களைப் புதுப்பித்துக் கொள்வதுடன், புதிய மருத்துவச் சான்றிதழையும் சமர்ப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்துத் தோற்றமுடியாமல் போனவர்களும் தமது விண்ணப்பங்களைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கலுக்கான மற்றொரு நடமாடும் சேவை விரைவில் நடைபெறவுள்ளமையால் விண்ணப்பதாரிகள் உடன் செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

இதேவேளை, கடந்த ஏப்ரல் மாதம் 29ஆம், 30 ஆம் திகதிகளில் நடைபெற்ற நடமாடும் சேவையின் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தொகுதி கடமைகள் முடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் -

- உரிமை மாற்றம் செய்யப்பட்ட புத்தகங்கள்.
- 502 - பதிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்கான பதிவுப் புத்தகங்கள்.
- ஆங்கில எழுத்தில் புதிதாகப் பதிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்கான பதிவுப் புத்தகங்கள்.
- மீள் புதுப்பிக்கப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரங்கள் ஒரு தொகுதி என்பன கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திற்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

இது தொடர்பான விவரங்களைச் செயலகத்தின் மோட்டார் போக்குவரத்துச் அலுவலகத்தின் அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம் என்றும் -

உரியவர்கள் நேரடியாக வந்து தேசிய அடையாள அட்டையுடன் தற்காலிக ஆவணங்களையும் சமர்ப்பித்து உரிய புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (த-202)

## முத்தையன்கட்டில் சிரமதானம்

ஒட்டுசுட்டான்,ஓக.23

இடதுகரை முத்தையன்கட்டு திலீபன் மருத்துவமனை வளாகம் வலயப் பொறுப்பாளர் புலிக்குட்டி தலைமையில் அருணா குடியிருப்பு மக்களால் சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

மேற்படி சிரமதானம் கடந்த 17 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை நடைபெற்றது. இந்நிகழ்வில் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

(த-341)


## நெஞ்சுவலியிலிருந்து நிவாரணம் பெறுங்கள்

| | |
|---|---|
| ரியுமரோயிட் ஆர்த்திரைட்டிஸ் | மூட்டுக்களில் நோவா...? எலும்புவலி மற்றும் ஓஸ்ரியோபொரோசிஸ் |
| நீரத முதுகு வலியா...? | விரைவான நிவாரணம் |
| சோரைசிஸ் தோல் வியாதி | எமது கிருமி எதிர்ப்பு மருந்து துரித நிவாரணம் அளிக்கும் |
| ஒற்றை தலைவலியா...? | நீண்ட காலப்பாதிப்பினின்றும் நிவாரணம் அளிக்கும் |
| பெட்சோர்- Q.R என்னெய் | பெட்சோர், நீரிழிவுப்புண் மற்றும் எரிகாய புண்களுக்கு |
| புரஸ்டேட் சுரப்பிகளின் சோர்வுப் பிரச்சினைகளா? | இதற்கென சத்திர சிகிச்சையைத் தவிர்க்கும் வகையில் சிகிச்சை |
| குழந்தைகளின் புத்தி மந்தம் மற்றும் அல்சைமேர்ஸ் நினைவாற்றல் பாதிப்பு நோய் | |
| கல்லீரல் பிரச்சினைகளா? | சிரோசிஸ், ஜோன்டிஸ் அசைட்டிஸ் மற்றும் கல்லீரல் வீக்கம் |

நெஞ்சுவலியினால் அவதியுறும் வயோதிபர்கள் அவர்களது எதிர்காலத்தில் இவ்வாறான வருந்தத்தக்க குறைபாடுகளுக்காக கவலைப்பட வேண்டிய அனுபவம் ஏற்படாது. ஏனெனில் எங்கள் ஆயுர்வேத மருந்துகள் உங்கள் நாளங்களில் காணப்படும். அடைப்புகளை கரைத்து முறையான குருதிச் சுற்றோட்டத்தை ஏற்படுத்துவதன் மூலம் சத்திரசிகிச்சை அற்ற வாழ்க்கை ஒன்றை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கும்.

தொலைபேசி: 0094-115517897, 5551879, 5558442
தொலைநகல்: 0094-11-5517756
மின்னஞ்சல்: fppvl@lankabellnet.com
இணையத்தளம்: www.fppvtl.org

FAIR PHARMA (PVT) LTD
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES)
WORLD TRADE CENTRE, COLOMBO 01, SRI LANKA
ISO 9001 : 2000 QMS Certified Company

திறந்திருக்கும் நேரம்: வேலை நாட்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை. சனிக்கிழமை காலை 9.00 முதல் பி.ப. 2.00 மணிவரை


## வாய்க்கால்கள் புனரமைப்பில்லை;

# கிளிநொச்சி நெல் வயல்களில் சிறுபோகச் செய்கை அழிவு

பரந்தன்,ஓக.23

கிளிநொச்சி மாவட்டத்தில் நெற்செய்கை பண்ணப்படும் நிலங்களில் கழிவுநீர் பாயக்கூடிய வாய்க்கால்கள் மூடுண்டுபோனமையால் நெல்லைத் தவிர வேறு வகையான மறுவகைப் பயிர்கள் செய்கை பண்ண முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரை அண்டிய கிராமங்களில் இராணுவம் நிலைகொண்டிருந்த இடங்களில் அமைக்கப்பட்ட மண் அரண்கள் அகற்றப்படாத நிலையில் நெற்பயிர்ச் செய்கையைத் தவிர வேறுமறுவகைப் பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த சிறுபோகத்தின்போது கிளிநொச்சி நகரை அண்டிய பகுதியில் பல ஏக்கர் நிலத்தில் சிறுதானியப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டபோதும் முழுமையாகத் தண்ணீர் தேங்கி நின்று சிறுதானியப் பயிர்களை முற்றாக அழித்துவிட்டது.

நெற்செய்கை மேற்கொள்ளும் இடங்களில் சிறுபோக காலத்தில் மறுவகைப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதனால் நெற்செய்கை நிலங்களில் அமைந்துள்ள கழிவு வாய்க்கால்கள் முற்றாகப் புனரமைப்புச் செய்யப்படவேண்டும் என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே, நெல் உற்பத்தி அதிகரித்த இன்றைய நிலையில், உற்பத்தியாளர்கள் மறுவகைப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு வசதியாகக் கழிவு வாய்க்கால்களைப் புனரமைப்புச் செய்துதருமாறு விவசாயிகள் சம்பந்தப்பட்ட அரச திணைக்கள அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.(9-352)

# கால்நடை உரிமையாளர்களுக்கு முழங்காவிலில் சங்கம் அவசியம்

வெள்ளாங்குளம்,ஓக.23

முழங்காவில் பிரதேசத்தில் கால்நடை வளர்ப்போர் அதிகமாக உள்ளனர். எனினும், இங்கு கால்நடை வளர்ப்போர் சங்கம் இல்லை. எனவே, விவசாயம் செய்யும் மக்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாகக் கால்நடைகள் உள்ளன.

விவசாயம் செய்யும் சில மக்களும் கால்நடை வளர்க்கின்றார்கள். அவர்கள் பயிர்களுக்குக் கெடுதல் இல்லாத வகையில் வளர்க்கிறார்கள். இங்கே கால்நடையை மட்டும் வளர்ப்போர் விவசாயம் செய்யும் மக்களுக்குப் பெரும் இடையூறாக இருப்பதாகவே விவசாயிகள் கூறுகின்றனர்.

இக்கால்நடைகளின் தொல்லைகள் தொடர்பாக இங்குள்ள அதுசார்ந்த அமைப்புகள் இறுக்கமான நடவடிக்கை எடுக்காமல் பாராமுகமாக உள்ளமையால் இங்குள்ள விவசாயிகளும் கால்நடைவளர்ப்போரும் முரண்பட வேண்டி உள்ளதோடு, கால்நடைகளின் தொல்லைகளைக் காவல் பணிமனை வரை சென்று முறையிடும் நிலை ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே, சம்பந்தப்பட்ட அமைப்புகள் இறுக்கமான தீர்மானங்களை எடுத்துக் கிராமத்தின் ஒற்றுமையை வலுப்படுத்தி விவசாயம் செய்வோரும் கால்நடை வளர்ப்போரும் பாதிப்படையாமல் தடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(த-415)

## விற்பனைக்கு

Love birds 300/- பான்ரெல் - 1500/- ஜேர்மன் அவுல் - 3000/- பௌட்டர் 2500/- ஜக்கோப்பியன் - 1500/- இஜிப்ஷன் - 1500/- பியூட்டி ஹோமர் 4500- றேஸிங் ஹோமர் - 2000/- பிளக் பேதர் - 1750/- இங்கிலிஷ் - நண்ஸ - 5 500/-

தொடர்பு: K.ரட்ணம், மகாத்மா வீதி, நெல்லியடி
குறிப்பு: இச்சலுகை 23-08-2005 இல் இருந்து 25-08-2005 வரை மட்டுமே.
(39197) Phone.: 0777-779975.

## FIVE STAR

CFLபல்புகளை மட்டும் வாங்குங்கள்
காரணம்:
* உண்மையான 80% மின்சார சேமிப்பு
* குறைந்த மின்சாரத்தில் அதிக பிரகாசம்
* 8000இற்குக் குறையாத ஆயுள்
* உலக தராதர சான்றிதழ், ஒருவருட உத்தரவாதம்
* வீட்டு உபகரணங்களைப் பாதிக்காது



அனுசரணை:-
**PRESIDENT CFL**
0777 306549

நவாலியில் வீடு வளவு விற்பனைக்குண்டு

நவாலி, அரசடிச் சந்தியிலிருந்து சோமசுந்தரப் புலவர் வீதியில் திரு.திருமதி நடராசா சிறிமுருகனுக்கு உரிமையான இரண்டுஅறைகள், ஹோல், சமயலறை, போட்டிக்கோ ஆகிய வசதிகளுடன் 5½ பரப்புக் காணியில் அமைந்த வீடும் வளவும் விற்பனைக்குண்டு. யாழ்.நகரில் உரிமையாளருடன் தொடர்புகொள்ள: (39193)
ரெலிபோன்:
4590296.

நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகம் நடத்தும்
யாழ்.மாவட்ட லீக்குகளுக்கிடையிலான
**மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி**

1) விண்ணப்பப்படிவங்களை ஒவ்வொரு பிரதேச லீக்குகளிடமும் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.
2) விண்ணப்பங்களை 30-08-2005 இற்குமுன் நேரடியாகவோ கடிதமூலமாகவோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

செயலாளர், எ.வி.கழகம்,
நவக்கிரி, புத்தூர்.

(39195)(26-14-15)

**படிவங்கள்**

* ஆண்/பெண் தாதிமார் பயிற்சிக்கு ஆள் திரட்டல் விண்ணப்பப் படிவமும்,
* தரைப்பட வரையுநர் பயிற்சியாளர் பதவிக்கான விண்ணப்பப் படிவமும்
உண்டு

Bharathi Pathippakam,
430, K.K.S. Road, Jaffna.


# மாவட்ட கலை இலக்கிய விழா: நாட்டார் பாடல்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஓக.23

கலாசார மற்றும் மரபுரிமைகள் அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்.செயலகம் நடத்திய மாவட்ட மட்டத்திலான தேசிய கலை இலக்கிய போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஏற்கனவே கட்டுரை, சிறுகதை, குறுநாடகம், சித்திரம் ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின்பெயர் விவரங்கள் பிரசுரமாகி இருந்தன.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நாட்டுப்புறப்பாடல்நடனம் ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்றவர்களின் பெயர் (பிரதேசசெயலர் பிரிவு விவரம் அடைப்புக் குறிக்குள்) விவரங்கள் வருமாறு:-

***நாட்டுப் புறப்பாடல்***

**கனிஷ்ட பிரிவு**

இ.டயாளின்(சண்டிலிப்பாய்), கே.வர்சினி (தெல்லிப்பழை), ஜெ. ஹம்சவதி (கரவெட்டி), ம.மேரிடிஷானி (ஊர்காவற்றுறை), கு. சுஜாதா (காரைநகர்).

**சிரேஷ்ட பிரிவு**

ஜெ.வைஷ்ணவி (சண்டிலிப்பாய்), சுகசிகுமார்(பருத்தித்துறை), ர.நிலானி (சங்கானை), சூ.மேரிவேர்ஜினி (ஊர்காவற்றுறை), நரஞ்சித்பாலன் (கரவெட்டி), கோ.கம்சத்வனி (உடுவில்).

**திறந்த போட்டி**

த.தமிழினி (உடுவில்), தி.சுகிர்தன் (சண்டிலிப்பாய்), ஜெ.சுபோகினி (நல்லூர்), இ.அனுசியா (ஊர்காவற்றுறை), தி.நேசபவானி(தெல்லிப்பழை).

**நடனம்**

**திறந்த போட்டி**

நல்லூர் பிரதேச செயலர் பிரிவு நடனக் குழு, தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவு நடனக் குழு.

(எ-204-203)

## உணவக உரிமையாளருக்கு கருத்தரங்கு

வலிதென்மேற்கு,ஓக.23

பண்டத்தரிப்பு பட்டின பகுதியிலுள்ள தேநீர்க் கடைகள் மற்றும் உணவகங்களில் கடமை புரியும் தொழிலாளர்கள், உணவு பரிமாறுவோர் ஆகியோருக்கான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தின் பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பண்டத்தரிப்பு பொதுச் சுகாதார பரிசோதகர் என். நிர்மலானந்தன் தலைமையில் இக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

(எ-155)


பல்லாண்டு வாழப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



இல்லற வாழ்வில் இணைந்து
இருபத்தைந்தாவது ஆண்டு
நிறைவை இன்று 23-08-2005
செவ்வாய்க்கிழமைகொண்டாடும்
குரும்பசிட்டியைச் சேர்ந்த
திரு.திருமதி சத்தியநாதன் - வரதா
தம்பதிகளைக்
குரும்பசிட்டி
முத்துமாரி
அம்பாளின்
துணையுடன்
பல்லாண்டு வாழ
வாழ்த்துகின்றோம்.

**திரு. திருமதி சத்தியநாதன் வரதா**

கி.சண்முகநாதன் - அரியமலர் குடும்பம் (ஜேர்மனி),
கி.யோகநாதன் - ஈஸ்வரி குடும்பம் (ஜேர்மனி),
அ.யோகநாதன் - பத்மாவதி குடும்பம் (உரும்பிராய்),
சூ.இராசநாயகம் - புஸ்பராணி குடும்பம் (உரும்பிராய்).

உரும்பிராய்.
(39190)(26-14-15)

யே.ம.ஆசை துணை
விண்ணக வாழ்வின்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணக வாழ்வில் 03 - 09 - 1923



விண்ணக வாழ்வில் 24 - 07 - 2005

### அமரர் யோசப் ஆனந்தம்

''ஆண்டவருடைய இல்லத்தில் நான்
வாழ்நாள் முழுவதும் குடியிருக்க வேண்டும்''

*எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தியை அறிந்து எமக்கு நேரில் வந்தும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் கூறி எமது துக்கத்தில் பங்குகொண்டு அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எமது நன்றிகள்.*

அத்துடன் இன்று (23-08-2005) செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் சரவணை சின்னமடுமாதா யாத்திரைத் தலத்தில் நடைபெறும் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்கான திருப்பலிப் பூசையிலும் அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை.

அன்னாரது பிரிவால் துயருறும்: .
(39196)(26-14-15) **குடும்பத்தினர்.**

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 - 01 - 1945



மறைவு 21 - 08 - 2004

### நமசிவாயம் சிவஞானசுந்தரம்

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய் இருந்து எம்மை
வாழவைத்த எம் குடும்பத்தின் ஒளி விளக்கே!
ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறவில்லை எம் இதயம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

இன்று (23-08-2005) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

சந்தா தோட்டம்,
புலோலி கிழக்கு,
புலோலி. (39194)(26-14-15)

**மனைவி, மக்கள்.**

# நாட்டுப்பற்றாளர் வே.க. ஏரம்பு

அவர்களின்

## ஆறாம் மாத நினைவுநாள்



என்றும் உங்கள் நினைவில் வாழும்:
**மனைவி,**
**பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

புங்குடுதீவு. (சி-44734)(26-14-15)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவகாமிப்பிள்ளை



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகாமிப்பிள்ளை 22.08.2005 (திங்கட்கிழமை) சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி நடராஜா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஆறுமுகம் (நவரத்தினம்), தங்கரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஏரம்பமூர்த்தி (சிவசக்தி, வவுனியா), கதிர்காமநாயகி, சண்முகராஜா (உரிமையாளர் சிவசக்தி, சுயன் அரிசி ஆலை, வவுனியா), சிவாநந்தன் (சிவசக்தி, வவுனியா), கருணைத்தவசோதி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் மகேஸ்வரி, வைத்திலிங்கம், சுலோசனா, சாந்தினி, குமாரசுவாமி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் குபேரன் (பொறியியலாளர், கொழும்பு), சசிதரன் (லண்டன்), திருமதி சிவராமன் (சுவிஸ்), சிவராமி, ஜெயராமி, சுனாதனன், கோமளன் (மாணவன், வவுனியா), திருமதி சிவகுமாரன், ஜெயகுமரன் (நோர்வே), ஜெயகலா (கனடா), திருமதி கணேசகுமார் (திருகோணமலை), தனகேசவன் (லண்டன்), பிரசாந்தி (ஆசிரியை, யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி), கம்ஷா (கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம்), சுஜன் (லண்டன் பல்கலைக்கழகம்), துஷன் (றோயல் கல்லூரி, கொழும்பு), ஜனிக்கா (கொழும்பு திறந்த பல்கலைக்கழகம்), தட்ஷனா, சனார்த்தனன் (மாணவன், கொழும்பு), லவப்பிரியா (மாணவி, றம்பைக்குளம் மகளிர் கல்லூரி, வவுனியா), குமுதினி (கனடா), பிரகாஷ் (கனடா), தர்ஷினி (மாணவி, கொழும்பு) ஆகியோரின் பேர்த்தியும் சுகிர்தன், துசாந், சிந்துஜா, சிவகாசிக்கா, ஐதுஷன், துக்ஷா, ஜனகன், தீப்தன், ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2005) அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.* (39191)(32-14-15-26)

தகவல்: ந.சண்முகராசா
**(மகன், சிவசக்தி வவுனியா)**

## மனமார வாழ்த்துகின்றோம்

22.08.2005 திங்கட்கிழமை நேற்று இல்லறத்தில் இணைந்த மங்களமான **மங்களேஸ்வரி**யைக் கரம்பிடித்த **ம. ஸ்ரீவத்சாங்கசர்மா** தம்பதிகளைப் பல்லாண்டு காலம் வாழ இணுவில் விஸ்வேஸ்வரசுவாமியின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

*- சுபமஸ்த்து* **ஆதீன தர்மகர்த்தா**
இணுவில். (39199) **சீ. பரமேஸ்வரன்.**

## விற்பனையாகிறது

நடைபெற்று முடிந்த புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் விடையுடன் பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகள், பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்களுக்கு விசேட கழிவு.

(39205)

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
இல.4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
**T.P: 6693**

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
உற்சவ கால பணிமனை
நல்லூர் - **T.P: 7962**
(சிவன் கோயில் அருகில்).


## சாவகச்சேரியில் அளத்தல், நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரை

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களின் நிறுத்தல், அளத்தல் கருவிகளுக்கான தர நிர்ணய முத்திரை பொறிக்கும் பணி இன்று செவ்வாய்க்கிழமையும் எதிர்வரும் 25 மற்றும் 29 ஆம் திகதிகளிலும் நகரசபை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. சகல வர்த்தக நிலைய உரிமையாளர்களும் குறிப்பிட்ட தினங்களில் தமது நிறுத்தல், அளத்தல் கருவிகளுக்கு முத்திரை பொறிப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-31)

## குடித்தொகை அபிவிருத்தி கற்கைநெறி

யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடத்தின் குடித்தொகை அபிவிருத்திக் கற்கைநெறியின் இரண்டாம் அரையாண்டுப் பரீட்சையில் தோற்றவுள்ளவர்களிடமிருந்து உயர்பட்டப் படிப்புகள் பீடம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றவிரும்புவோர் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் பீடாதிபதி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறும்-

பரீட்சைக்கான அனுமதி அட்டைகள், நேர அட்டவணை என்பனவற்றை செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம் என்றும்- அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-204)

## ஆழிப்பேரலை பாதித்த சிறுவருக்கு உதவி

தேசிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அனுசரணையுடன் இளையோர் செயற்பாட்டு நிறுவனம் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட 30 சிறுவர்களுக்கு தலா ஆயிரம் ரூபாவை வங்கியில் வைப்பிலிட்டு அதற்கான சேமிப்பு கணக்குப் புத்தகங்களை வழங்கவுள்ளது.

இதற்கான நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள ஆழிப்பேரலைச் செயலக அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. (ஓ-173-203)

## விபத்தில் காயம்!

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி ஏற்பட்ட விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

சாவகச்சேரி - கச்சாய் வீதியில் நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மட்டுவில் வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்வராஜா (வயது-45) என்ற குடும்பஸ்தரே காயமடைந்தவராவார். காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஓ-12-ரி)

# மரண அறிவித்தல்கள்

### சுப்பர் கிருஷ்ணபிள்ளை



குரும்பைகட்டியைச் சேர்ந்த சுப்பர் கிருஷ்ணபிள்ளை அவர்கள் நேற்று (22.08.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பர் -பூரணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் புஸ்பலீலாவதி அவர்களின் அன்புக் கணவரும் சத்தியகுமாரி, காலஞ்சென்ற சத்தியநாதன் மற்றும் சத்தியயோகன் (லண்டன்), சத்தியபாமா, சத்தியராஜன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மநாதன் (எழுதுவினைஞர் - நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபை, யாழ்ப்பாணம்), பவானி (லண்டன்), இராசரத்தினம், அம்பிகா (ஆசிரியை, வட இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2005) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணிக்குத் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குரும்பைகட்டி,* (39210) (29-17-45-12) தகவல்:
*புலோலி வடமேற்கு, புலோலி.* **புஸ்பலீலாவதி (மனைவி).**

### திருமதி நாகராசா யோகம்மா

நயினாதீவு, 6 ஆம் வட்டாரத்தை வதிவிடமாகக் கொண்ட திருமதி நாகராசா யோகம்மா நேற்று (22.08.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை -நாகராசாவின் அன்பு மனைவியும் விக்கினேஸ்வரன், யோகபாலன் (கணேஷ்), ரஞ்சிதமலர், சிவசெல்வராசா, ஜெயமலர், யோகராசா, கௌரிமலர், வரதராசா ஆகியோரின் பாசமிகு தாயும் திலகவதி, புவனேஸ்வரி, புவனசுந்தரம், நிரஞ்சனா, கோணேசமூர்த்தி, திருமலர், சாந்தகுமார் ஆகியோரின் பாசமிகு மாமியும் குமாரவேலு சின்னத்துரை, துரைச்சாமி மற்றும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நயினாதீவு இந்துமயானத்தில் இன்று (23.08.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*6 ஆம் வட்டாரம்,* **நா. சிவசெல்வராசா**
*நயினாதீவு.* (39208) (29-17-45-12) **(மகன்).**

## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன் **சத்தியராஜன்**
அவர்களின் அன்புத் தந்தை
***சுப்பர் கிருஷ்ணபிள்ளை***
அவர்களின் மறைவினால் ஆழ்ந்த துயரடைவதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்-

**நண்பன்**
**குரும்பைகட்டி.** (39211) **பாரதி.**

# மரண அறிவித்தல்கள்

### வை.கா. சிவப்பிரகாசம்

(கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை முன்னாள் அதிபர், திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவன ஆலோசகர்)

வியாபாரிமூலை , பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கண்டியை வதிவிடமாகவும் கொண்ட வை.கா.சிவப்பிரகாசம் அவர்கள் 21.08.2005 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசபிள்ளை - பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற Dr. கனகசபாபதி (யாழ்ப்பாணம்) - சௌந்தராம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும் இரத்தினபூபதியின் அன்புக் கணவரும் முகுந்தனின் (U.S.A.) பாசமிகு தந்தையும் சோகுலாவின் (U.S.A.) அன்பு மாமனாரும் வர்ஷனின் (U.S.A.) அன்புப் பேரனும் திருமதி காமாட்சி வாசுதேவன்பிள்ளை (கண்டி), இராமச்சந்திரன் (மாத்தளை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் வாசுதேவன்பிள்ளை (கண்டி), திருமகள் இராமச்சந்திரன் (மாத்தளை), திருமதி சேதுநாயகி சண்முகநாதன் (கனடா), Dr.இரத்தினவடிவேல் (நியூசிலாந்து), சண்முகநாதன் (கனடா), பங்கஜதேவி சோமாஸ்கந்தர் (யாழ்ப்பாணம்), மனோன்மணி வசந்தநாதன் (கண்டி) , சற்குருநாதன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'வள்ளுவரகம்'* (39206) (29-17-45-12) தகவல்:
*வியாபாரிமூலை. பருத்தித்துறை.* **இரத்தினபூபதி (மனைவி).**

### கனகசபை சுப்பிரமணியம்

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் 143, மன்னார் வீதி, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற லிகிதர், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்) அவர்கள் நேற்று (22.08.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் கனகசபை - செல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் அபயாம்பிகை (ஓய்வுபெற்ற ஆசிரியை, வ/சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா) அவர்களின் அன்புக் கணவரும் சுகந்தி (ஆஸ்திரேலியா) , ஜெயகோபி (பொறியியலாளர் -கனடா), ஜெயக்குமரன் (Software Engineer, IWMI Colombo) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானகாந் (ஆஸ்திரேலியா), தமிழ்ச்செல்வி ஆகியோரின் அன்பு மாமனாரும் நிஷந்தி, பிரியங்கா, பிரவீன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும் அமரர் தியாகராஜா (சட்டத்தரணி) , அமரர் திருமதி மகேஸ்வரி தெய்வதவபாலன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), அமரர் ஞானேஸ்வரி, ஜெகதீஸ்வரி சிற்சபேசன் (பிரான்ஸ்), அமரர் சற்குருநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.08.2005 வியாழக்கிழமை வவுனியா, தட்சணாம்குளம் இந்துமயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*143, மன்னார் வீதி, வவுனியா.* **குடும்பத்தினர்.**
*T.P. 024 222 0438, 071 7180713* (சி-44741) (29-17-45-12)

### ஆசீர்வாதம் ஞானப்பிரகாசம்



சென்யூட்ஸ், இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் ஞானப்பிரகாசம் அவர்கள் 21.08.2005 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் ஸ்ரெலாவின் அன்புக் கணவரும் சந்திரா, மக்ஸ்சி (இத்தாலி), அன்ரன் எட்வின் (J.M.C.), இந்திரா சுவேந்திரா (பிரான்ஸ்), சுரேஸ் ஸ்ரீபன் (கட்டார்), றொபேட் அலெக்ஸ் (இத்தாலி), குணசீலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மரியதாஸ், பேரின்பம் (சவுதி), தேவன் (பிரான்ஸ்), சுரேந்திரா (ஜேர்மனி), சாந்தி (இத்தாலி), ஜீன், உமா (நீர்கொழும்பு), கவிதா (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும் வினோதாஜஸ்மின் (ஜேர்மனி), ஜெறாட், றொட்ணி, டிமன் போட், தனுஜா, நிறோஸ், கவோணி, அனோஷா, வினுஷா, லோசினி, டினோஷா, ரறோ, ஜினோல்ரன், றெபேக்கா, ஸ்ரெபாணி, பிரசன்னா, ஜெனிபர், ஜனுசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆரோன், றொகான் ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.08.2005 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சென்யூட்ஸ், இளவாலை.* (39204) (29-17-45-12) **குடும்பத்தினர்.**

## தவறிவிட்டது

மரியநாயகம் ஜெனிபேட் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் (009358654) நேற்று யாழ்.சோமசுந்தரம் வீதியில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள், இல.886, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 5591 என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (39209) (29-17-45-12)

## தவறிவிட்டது

ஸ்ரீபாலசிங்கம் உமாபாலன் என்பவரது கடவுச்சீட்டும் (இல. N22301177) ரூபா 8000 காசு மற்றும் இரண்டு கல்விச் சான்றிதழ்கள் என்பன 20.08.2005 சனிக்கிழமை முகமாலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் -எஸ்.உமாபாலன், துவாரகை ஒழுங்கை, கோண்டாவில் வடக்கு என்ற முவரியில் ஒப்படைத்துதவவும். (சி-44743) (29-17-45-12)


## கணனி கற்கைநெறியில் சர்வதேச அங்கீகாரம்

The Leading INDIAN IT College

FREE BOOKS FOR ALL STUDENTS

**GLOBAL VILLAGE COMPUTER EDUCATION**
(A Unit of Global Media Tech - India)

புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்!!



PROFESSIONAL TRAINING COURSES

- DIPLOMA IN OFFICE AUTOMATION
- DIPLOMA IN COMPUTE APPLICATION
- DIPLOMA IN WEB DESIGNING
- DIPLOMA IN ENGINEERING DRAWING
- DIPLOMA IN DESKTOP PUBLISHING
- DIPLOMA IN HARDWARE ENGINEERING
- DIPLOMA IN MULTIMEDIA
- DIPLOMA IN E-COMMERCE
- DIPLOMA IN COMPUTER PROGRAMMING
- GLOBAL KIDS PROGRAMMING (STAGE I&2)
- COMPUTERIZED ACCOUNTING

வார, வார இறுதி, மாலை, இரவு நேர வகுப்புக்கள்! பிரத்தியேக, குழு வகுப்புக்கள்!

(சி-44739)

IMIS Tally Excel eTouch COMPUTER SYSTEM

UDUVIL ROAD, MARUTHANARMADAM, JAFFNA, SRI LANKA
Phone: 0214590222 E-Mail: etouch@wow.lk Web: globalvillage-lanka.com

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின அதிரடி வெளியீடாக இளம் புயல் ஜெயம் ரவி, ரேணுகா மேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த

**தாஸ்** (ரீல்ஸ்)

காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே).

(சி-4118)

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு காதல் புகழ் பரத், ரேணுகா மேனன்

**பெப்ரவரி 14**

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

(சி-43380)

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்

சத்தியராஜ், நமிதா, வடிவேலுவின் நகைச்சுவைச் சித்திரம்

**இங்கிலீஸ்காரன்**

கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

(சி-43363)

**மனோகரா** யாழ்ப்பாணம்

விக்ரம், சதா, விவேக், பிரகாஸ்ராஜ் நடித்த

**அந்நியன்**

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

(சி-44110)

# ஜனாதிபதித் தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுமுறையின் பின்னர் நேற்றுக் கூடிய நீதிமன்றம் அந்த மனு மீதான விசாரணையை மேற்கொண்டது. பிரதம நீதியரசர் தலைமையிலான ஐந்து நீதியரசர்கள் அடங்கிய 'பெஞ்ச்' முன்னிலையில் மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, நீதியரசர்களான நிஹால் ஜெயசிங்க, நிஸங்க உதலாகம, நிமல் திஸநாயக்க, நிமல் காமினி அமரதுங்க ஆகியோர் அந்த 'பெஞ்சில்' அடங்கியிருந்தனர்.

ஹெல உறுமய சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் தம்மையும் இடையீட்டு மனுதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் -

ஜனாதிபதித் தேர்தல் 2006 ஆம் ஆண்டில்தான் நடத்தப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிட வேண்டும் என்றும் - கோரி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பில் அதன் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன, லிபரல் கட்சியின் சார்பில் பேராசிரியர் ராஜீவ் விஜேசிங்க, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சார்பில் சட்டத்தரணி கமல் நிஸங்க ஆகியோர் இடையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர். இந்த மனுக்களும் நேற்று பரிசீலனைக்கு எடுக்கப்பட்டன. ஆனால் அவற்றை வழக்கில் சேர்த்துக் கொள்ள முடியாது என்று பிரதம நீதியரசர் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்.

இடையீட்டு மனுக்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க விரும்புகின்றாரா என முதலாவது பிரதிவாதியான தேர்தல் ஆணையாளரிடம் கேட்கப்பட்டது. அவர்க[illegible]ர்பில் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கப்ப[illegible]லை.

இருப்பினும் அந்[illegible]யீட்டு மனுக்களை விசாரணைக்கு ஏற்க[illegible] நிராகரித்துவிட்டார் பிரதம நீதியரசர். நீதிமன்றத்துக்கு உதவும் பொருட்டும் அரசமைப்பைத் தெளிவுபடுத்தும் விதத்திலும் சட்ட உரைகளை வழங்க மட்டும் இடையீட்டு மனுதாரர்களுக்கு நீதியரசர்கள் அனுமதி வழங்கினார்கள்.

அங்கு கருத்துத் தெரிவித்த பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, ஜனாதிபதித் தேர்தலை எப்போது நடத்துவது என்பது தொடர்பாக ஆராய்ந்து தனக்குக் கருத்துத் தெரிவிக்கும்படி கோரி ஜனாதிபதி உயர் நீதிமன்றிற்கு அனுப்பிய மனு ஆராயப்படாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

''ஒரே விடயத்தில் கருத்தையும் தீர்ப்பையும் உயர் நீதிமன்றத்தினால் வெளியிட முடியாது. ஜாதிக ஹெல உறுமயவின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு மட்டுமே இந்த அமர்வில் ஆராயப்படவுள்ளது. ஜனாதிபதியின் மனு எனது அறையில் அப்படியே இருக்கின்றது. அது இந்த மனுவுடன் சேர்த்து ஆராயப்படமாட்டாது.'' - என்றார் அவர்.

தேர்தல் ஆணையாளர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எல்மோ பெரேரா, ''1999ஆம் ஆண்டு டிசெம்பர் 22ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது இரண்டாவது பதவிக் காலத்துக்காகப் பகிரங்கமாகச் செய்து கொண்ட சத்தியப்பிரமாணத்தையே அவரது இரண்டாவது பதவிக் காலத்துக்கான உத்தியோகபூர்வ அங்கீகாரமாகத் தேர்தல் ஆணையாளர் ஏற்றுக் கொண்டுள்ளார். அதனால் அவரது 6 ஆண்டு பதவிக் காலம் எதிர்வரும் டிசெம்பர் மாதத்துடன் முடிவடைகிறது.

அதனடிப்படையில் புதிய ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படவேண்டும் என்று தெரிவித்தார். எனினும், ஜனாதிபதி 2000ஆம் ஆண்டு நவம்பர் 10ஆம் திகதி மீண்டும் - இரகசியமான முறையில் - பதவிப் பிரமாணம் செய்து கொண்டார் என்று தெரிவித்திருப்பதை அடுத்தே இந்த விடயத்தில் சர்ச்சை எழுந்துள்ளது. தேர்தல் ஆணையாளர் அந்த சத்தியப் பிரமாணத்தை உத்தியோகபூர்வ அங்கீகாரமாக ஏற்றுக் கொள்ளவில்லை என்று சுட்டிக் காட்டினார் எல்மோ பெரேரா.

இந்த இடத்தில் கருத்துத் தெரிவித்த பிரதம நீதியரசர், ''அரசமைப்புப்படி ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் தனது பதவிக் காலத்தில் 4 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துவிட்டால் அதிலிருந்து அடுத்த இரு ஆண்டுகளுக்குள் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் படி கோரும் அதிகாரத்தைக் கொண்டுள்ளார். ஒருவர் அவ்வாறு 4 வருடங்களின் பின்னர் புதிய ஜனாதிபதித் தேர்தலைக் கோரினால், அவர் அப்படிக் கோரும் சமயத்தில் அவரது பதவிக் காலம் முடிவுக்கு வந்துவிடும்.

''இதன்படி தற்போதைய ஜனாதிபதியின் பதவிக் காலத்தில் தீர்மானிக்கப்பட வேண்டிய விடயம் அவரது இரண்டாவது பதவிக் காலம் எப்போது ஆரம்பமாகின்றது என்பது மட்டுமே.'' - என்றார்.

இந்த விடயத்தில் கருத்துத் தெரிவித்த சட்டமா அதிபர், ''ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் முதலாவது பதவிக் காலம் முடிவதற்கு முன்னர், அரசியல் காரணங்களை முன்வைத்தே இரண்டாவது ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டது. அந்த வகையில், அவர் தனது இரு பதவிக் காலங்களுக்குமான 12 வருடங்களும் ஆட்சியில் இருக்கலாம்.

''முதலாவது பதவிக் காலம் முடிவடைவதற்கு ஒரு வருடம் முன்னதாக இரண்டாவது பதவிக் காலத்துக்கான தேர்தல் நடத்தப்பட்ட போதும் தனது பதவிக் காலம் முழுதும் அவர் ஆட்சியில் இருக்க அரசமைப்பு அனுமதிக்கிறது'' - என்றார்.

அதனடிப்படையில் ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக் காலம் 2000ஆம் ஆண்டு நவம்பர் மாதமே ஆரம்பமாகிறது. எனவே 2007ஆம் ஆண்டிலேயே அவரது பதவிக்காலம் முடிவடையும் என்று அரசுத் தரப்பில் வாதிடப்பட்டது.

ஆனால், பிரதம நீதியரசர் அதனை நிராகரித்தார். அந்தக் கணக்கின்படி ஜனாதிபதியின் பதவிக்காலம் 13 ஆண்டுகளாகி விடும். ஒருபோதும் அதற்கு அனுமதிக்க முடியாது என்று அவர் தெரிவித்தார்.

மனுதாரர் சார்பில் ஆஜராகி இருந்த சட்டத்தரணி மனோகர டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், மனுதாரர் மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ளார் என்பதனால், மக்களின் வாக்களிக்கும் உரிமைகள் பாதிக்கப்படாத வகையில் நீதிமன்றம் தீர்ப்பளிக்க வேண்டுமென்று தெரிவித்தார்.

அதிகாரத்தில் உள்ள ஜனாதிபதி ஒருவரின் பதவிக் காலம் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியானதுடன் முடிவடைந்துவிடும். அந்த அடிப்படையில் தற்போதைய ஜனாதிபதி சந்திரிகாவின் பதவிக் காலம் 1999ஆம் ஆண்டு டிசெம்பருடன் முடிவடைந்து விடும். எனவே, இந்த விடயத்தில் அரசமைப்பில் உள்ள சரத்துக்களின் அடிப்படையில் நீதிமன்றம் தீர்ப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிப்புத் தொடர்பான பிரகடனத்தை வெளியிடும் காலம் எப்போது என்று தேர்தல் ஆணையாளரிடம் வினவினார் பிரதம நீதியரசர். அது கடந்த 19ஆம் திகதியாகும் என்று பதிலளித்தார் ஆணையர்.

தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிட வேண்டிய காலம் ஏற்கனவே கடந்துள்ள நிலையில், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு வரும் வரையும் அதனை வெளியிட வேண்டாம் என்றும் உத்தரவிட்டார் பிரதம நீதியரசர்.

அத்துடன், இந்த மனு மீதான தீர்ப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை அறிவிக்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

நேற்றைய வழக்கு விசாரணைக்கு சுதந்திரக் கட்சி சார்பில் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க, ஹெல உறுமய சார்பில் அதன் நாடாளுமன்ற உறுப்பினர் வண. அத்துரலிய [illegible]ன தேரர் ஆகியோரும் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தனர். (க)

## சுதந்திர ஊடக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர்கள் மீதும், ஊட[illegible]ங்க[illegible] மீதும் வன்செயலைக் கட்டவிழ்த்து விட[illegible]ண்டாம் என சுதந்திர ஊடக இயக்கம் வேண்டிக் கொள்கிறது.

அரசியல் நோக்கங்களை அடைந்துகொள்ள ஜனநாயக வழிமுறைக்கு வருமாறும் சுதந்திர ஊடக இயக்கம் அனைத்துத் தரப்பினரையும் கேட்டுக்கொள்கிறது என அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கணனிக் குற்றங்களைத் தடுக்கச் சட்டமூலம்!

கொழும்பு, ஓக.23

கணனிகள் மூலமான குற்றச்செயல்களைத் தடுப்பதற்கான சட்டமூலம் ஒன்று இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நீதி அமைச்சர் டபிள்யூ.டி.ஜோன் செனவிரத்ன இந்தச் சட்டமூலத்தை சமர்ப்பிக்கின்றார்.

கணனிகளைப் பயன்படுத்தி சர்வதேச வலைப்பின்னல் ஊடாகப் பல்வேறு குற்றச்செயல்களில் இலங்கையர்கள் ஈடுபட்டு வருகின்றனர் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கணனிகள் மூலம் விவரங்களைப் பெற்று மிரட்டிக் கப்பம் வசூலித்தல், போதைப்பொருள் கடத்தல், தனிப்பட்டவர்களின் வங்கிக் கணக்குகளை அறிந்து அவர்களின் எதிரிகளுக்கு வழங்குதல், திருமண ஏற்பாடுகளைச் செய்வதாகக் கூறிப் பணமோசடி செய்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் கணனிகள் மூலம் மேற்கொள்ள[illegible]டு வருகின்றன என்று பொலீஸார் தெரிவிக்கின்றனர். இவற்றைத் தடுக்கும் முகமாகவே இப்புதிய சட்டவரைவு கொண்டுவரப்படவுள்ளது என நீதி அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார். (க)

## 13 பெண்கள் கைது!

மன்னாரில் இயங்கும் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் தொழில் பயிற்சி பெறும் 13 மாணவிகளைக் கடற்படையினர் நேற்றுக் கைதுசெய்துள்ளனர் என்று மேற்படி நிறுவனம் தெரிவித்துள்ளது.

வறிய மற்றும் உழைப்பவர்களை இழந்த குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு பனந்தும்பு உற்பத்தி பயிற்சி கடந்த மூன்று மாத காலமாக வழங்கப்பட்டு வந்ததாகவும் அப்பெண்கள் தங்கியிருந்த வீட்டை நேற்றுக் காலை 7 மணியளவில் சுற்றிவளைத்த கடற்படையினர் அங்கிருந்த 13 பெண்களை தலைமன்னார் கடற்படைத் தளத்துக்குகொண்டு சென்றுள்ளனர் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

## பேச்சுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தின் பதில் பணிப்பாளர் ஜோன் குணரட்னவுடன் மேற்படி விடயம் குறித்து விரிவான பேச்சுகளை நடத்தியுள்ளார் நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர்.

போர்நிறுத்த ஒப்பந்தம் குறித்து அரசுடன் நேரடிப் பேச்சுகளை நடத்துவதற்குத் தயாரென்று விடுதலைப் புலிகள் அறிவித்த பின்னர் நோர்வேத் தரப்பு, அரச சமாதானச் செயலகத்துடன் பேசுவது இதுவே முதற்றடவையாகும்.

நேரடிப் பேச்சுக்கான புலிகளின் ஆர்வம் மற்றும் அக்கறை தொடர்பாக நேற்று நோர்வேத் தூதுவர் அரச தரப்பிடம் தெரிவித்தார். அதேசமயம், பேச்சுகளை எங்கே, எந்தத் திகதியில் நடத்துவது என்பது பற்றியும் அவர் ஆராய்ந்துள்ளார்.

பேச்சுகளை ஒஸ்லோவில் நடத்துவது தொடர்பில் புலிகள் கொண்டுள்ள ஆர்வம் குறித்தும், இலங்கையில் நடத்துவது தொடர்பில் அரசு கொண்டுள்ள அக்கறை பற்றி யும் நேற்றைய பேச்சின்போது விரிவாக ஆராயப்பட்டன என அரச சமாதான செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

## வெளிவிவகார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைத்தொழில் அபிவிருத்தி .அமைச்சுப் பதவியில் இருந்து அவர் விலகிக் கொண்டுள்ளார்.

அவரிடமிருந்த கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு பிரிக்கப்பட்டு நிதி அமைச்சர் சரத் அமுனுகம வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதியின் மிக நம்பிக்கைக்குப் பாத்திரமானவரான அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவே வெளிவிவகார அமைச்சர் பதவிக்கு நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும், அமைச்சுப் பதவியை ஏற்கவும் நேரடியாக அரசியலில் ஈடுபடவும் அவர் மறுத்துவிட்டார்.

இதனைத் தொடர்ந்தே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனக்கு நம்பிக்கையானவரான தனது சகோதரர் அநுரா பண்டாரநாயக்கவை வெளிவிவகார அமைச்சராக நியமித்துள்ளார்.

அதேவேளை, கதிர்காமரின் மறைவினால் ஏற்பட்ட தேசியப் பட்டியல் எம்.பி. பதவிக்கு யாரை நியமிப்பது என்பது பற்றி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. கதிர்காமரின் மனைவியை எம்.பியாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ப[illegible]கொலைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா உள்ளிட்ட தலைவர்களும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இதில் கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## புலி உறுப்பினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாணம் பொலீஸ் நிலைய சிரேஷ்ட அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த்தன கொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கோபி கைதுசெய்யப்பட்டார்.

கொழும்பு நீதிமன்றில் குற்றப்புலனாய்வுப் பொலீஸார் நேற்று அவரை ஆஜர்ப்படுத்தினர். அப்போதே மேலதிக நீதிவான் அவரது விளக்கமறியல் காலத்தை நீடித்தார். (க)

## களமுனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேணல் தீபன்,படைத் தொடக்கப் பயிற்சிக் கல்லூரியின் சிறப்புத் தளபதி கேணல் ஆதவன், மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் விதுசா, சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா, விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கா. வே. பாலகுமாரன் மற்றும் சிறப்புத் தளபதிகள், துறைசார் பொறுப்பாளர்கள் போன்றோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஒ-13)

## பாரிஸில் விபத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்குள் புகுந்து இவர்களை மோதியதாகவும்- கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற வேளையில் பெண்மணியின் கணவர் சற்றுத்தொலைவில் நண்பர் ஒருவருடன் உரையாடிக்கொண்டிருந்ததால் விபத்தில் சிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-13)

## அரச சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு மணிநேரம் நடைபெற்ற இந்தப் பேச்சின்போது, கடந்தவாரம் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளருடன் கிளிநொச்சியில் தாம் நடத்திய பேச்சுகள் குறித்து கண்காணிப்புக் குழுவின் தலைவர் விரிவாக விளக்கியிருக்கிறார்.

போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செம்மையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நேற்றைய பேச்சின்போது விரிவாக ஆராயப்பட்டதாக கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் நேற்று மாலை 'உதயன்' இற்குத் தெரிவித்தார்.

இதேவேளை,போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படவுள்ள பேச்சுகள் குறித்தும் நேற்றைய சந்திப்பில் ஆராயப்பட்டது என அரச சமாதான செயலக வட்டாரங்கள்கூறின. (க)


### 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20 - 06 - 1975

மறைவு 23 - 08 - 2000



அமரர்

**சுப்பிரமணியம் இலங்கேஸ்வரன்**

(இலங்கன்)

ஐந்து ஆண்டுகள் சென்றாலும் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் என்றென்றும் எம்நெஞ்சைவிட்டு அகலாத எமதன்புச் சகோதரரின் நினைவலைகள் மாறவே மாறாது.

குடும்பத்தினர்,

அதிகார் செல்லமுத்து வீதி, மானிப்பாய். (39212)(29-17-12-45)

அன்புச் சகோதரன் சு.முகுந்தன்.

### கணக்கீடு

திரு.N.சதீஸ்

A/L 2006

PAPER CLASS

ஆரம்பம்:

24.08.2005 wed.4 p.m.

mon., fri.4 - 6 p.m.

N.C.A.

K.K.S. Road, Inuvil.

5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை முடித்துக்கொண்ட மாணவர்களே!

Online Classes.

விரும்பிய நேரத்தில் கற்கலாம்.

உங்களுக்காக நாம் விசேட கணனிக் கற்கைநெறிகளை ஆரம்பித்துள்ளோம்.

Start - 01/ 09/ 2005

| Levels | Age Level | Duration (hours) 03 Months | Monthly Fees |
|---|---|---|---|
| Level - 1 | 7to8 | 2 hrs x 2 days per week | Rs. 500/= |
| Level - 2 | 9+ | 2 hrs x 2 days per week | Rs. 500/= |
| Level - 3 | 10+ | 2 hrs x 2 days per week | Rs. 500/= |

C.B Computer Academy

T.P No. 021-4590291 Station Road, Kondavil.


## மரண அறிவித்தல்

### வைரமுத்து செல்லத்துரை



இருபாலையைப் பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து செல்லத்துரை அவர்கள் நேற்று (22.08.2005) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து -பார்வதி தம்பதியரின் அன்பு மகனும் மகேஸ்வரியின் பாசமிகு கணவரும் றஞ்சினி (பூநகரி), நிசாகரன் (பிரான்ஸ்), சிவதர்சினி (ஜேர்மனி), பாஸ்கரன் (பிரான்ஸ்), பிரேமினி, பிரபாகரன் (பிரான்ஸ்), கிருபாகரன் ஆகியோரின் அன்புமிகு தந்தையும் செல்வம் நவநீதன் (ஜேர்மனி), சுரேஸ்குமார் (ஸ்ரீமுருகன் வெதுப்பகம்), சோபிதா (பிரான்ஸ்), ராதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தீபா, ஜெனார்த்தன், சோபன், நிந்துஜன், வனஜா, நவதர்சன், தர்சிகா, பிறின்சிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணியளவில் அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மலைவேம்படி ஒழுங்கை, சுதுமலை கிழக்கு, மானிப்பாய்.* (39213)(29-17-12-45)

தகவல்: செ. கிருபாகரன் (மகன்), செ.சுரேஸ்குமார் (மருமகன்).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.